பக்கங்கள்: பதினாறு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 தை 15 வியாழக்கிழமை (28.01.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 063

# மஹிந்த வெற்றிவாகை!

# 58% வாக்குகளுடன் சாதனை!!

## சரத் 40 சதவீதம் பெற்றுப் பின்னடைவு



கொழும்பு, ஜனவரி 28

**நேற்றுமுன்தினம் நடைபெற்ற இலங்கையின் ஆறாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியைத் தெரிவுசெய்யும் தேர்தலில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 60 லட்சத்து 15 ஆயிரம் வாக்குகளைப் பெற்று பெருவெற்றி ஈட்டினார். யாரும் எதிர்பாராத வகையில் 57.88 சதவீத வாக்குகளை இந்த் தேர்தலில் சுவீகரித்து அவர் சாதனை படைத்தார்.**

*ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்குப் போட்டியாக எதிர்க்கட்சிகளின் சார்பில் நிறுத்தப்பட்ட பொதுவேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகா, இத்தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு கடும் போட்டியாளராக விளங்குவார் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அந்த எதிர்பார்ப்பு புஸ்வாணமாயிற்று. அவரால்,40.15 சதவீத வாக்குகளையே - சுமார் 41 லட்சத்து 73 ஆயிரம் வாக்குகளையே - சுவீகரிக்க முடிந்தது.*

தென்னிலங்கை மக்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு திரண்டு வாக்களித்து அவருக்கான தமது ஆதரவை வெளிப்படுத்தினர்.

தமிழ்பேசும் மக்கள் செறிந்து வாழும் பிரதேசம் எங்கும் அவர்களின் ஆதரவு சரத் பொன்சேகாவுக்கு அமோகமாகக் கிடைத்துள்ளது. ஆனால், சிறுபான்மையினரின் வாக்குகள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ

(16ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகா நீதிமன்றம் செல்ல முடிவு

கொழும்பு, ஜன.28

ஜனாதிபதித் தேர்தல் முடிவினை ஏற்றுக்கொள்ள மறுத்துள்ள எதிர்கட்சிகளின் பொது வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகா நீதி மன்றில் தாம் நீதி கோரப் போகிறார் எனத் தெரிவித்துள்ளார்.

கொழும்பு சினமென் லேக் ஹோட்டலில்

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஒரே பார்வையில் தேர்தல் முடிவுகள்

| வேட்பாளர் | வாக்குகள் | வீதம் |
|---|---|---|
| 01.மஹிந்த ராஜபக்ஷ-ஐ.ம.சு.கூ | 6,015,934 | 57.88% |
| 02.சரத்பொன்சேகா-பு.ஜ.மு | 4,173,185 | 40.15% |
| 03.மொகமட் இஸ்மாயில்-ஜ.ஐ.தே.மு. | 39,226 | 0.38% |
| 04. அச்சல அசோக சுரவீர-ஜா.ச.பெ. | 26,226 | 0.22% |
| 05.சன்ன ஜானக சுன்சிறி கமகே-ஐ.ஜ.மு. | 23,290 | 0.18% |
| 06.டபிள்யூ.வி.மகிமன் ரஞ்சித்-சுயேச்சை | 18,747 | 0.14% |
| 07.பணாகொடை டி.பி.எஸ்.அனுர லியனகே-ஸ்ரீ.தொ.க. | 14,220 | 0.09% |
| 08.சரத்மன்மேந்திரா-ந.சி.உ. | 9,684 | 0.09% |
| 09.எம்.கே.சிவாஜிலிங்கம்-சுயேச்சை | 9,682 | 0.09% |
| 10.உக்கு பண்டா விஜேக்கோன்-சுயேச்சை | 9,381 | 0.09% |
| 11.லால் பெரேரா-எம்.தே.மு. | 9,353 | 0.08% |
| 12.ஸ்ரீதுங்க ஜெயசூரிய-ஐ.சோ.க. | 8,352 | 0.07% |
| 13.விக்கிரமபாகு கருணாரத்ன-இ.மு. | 7,055 | 0.06% |
| 14.ஐ.எம்.இலியாஸ்-சுயேச்சை | 6,131 | 0.04% |
| 15.விஜே டயஸ்-சோ.ச.க. | 4,195 | 0.03% |
| 16.சனத் பின்னடுவ-தே.மு. | 3,523 | 0.03% |
| 17.மொஹமட் முஸ்தபா-சுயேச்சை | 3,134 | 0.03% |
| 18.வண. பத்ர முல்ல சீலாரத்ன தேரர்-ஜ.பெ. | 2,770 | 0.03% |
| 19.சேனரட்ண டி சில்வா-தே.ஐ.மு. | 2,620 | 0.03% |
| 20.அருணா டி சொய்ஸா-று.ஜ.க. | 2,618 | 0.02% |
| 21.உபாலி சரத் கொங்ககே-ஐ.தே.மா.மு | 2,260 | 0.02% |
| 22முத்து பண்டா தேமினிமுல்ல-ஒ.வா.ஓ.ர.ச. | 2,007 | 0.02% |
| செல்லுபடியான வாக்குகள் - | 10,393,613 | 99.03% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் - | 101,838 | 0.97% |
| அளிக்கப்பட்ட வாக்குகள் - | 10,495,451 | |
| பதிவு செய்யப்பட்ட வாக்குகள் - | 14,088 ,500 | |

(மேலும் விவரங்கள் 13 ஆம் பக்கத்தில்)

## தனிமனிதராக ஹோட்டலை விட்டு நேற்று வெளியேறினார் பொன்சேகா!

கொழும்பு, ஜன. 28

கொள்ளுப்பிட்டி சினமன் ஹோட்டலில் நேற்றுமுன்தினம் முதல் தங்கிருந்த பொன்சேகாவை இராணுவத் தரப்பு நேற்றுக்காலை முதல் வெளியில் வரமால் தடுத்துவைத்திருந்த நிலையில், நேற்று இரவு அவர் அங்கிருந்து வெளியேறித் தமது வீட்டுக்குச் சென்றார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தமக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் வாகனங்கள் உட்பட அனைத்தையும் அரசு விலக்கிக் கொண்டுள்ளது என அவர் ஊடகங்களுக்குத் தகவல் தெரிவித்துள்ளார். இவ்வாறு தமது பாதுகாப்பு நீக்கப்பட்டிருக்கின்றமை தமது உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் நிலையை ஏற்படுத்தியுள்ளது எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

தனிமனிதராக எவ்வித பாதுகாப்புமின்றி நேற்று இரவு ஹோட்டலை விட்டுப் புறப்பட்ட பொன்சேகாவின் கார் சோதனையிடப்பட்டது எனவும் தெரிவிக்கப்படுகிறது. (அ-சி)

(முன்னர் வந்த செய்தி 16 ஆம் பக்கத்தில்)

## தம்மை ஓய்வுபெற அனுமதிக்குமாறு தேர்தல் ஆணையாளர் பகிரங்க வேண்டுகோள்

கொழும்பு, ஜன.28

ஜனாதிபதித் தேர்தல் பிரசார காலத்தின்போது அரச ஊடகங்களும் அரச நிறுவனங்களும் தன்னைப் புறக்கணித்த விதம் குறித்து ஏமாற்றம் வெளியிட்டுள்ள தேர்தல் ஆணையாளர் தன்னை இப்பதவியிலிருந்து ஓய்வு பெறுவதற்கு அனுமதிக்குமாறு பகிரங்கமாக வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்றுத் தேர்தல் முடிவுகளை உத்தியோகபூர்வமாக அறிவித்த பின்னர் உரையாற்றுகையில் இதனைக் குறிப்பிட்ட அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஜனாதிபதித் தேர்தல் பிரசார காலத்தில் அரச ஊடகங்கள் செயற்பட்ட விதம் குறித்து நான் ஏமாற்றமடைந்துள்ளேன்.

எனது அறிவுறுத்தல்களை அரச நிறுவனங்களின் தலைவர்கள் புறக்கணித்த விதமும் ஏமாற்றமளித்தது.

2010 ஆம் ஆண்டில் ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னரும் பதவியில் இருப்பது பொருத்தமானது என நான் கருதவில்லை.

தேர்தல் ஆணையாளராகப் பணியாற்றும்வேளை பல தரப்பாலும் தரப்பட்ட அழுத்தங்களை என்னால் தாங்க முடியவில்லை.

என்னை விரைவில் இந்தப் பணியிலிருந்து ஓய்வுபெறுவதற்கு அனுமதிக்க வேண்டும் -என்றார். (அ-சி)

வெள்ளிவிழா ஆண்டில் கால் பதித்துள்ளோம்

1985 - 2010

கலாலயா 25

பயிற்சியகம்

பெருமாள் கோயிலுக்கு அண்மையில், யாழ்ப்பாணம்.

மகளிருக்கான சான்றிதழ் பயிற்சிகள்

புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன : 30-01-2010 சனிக்கிழமை, 01-02-2010 திங்கட்கிழமை

✲ கேக் ஐசிங், ✲ உணவு தயாரித்தல் ✲ Fabric வர்ணம் தீட்டுதல்

✲ கை வேலை ✲ பூ வேலை ✲ Saree Work

✲ கூந்தல் அலங்காரங்கள் மேற்படி வகுப்புக்கள் வார நாட்களில் மட்டும் நடைபெறும்.

✲ Facials (முக அழகுக்கலைகள்) மணப்பெண் அலங்காரங்கள், Manicure, Pedicure தலைமுடி சீர்செய்தல், Saree Work. வாரநாள்/சனி ஞாயிறு இரு பிரிவுகள்.

✲ உடை தயாரித்தல் (. . . . கலை) சான்றிதழ் பயிற்சிகள்

✲ இருவாரகால சான்றிதழ் . . . பிளவுஸ், சுரிதார், கவுண், சட்டை, Skirts தைத்தல் பயிற்சிகள். ☛ வாரநாள்/சனி ஞாயிறு இரு பிரிவுகள்.

*மேலும் விபரங்களை பி.ப 2.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேற்றுத் தேர்தல் செயலகத்தில் முடிவுகள் அறிவிக்கப்பட்ட வேளை .....



ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெற்றிப் புன்னகையுடன் தேர்தல் ஆணையாளரின் மண்டபத்தில்......



பௌத்த குருமார்களை வணங்கி ஆசிபெறுகிறார்...



அமைச்சர்கள் மாலை சூட்டி வரவேற்கின்றனர் .......



தேர்தல் முடிவுகளை தமது மூத்த அதிகாரிகள் சகிதம் ஆணையாளர் திஸநாயக்க அறிவிக்கும்போது.....



முடிவுகள் வெளியிடப்பட்ட பின்னர் மகிழ்ச்சி மேலிட ஆணையாளருக்கு கைலாகு கொடுக்கிறார்...



தேர்தல் ஆணையாளர் அலுவலகத்திற்கு வெளியே திரண்டிருந்த ஆதரவாளர்கள் ஜனாதிபதியை வரவேற்கும் போது .....

# கல்விமாணிக் கற்கை நெறிக்கு 220மாணவர் தெரிவாகியுள்ளனர்

யாழ்ப்பாணம், ஜன.28

தேசிய கல்வி நிறுவனத்தின் கல்வி மாணி பட்டநெறி 2009/2010 கல்வி யாண்டுக்கு 220மாணவர்கள் யாழ். மாவட்டத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் 161மாணவர்கள் யாழ். தேசிய கல்வியியற்கல்லூரி நிலையத்திற்கும் 59மாணவர்கள் யாழ்.மத்திய கல்லூரி நிலையத்திற்கும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இரண்டு நிலையங்களிலும் புதிய மாணவர்களுக்கான விரிவுரைகள் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9மணிக்கு ஆரம்பமாகும் என்றும் தேசிய கல்வி நிறுவகத்தின் கல்வி மாணிப்பட்ட நெறி இணைப்பாளர் எஸ்.ஆர். சத்தியேந்திரம் பிள்ளை அறிவித்துள்ளார்.

தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர் விவரம் வருமாறு:

**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரி**

ப.பத்மகாந்தன், த.வாமதேவன், சி.ராஜேஸ்வரன், க.சசிகலா, அ.தாரணி, சூ.மேரிஏன்சல், பொ.மதி வண்ணன், ப.சசிக்குமார், ர.பொன்மதி, ச.பிரேமவல்லி, சி.ரஜனி, ம.ஜஸ்ரின் பேனாட், சி.கௌசல்யா, ந.சத்தியமலர், ச.முகுந்தன், க.நந்தகுமார், சி.நவகாந்தன், கு.நிஷாந்தன், ப.சசிக்குமார், ச.தயாபரி, வ.சிவாஜினி, தி.சிவகாசன், சி.சுபந்தினி, யோ.வாசுகி, கீ.சுந்திரமோகன், ச.சுபாசினி, செ.ஜெயகாந்தன், சி.காயத்திரி, தி.ஜீவரட்ணம், தி.முத்தரசன், பெ.வெண்நிலா, ஜெ.மைதிலி, யோ.லிங்கேஸ்வரன், சு.மகாதேவா, ப.சத்தியநாதன், செ.கோகிலவர்தனி, தே.கருணாவதி, சு.யோகலட்சுமி, தே.தேவமோகன், சி.திருச்செல்வம், வ.துளசி, வே.வசந்தமலர், வே.ரேணுகா, கி.விஜயகுமார், வி.குமுதா, ர.கபாலினி, ச.ஜெயந்தி, ந.தணவந்தி, சு.கவிதா, சி.மாலினி, வ.தேன்மொழி, உ.நாகநந்தினி, ந.மயூரன், ச.சத்தியதேவி, கே.ஜெயந்தி, ம.சந்திரமோகன், யோ.சுகந்தன், ந.சுதாகர், தி.ஜெயதர்ஷினி, அ.பிரகதீஸ், ர.ராதா, ச.நளினி, சொ.கிருஸ்ணதாஸ், ஜோ.சுஜதினி, கு.விக் னேஸ்வரன், செ.செல்வவேல், ந.நந்தீஸ்சன், ர.ராஜ்குமார், து.பகிரதன், வை.முருகதாஸ், பி.தோ.எடிசன், ச.ஜெயச்சித்திரா, க.மணிவண்ணன், நெ.மேரிஜோசி, த.ரஞ் சன், ச.அன்னலிங்கம், ம.சிறிகாந்தன், த.நாகமணி, ப.திருச்செல்வி, ந.கஜேந்திரன், சி.மதனராஜன், அ.தேவேந்திரன், கு.உமாகரன், ர.கலைவாணி, ஜீ.தயாளினி, க.ஆதித்தன், சு.சுயிதமலர், கி.திருவேணி, நீ.பிரசாந்தன், சி.சிவரூபி, த.கௌரி, த.சிவாசுஸ்வரி, ந.நவன்ஜன், வீ.ஜெயதீஸ்வரன், வி.டினேஸ், கு.செல்வரஞ்சினி, அ.ரஜீவன், செ.சுதர்சன், கே.கிரிஜா, சி.ஜெயசிறி, சி.தர்மிளா, க.இந்திராணி, பி.பாமா, கு.ரவீந்திரன், இ.பாக்கியநாதன், ந.ரவீந்திரன், க.ஜெயராஜ், கு.சந்திரகுமார், பா.உமாகரன், வி.குகநாதன், க.சுதர்சினி, கி.அம்பிகுமார், ச.பாலமூர்த்தி, சி.பாலச்சந்திரன், கி.தயாளஜெயன், உ.போஜன், இ.சாரங்கன், பா.குணாகரன், கோ.முருகதாஸ், லோ.நந்தினி, வி.தாரணி, ர.ராதிகா, ரா.வினோதினி, ப.பார்த்தீபன், ச.கமலநாதன், ச.தயாளினி, மு.கங்காதரன், க.லதா, கு.காந்தரூபன், க.விஸ்ணுகாந்தன் ஞா.சிவகலா, க,கம்சன், பா.வனஜா, கி.ஜெயரமணன், கா.கிருபா, சி.சிவேஸ்வரி, அ.கருணாகரன், ம.ஜெயந்திமலர், வ.நிகிதன், க.பிரபாகரன், ப.ரவிகுமார், சி.கவிதா, பி.தர்சினி, ந.விஜயகுமார், சு.ஜெயலக்ஷமி, சு.சுதர்சினி, த.விஜிகலா, வ.திருப்பதிராஜன், நி.வத்சலா, ரா.கௌசலா, ச.வினோசிராணி, ச.சசிலதா, செ.நாகநந்தினி, சி.சிவறதீஸ், சி.பத்மினி, க.சுமாலினி, ம.வாசுகி, ம.இந்திராதேவி, சி.நல்லகுமார், ச.உதயகலா, ச.உமாமகேஸ்வரன்.

**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி**

ப.கேசவன், சு.சசிதரன், ஞா.இன்பகரன், ர.ரஞ்சித், த.பார்த்தீபன், த.சிறிமுரளி, நா.விஜயகுமார், சு.சாந்தகுமார், சி.கவிதா, கி.அருட்சோதி, ஜெ.மதிவதனி, சி.அல்றின்குறோஸ், தி.டார்வின் ஜெயசீலன், த.ஜெயலக்சுமி, த.திருமகள், செ.வாசுகி, ரா.வசீகரன், த.மகேஸ்வரி, சி.லோகேஸ்வரி, கா.கிருஸ்ணமோகன், ஆ.பொன்வாசன், வ.பாலமுரளி, ப.சுரேஜினி, பொ.பார்த்தீபன், சி.பரமேஸ்வரன், சூ.சசிகலா, து.கிரு பாகரன், செ.சுகந்தி, த.கிருபாகரன், சி.அருள்நந்தி, பெ.ஜெவ்ரி நிராஷன், பெ.அருள்செல்வன், சை.கிறிஸ்ரியன், மா.அன்பு சிபோஜினி, ந.நந்தன், க.மனோ கரன், அ.சுசிர்ஜினி, ரா.ஜெயந் தன், க.சுதாமதி, த.வசந்தி, செ.கபிரியேல்பிள்ளை, த.சிவபாமா, வி.மயூரதி, பா.கோகி லராணி, சி.சர்மிளா, அ.சொர்ணலிங்கம், லி.சுகந்தினி, க.சிவகுமார், சி.கங்காதரன், அ.வனிதா, ப.சித்திராதேவி, ஜெ.உமாவதி, சு.செல்வேந்திரன், சி.யோகினி, ஜெ.ஜெசிந்தா, ப.ஜெயந்தி, தெ.சிறிதரன், செ.அட்சயலிங்கம், ப.சுரேஸ்குமார்.

## மரண அறிவித்தல்

### திருமதி ஞானலட்சுமி கந்தையா

ஏழாலை மேற்கு, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஞானலட்சுமி கந்தையா நேற்று (27.01.2010) புதன்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இலக்கியகலாநிதி, பண்டிதர் மு.கந்தையாவின் அன்பு மனைவியும் அமரர்களான சீனிவாசகம் - தையல்முத்து தம்பதிகளின் பாசமிகு மகளும், அமரர்களான முத்தர் - அன்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவஞானசுந்தரம், காலஞ்சென்ற சிவானந்தம் மற்றும், ஞானசிவம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுசிலாதேவி, சத்தியபாமா ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற பேரின்பநாதன் மற்றும் கருணாநிதி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் மயூரேசன், பிரதாபன், தர்சினி, சுலக்ஷினி, விஜிதரன், சுபாஷினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.01.2010) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பிற்பகல் 3 மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
தொ. பே : 021 3210425

"சக்தி முற்றம்"
ஏழாலை மேற்கு, சுன்னாகம்.

## மரண அறிவித்தல்

### செல்வி ஐஸ்வர்யா சந்திரகாந்தன்



யாழ். நாவலர் வீதியைச் சேர்ந்த செல்வி ஐஸ்வர்யா சந்திரகாந்தன் (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை தரம் $8^{C}$ மாணவி) நேற்று (27.01.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் சந்திரகாந்தன் (அமரர்), சிறிராணி (காந்தன் கொம்பியூட்டர் சிஸ்ரம், திருநெல்வேலி) தம்பதிகளின் அருமை மகளும், சண்கீரன் (யாழ்.இந்துக் கல்லூரி மாணவன்) விபுசன் (யாழ்.இந்துக் கல்லூரி மாணவன்) ஆகியோரின் அருமைச் சகோதரியும், காலஞ்சென்ற துரையப்பா - மகேஸ்வரி, காலஞ்சென்ற சண்முகநாதன் மற்றும் தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் பேர்த்தியும், இராஜேந்திரன்- ஞானேஸ்வரி (கொழும்பு), சாந்தினி சண்முகநாதன் (லண்டன்) ஆகியோரின் பெறாமகளும், வயறிங் பாலசிங்கம் - கமலாதேவி (அளவெட்டி), சிறிதரன் - சசிகலா (யாழ்ப்பாணம்) ஆகியோரின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.01.2010) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் 331, (257) நாவலர் வீதியிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

331, (257) நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்
தொ.பே.0212227867

தகவல்:
சந்திரகாந்தன் -
சிறிராணி (தாய்)

(74297)

யாழ்மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட முகவர்
FedEx Express
உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள், உணவுப்பொருள்கள், உடுபுடவைகள் மற்றும் VDO பிரதிகள், CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.
குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கப்படும்
விரைவு பாதுகாப்பு நம்பகத்தன்மை
குறைந்த கட்டணத்திலான உள்நாடு வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். T.P. 2227835
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (நல்லூர் ப.நோ.கூ.சங்கம் முன்பாக)
TCH EXPRESS
2B, Nelsan Place, Colombo -06
வாடிக்கையாளரின் நலன்கருதி 10% - 25 % விசேட கழிவு
லண்டன், சுவிஸ், பிரான்ஸ் நாடுகளுக்கு 3 கிலோவுக்கு குறையாத பொதிகளிற்கு 1Kg 550/=ரூபா வீதமும். கனடாவுக்கான 3 கிலோவுக்கு குறையாத 1Kg பொதிகளிற்கு 550/= ரூபா வரையான விசேட சலுகை
ஞாயிறு விடுமுறை தினங்களிலும் சேவைகளை பெற்றுக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்துகின்ற உண்மை

இலங்கையின் ஆறாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல்கள் முடிந்து முடிவுகளும் வெளியாகிவிட்டன.

ஆட்சியிலிருக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே பெரு வெற்றியீட்டித் தனது அதிகாரத்தை உறுதிப்படுத்தியிருக்கின்றார். பலரும் எதிர்பாராத அமோக வெற்றியைத் தென்னிலங்கை மக்கள் அவருக்கு வழங்கி நிற்கின்றனர்.

இனி, அவரது அடுத்த பதவிக்காலம் எவ்வளவு காலத்துக்கு என்ற சர்ச்சை ஆரம்பமாகும் என எதிர்பார்க்கலாம். நேற்று முன்தினம் நடந்த வாக்களிப்பில் தமக்குக் கிடைத்த வெற்றியின் அடிப்படையில் அவரது இரண்டாவது பதவிக்காலம் எப்போது ஆரம்பமாகின்றது, எப்போது அதற்கான பதவியேற்பை அவர் வைத்துக்கொள்ள வேண்டும், எந்தக் காலம் வரை அவரது இரண்டாவது பதவிக் காலம் செல்லும் - என்பன பற்றிய சர்ச்சை இனி இலங்கை அரசியலரங்கில் பிய்த்து உதறப்படும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

இந்தத் தேர்தலுக்கு முன்னரே இந்தப் பதவிக்கால சர்ச்சை பற்றிய 'உதயன்' - 'சுடர் ஒளி' ஆசிரியரின் கேள்விக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே நேரடியாகப் பதிலளித்திருக்கின்றார்.

''இந்தத் தேர்தலில் நீங்கள் வென்றால், அதன்பின் உங்கள் பதவிக்காலம் ஆறு ஆண்டுகள் என்கின்றனர் சிலர், வேறு சிலரோ ஏழு ஆண்டுகள் என்கின்றார் களே....?'' - என்று அவரிடம் கேட்டபொழுது அவர் திடமாக ஒரு பதில் கூறியிருந்தார்.

''ஏன் ஆறு, ஏழு ஆண்டுகள் என்று மட்டும் கூறுகின்றீர்கள்? வேறு சிலர் எட்டு வருடங்கள் என்று குறிப்பிடுவதை மறந்து விட்டீர்களா? அதுபற்றி வெற்றிபெற்ற பின் (உயர்) நீதிமன்றத்தின் சட்ட ஆலோசனையை நான் பெற்று முடிவெடுப்பேன்.'' - என்று அவர் இந்தத் தேர்தலுக்கு சில தினங்களுக்கு முன்னர் குறிப்பிட்டிருந்தார்.

ஆனாலும், கடந்த தடவை 2005 நவம்பர் 19 ஆம் திகதியன்று தமது முதலாவது பதவிக்காலத்தை ஆரம்பித்த ஜனாதிபதி அதை நேரொத்த திகதியான எதிர்வரும் நவம்பர் 19 ஆம் திகதி வரை தற்போதைய முதலாவது பதவிக் காலத்தைத் தொடர்ந்த பின்னர், எதிர்வரும் நவம்பர் 19 ஆம் திகதியை அண்டி வரும் ஒரு தினத்தில் அடுத்த பதவிக்காலத்தை ஆரம்பிக்க வேண்டியிருக்கும் என்கின்றன சட்ட வட்டாரங்கள். இதன்படி அவர் அத்திகதியிலிருந்து ஆறு ஆண்டுகள் - அதாவது இப்பொழுது முதல் சுமார் ஏழு ஆண்டுகள் வரை - பதவியில் நீடிக்க முடியும் எனக் கருதப்படுகின்றது.

நடந்து முடிந்த தேர்தல் சில தெளிவான முடிவுகளை - பெறுபேறுகளை - அரசியல் நிஜங்களை - வெளிப்படுத்தி நிற்கின்றமை கண்கூடு.

வடக்கு, கிழக்கிலும், மலையகத்திலும் தென்னிலங்கையில் சிறுபான்மையினரான தமிழர்கள், முஸ்லிம்கள் வாழுகின்ற பிரதேசங்கள் எங்கும் ஓரிரு தொகுதிகளைத் தவிர ஏனைய அனைத்திலும் எதிரணியின் பொதுவேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவே வென்றிருக்கின்றார்.

இவை தவிர, பெரும்பான்மைச் சிங்களவர்கள் அதிகம் வாழும் தென்னிலங்கை எங்கும் ஆட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ பெருவாரி வாக்குகள் வித்தியாசத்தில் மகத்தான வெற்றி அடைந்திருக்கின்றார்.

தேர்தல் காலத்தில் இடம்பெற்ற முறைகேடுகள், அரச சொத்துக்கள் மற்றும் அரச ஊடகங்கள் அளவுக்கு மீறி துஷ்பிரயோகம் செய்யப்பட்டமை போன்ற - எல்லை மீறிய - தவறுகள் எனக் குற்றச்சாட்டுகள் வெளிப்பட்டிந்தாலும் கூட -

இத்தகைய விடயங்கள் எதிர்காலத்தில் நீதிமன்றப் பரிசீலனைக்கும், ஆய்வுக்கும் உள்ளாகி புதுத் திருப்பங்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் இருந்தபோதிலும் -

இந்தத் தேர்தல் முடிவுகள் ஒரு விடயத்தைத் தெட்டத் தெளிவுபடுத்திவிட்டன.

அது - தமிழர், முஸ்லிம்கள் ஆகிய சிறுபான்மையினரின் அதிக செல்வாக்குப் பெற்ற கட்சிகளோடு சரி சமனான - சமரச - உடன்பாட்டை வைத்திருக்கும் தரப்புகளைத் தென்னிலங்கைச் சிங்கள மக்கள் ஏற்றுக்கொள்ளவே மாட்டார்கள். தென்னிலங்கைப் பெரும்பான்மைத் தரப்பின் ஆணைக்குக் கட்டுப்பட்டு - உட்பட்டு - சிறுபான்மைத் தரப்புகள் செயற்பட முன்வருமானால், அந்தச் சிறுபான்மைத் தரப்பினர் தென்னிலங்கையால் சகித்துக்கொள்ளப் படுவர். அந்தத் தரப்பை அணி சேர்த்திருக்கும் பெரும்பான்மைப் பிரிவு ஏற்று அங்கீகரிக்கப்படும்.

அதாவது, இன்னும் சுற்று விளக்கமாகச் சொல்வதானால், தமிழ்ப்பேசும் மக்களோடு - தமிழ்ப்பேசும் பிரதான தலைவர்களான சம்பந்தரோடும், ஹக்கீமோடும் - உடன்பாடு கண்ட சிங்களத் தலைமையை ஏற்கமுடியாது என்ற கருத்தைத் தென்னிலங்கை தெளிவாகவும், வெளிப்படையாகவும் இத்தேர்தலில் அம்பலப்படுத்தி இலங்கைத் தீவு இன ரீதியில் பிளவுபட்டு நிற்கின்றது என்பதை உறுதிப்படுத்தியிருக்கின்றது.

இந்த வெற்றி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எண்கணித அடிப்படையில் மகத்தானது; விஞ்சியது; நிகரற்றது. ஆனால், வடக்கு, கிழக்கிலும் மற்றும் மலையகத்திலும் உள்ள தமிழ், முஸ்லிம் மக்களின் அங்கீகாரமில்லாமல் - எண்ணுக்கணக்கில் எண்ணிக்கையில் அதிகமான தென்னிலங்கைப் பெரும்பான்மையின் அங்கீகாரத்தினால் மட்டும் - கிடைத்த வெற்றி இது என்பதை அவருக்கு நினைப்பூட்ட விரும்புகிறோம்.

அதாவது, அவரது ஆட்சியைத் தொடர்வதற்கான ஆணை சிறுபான்மையினரிடமிருந்து அவருக்குக் கிட்டவில்லை என்பது வெளிப்படை. அந்த நிலையைப் போக்குவதற்கு, நாட்டின் தலைவர் என்ற வகையில் செயலாற்றி, சிறுபான்மை இன மக்களின் மனதை வெல்வார் என்று எதிர்பார்ப்போமாக.

## முல்லை. வலய ஆசிரியர்கள் எங்கு பணிபுரியினும் சம்பந்தப்பட்ட வலயத்தில்தான் சம்பளம்

### அலுவலகம் தற்போது வவுனியாவில் இயங்குகின்றது

அச்சுவேலி,ஜன.28

முல்லைத்தீவு கல்வி வலயத்தில் கடமையாற்றி தற்காலிக இணைப்பில் யாழ். மாவட்டம் உட்பட வெளி மாவட்டங்களில் கடமையாற்றும் ஆசிரியர்கள் தமது சம்பளக் கொடுப்பனவை முல்லைத்தீவு கல்வி வலயத்துக்கு நேரடியாகச் சென்று பெற்றுக்கொள்ளவேண்டும்.

முல்லைத்தீவு கல்வி வலயம் வவுனியா காமினி மகாவித்தியாலயத்தில் உள்ள மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் பணிமனையில் செயற்படுகிறது. அங்கு ஆசிரியர்கள் சம்பளம் பெற்றுக்கொள்ளலாம்.

இவ்வாறு வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா அறிவித்துள்ளார்.

முல்லைத்தீவுக் கல்வி வலய ஆசிரியர்களின் ஜனவரி மாதச் சம்பளக் கொடுப்பனவு யாழ். மாவட்டத்தில் வைத்து வழங்கப்பட இருப்பது தொடர்பாக நிலவிய கருத்துத் தொடர்பாக அவர் மேலும் தகவல் தருகையில் -

கிளிநொச்சி, துணுக்காய், மன்னார், வவுனியா கல்வி வலயங்களில் கடமையாற்றி இடம்பெயர்ந்த, ஆசிரியர்கள் அனைவரதும் ஜனவரி மாதச் சம்பளம் குறித்து நிரந்தர கல்வி வலயங்களில் வைத்தே வழங்கப்பட்டன. அந்த நிலையில் முல்லைத்தீவு கல்வி வலய ஆசிரியர்களின் சம்பளக் கொடுப்பனவு மட்டும் யாழ்ப்பாணத்தில் வைத்து வழங்குவது என்பது முரண்பாடான செயல்முறையாகும்.

முல்லைத்தீவு கல்வி வலய ஆசிரியர்களின் கொடுப்பனவு வவுனியாவில் இயங்கும் முல்லைத்தீவு கல்வி வலயத்தில் வைத்தே வழங்கப்படவுள்ளது.

முல்லைத்தீவு கல்வி வலய ஆசிரியர்கள் அங்கு தமது விவரங்களை பதிவு செய்து தமது சம்பளக் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளலாம்.

கடந்தகால யுத்த சூழ்நிலையால் பல்வேறு பாதிப்புக்களுக்கு உள்ளாகிய வன்னி மாணவர்களின் கல்வியை மேல் நிலைப்படுத்த வேண்டியது மிகமிக அவசியமானது. அந்த வகையில் வன்னி மாவட்டத்தில் தற்போது உள்ள ஆசிரியர் ஆளணி தொடர்பான விவரம் திரட்டப்பட வேண்டியது அவசியமாகும்.

ஆசிரியர்கள் தமது நிரந்தரக் கல்வி வலயங்களில் தமது நியமனப் பாடங்கள் தொடர்பான தகவல்களை வழங்கி பதிவு செய்யவேண்டியது அவசியமாகும். வன்னியில் கடமை புரியும் ஆசிரியர்கள் தமது உண்மை நிலை தொடர்பாக உரிய காரணங்களுடன் மேன்முறையீடு செய்து தமக்குப் பொருத்தமான இடங்களில் கடமை புரியலாம்- என்றார். (ஒ-11)

## குடாநாட்டில் வெடி கொளுத்தி ஆரவாரம்

யாழ்ப்பாணம், ஜன.28

ஜனாதிபதித் தேர்தலில் பெரு வெற்றி ஈட்டிய மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவித்து குடாநாட்டில் வெடி கொளுத்தி மகிழ்ந்தனர் மக்கள்.

நேற்று பிற்பகல் 4.45 மணிக்கு ஜனாதிபதித் தேர்தல் முடிவு உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டதையடுத்து பல பகுதிகளிலும் மக்கள் வெடிகள் கொளுத்தி மகிழ்ச்சி ஆரவாரம் செய்ததை அவதானிக்க முடிந்தது. (ஒ-1-207)

## புங்குடுதீவு மடத்துவெளிச் சந்தியில் மீண்டும் நேற்று முதல் சோதனை

புங்குடுதீவு, ஜன.28

புங்குடுதீவு மடத்துவெளிச் சந்தி ஊடாக வாகனங்களில் பயணிப்போரைச் சோதனை செய்யும் நடவடிக்கைகளை மீண்டும் நேற்றுப் படையினர் ஆரம்பித்திருந்தனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தீவுப் பகுதிக்குச் செல்வோர் வழமையாக புங்குதீவு மடத்துவெளிச் சந்தியில் வைத்து சோதனை செய்யப்பட்டு வந்தனர்.

எனினும் ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்பு வந்ததையடுத்து அந்த சோதனை நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்தன.

நேற்று மீண்டும் சோதனை நடவடிக்கைகள் ஆரம்பமாகி உள்ளன.

அதேவேளை-

நயினாதீவுக்குச் செல்பவர்கள் அடையாள அட்டைகளை குறிகாட்டுவான் இறங்குதுறையில் படையினரிடம் கையளித்துவிட்டுச் செல்லும் நடைமுறையும் நேற்று மீண்டும் அமுலுக்கு வந்துள்ளது. (ஒ-188)

## 'லங்கா ஈ நியூஸ்'க்கு இலங்கையில் தடை

கொழும்பு,ஜன.27

'லங்கா ஈ நியூஸ்' இணையத் தளத்தை இலங்கையில் உள்ளவர்கள் பார்வையிட முடியாத வகையில் தடை செய்யப்பட்டுள்ளது என அந்த இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

அந்த இணையத்தளத்திற்கான இணைப்பு இலங்கை ரெலிகொம் நிறுவனத்தினால் வழங்கப்பட்டு வந்தது. இணையத்தளத்தை பார்வையிட முடியாதவாறு தடுக்குமாறு நேற்றுமுற்பகல் 10 மணியளவில் உயர்மட்டத்திலிருந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டது எனவும் இது குறித்து தேர்தல் ஆணையாளரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது எனவும் இணையத்தளத்தினர் குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன் தடையை நீக்குமாறு ரெலிக்கொம் நிறுவனத்தின் தலைவரும், ஜனாதிபதியின் செயலாளருமான லலித் வீரதுங்கவிடம் எழுத்து மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையில் உள்ள 85 வீதமானவர்கள் தமது இணையத்தளத்தை பார்வையிடுகின்றனர் எனவும், இது தமது பார்வையாளர்களுக்கு ஏற்படுத்திய அநீதி எனவும் 'லங்கா ஈ நியூஸ்' இணையத்தளத்தின் நிர்வாகிகள் குறிப்பிட்டுள்ளனர். (அ-சி)

## ஜி.சீ.ஈ. சாதாரணதர பரீட்சையின் இரண்டாம் கட்ட மதிப்பீட்டுப் பணி

### யாழ். இந்து மகளிர் கல்லூரியில்

யாழ்ப்பாணம், ஜன.28

கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. (சாதாரண) தரப் பரீட்சையின் இரண்டாம் கட்ட மதிப்பீட்டுப் பணிகள் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளன.

இந்த மதிப்பீட்டுப் பணிக்கு நியமிக்கப்பட்ட பிரதம பரீட்சகர், மேலதிக பிரதம பரீட்சகர், உதவிப் பரீட்சகர்,கணிதப் பரீட்சகர் ஆகியோர் தமது வரவை இன்று காலை 8.30 - பிற்பகல் 4 மணிக்கு இடையில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நேரடியாகவோ அல்லது 0776914191 அல்லது 0212222346 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் மூலமோ உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். அத்தோடு 13 கணிதப் பரீட்சகர்களும் நியமிக் கப்பட்டுள்ளனர் என்று பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

சம்பந்தப்பட்டவர்கள் தமது வரவை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறும் அவர் அறிவித்துள்ளார்.

அவர்கள் விவரம் வருமாறு:-

பி.மணிவதனன்(கரவெட்டி), என்.சதீஸ்கரன் (கோப்பாய்), எஸ்.தேவானந்தராசா(இருபாலை), திருமதி வி.தேவதர்சினி (மானிப்பாய்), திருமதி எஸ்.கோபால கிருஸ்ணன் (புத்தூர்), ரி.ஜெகதீஸ்வரன் (சுன்னாகம்), செல்வி வி.கிருசாளினி (யாழ்ப்பாணம்), எஸ்.செந்தில்குமரன் (கொக்குவில்), கே.இராசகுமார், என் ஜெயதீபன், எஸ்.கே.தனஞ்செயன். (ஒ-1)

## நாளை

| | | |
|---|---|---|
| தை | 16 | 29.01.2010 வெள்ளிக்கிழமை |
| திதி: | | சதுர்த்தசி பி.ப. 03.11 வரை |
| நட்சத்திரம்: | | புனர்பூசம் பி.ப. 3.10 வரை |
| சுபநேரம்: | | 06.36-08.06 வரை |
| ராகுகாலம்: | | 11.06-12.36 வரை |

பூரணை விரதம்

## பருத்தித்துறை,உரும்பிராய் பஸ்சேவை: அரச ஊழியர், மாணவர் தெரிவிக்கும் கவலை

நல்லூர், ஜன.28

பருத்தித்துறை,உரும்பிராய் பகுதிகளைச் சேர்ந்த அரச உத்தியோத்தர்கள், யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோர் 764 இலக்க பஸ் சேவை சீராக இடம்பெறாத காரணத்தால் தாம் செல்லவேண்டிய இடங்களுக்கு உரிய நேரத்தில் சமுகமளிக்க முடியாது இருப்பதாகவும் கவலை தெரிவிக்கிறார்கள்.

பருத்தித்துறையில் இருந்து காலை 6.45 மணிக்கும் பின்னர் 7.15 மணிக்கும் இரண்டு பஸ்கள் முன்னர் சேவையில் இருந்ததாகவும் இந்த இரண்டு சேவைகளும் தற்போது நடைபெறுவதில்லை என்றும் கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக இந்த நிலை தொடர்வதாகவும் கூறும் அரச உத்தியோத்தர்கள் சில சமயங்களில் 7 மணிக்குப்பிறகே விரும்பிய நேரத்தில் ஒரு பஸ் வரும் என்றும் கூறுகிறார்கள்.

தனியார் பஸ் வண்டிகளின் சேவையும் இப் பாதையில் இல்லை எனவும் பருவகாலச் சீட்டு வைத்திருக்கும் தாங்கள் பஸ் சேவை ஒழுங்கற்றுக் காணப்படுவதால் மிகவும் கஷ்டத்துக்கு உள்ளாவதாகவும் கூறுகிறார்கள்.

பிற்பகலில் 3.30 மற்றும் 4.30 மணிக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து செல்லும் பஸ்களும் சில சமயங்களில் பிற்பகல் 5-6 மணிக்கு விடப்படுவதாகவும் அரச ஊழியர்கள், பல்கலைக்கழக மாணவர்களின் நலனைக் கவனத்தில் எடுத்து காலையில் இருதடவைகளும் மாலையில் இருதடவைகளுமாக சேவை நடத்த ஏற்பாடுகள் செய்ய வேண்டும் எனவும் கூறுகிறார்கள். வடமராட்சியைச் சேர்ந்த அரச உத்தியோத்தர்கள்,பல்கலைக்கழக மாணவர்களுக்கு இது ஒரு முக்கியமான சேவை எனக்குறிப்பிடும் அவர்கள் கொழும்புக்கு பஸ் சேவைகள் இடம்பெற வேண்டியதுதான், அதற்காக உள்ளூர் சேவைகளில் முழுமையான பாதிப்புகள் இடம்பெறாமால் சம்பந்தப்பட்டவர்கள் பார்த்துக்கொள்ளவேண்டும் என்கிறார்கள்.

(4-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## இராமநாதன் பூபாலரட்ணம்

**(நீர்ப்பாசனப் பொறியியலாளர், திருகோணமலை)**

காரைநகரைப் பிறப்பிடமாகவும் நல்லூரை தற்காலிக வசிப்பிடமாகவும் திருகோணமலையை நிரந்தர வதிவிடமாகவும் கொண்டிருந்த இராமநாதன் பூபாலரட்ணம் அவர்கள் நேற்று (27.01.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமநாதன் மற்றும் செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற மகாதேவன் மற்றும் பொன்னம்மா தம்பதியினரின் மருமகனும் பத்மலோஜினியின் (ஆசிரியை, சென். ஜோசப், திருகோணமலை) பாசமிகு கணவரும், ரமணுஷா (Non Violent Communication, Narampitiya), பிரணதீஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற ஞானசேகரம் மற்றும் சோமசுந்தரம், கனகசபை ஆகியோரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கனகம்மாவின் பெறாமகனும், தர்மகுலசிங்கம், (பவித்திரா, கோல்ட் ஹவுஸ் கொச்சிக்கடை), ஜெகதீஸ்வரி, புஸ்பராணி (ஆசிரியை, யாழ்.திருக்குடும்பக் கன்னியர் மடம்), யோகேஸ்வரன் (ஜெகன் மோட்டோஸ், கிளிநொச்சி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், கமலநாதன் (ஜெகம் நகையகம், கிளிநொச்சி), திருஞானசம்பந்தன் (ஆசிரியர், யாழ்.மத்தியகல்லூரி), நந்தினி, திரு.திருமதி சிவசுப்பிரமணியம் (விமாக்ஸ் Printers, கொழும்பு), ராஜேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.01.2010) வியாழக்கிழமை திருகோணமலையில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்,
திருகோணமலை.
தொ.பேசி: 0262220599

ப.திருஞானசம்பந்தன்
(மைத்துனன், ஆசிரியர், யாழ்.மத்தியகல்லூரி)
(94287)

## திருமதி சிவயோகசுந்தரி கணேசமூர்த்தி

*(சிவமணி)*



நந்தாவில், கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிவயோகசுந்தரி கணேசமூர்த்தி அவர்கள் 25.01.2010 (திங்கட்கிழமை) காலை சிவபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-நாகேஸ்வரி தம்பதிகளின் அன்புப் புதல்வியும், அமரர் கணேசமூர்த்தி (சட்டத்தரணி) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம்-பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், சுந்தரேசன் (கனடா), கேதீசன் (அமரர்), சிவகௌரி (அமரர்), காயத்ரி (நிகழ்ச்சித்திட்ட உதவியாளர், வேலணை பிரதேச சபை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கிருஷ்ணாளின் (கனடா) அன்பு மாமியாரும், சிவயோகராஜா (அமரர்), சிவமோகினி (U.K.), சிவமனோகரி (U.K.) ஆகியோரின் அன்புச் சகோதரியும், அருளானந்தன் (U.K.), ஆனந்தகுமாரசாமி (U.K.) ஆகியோரின் அன்பு மைத்துனியும், டிப்தியின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.01.2010) வியாழக்கிழமை மு.ப. 10மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12மணியளவில் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நந்தாவில்,*
*கொக்குவில்.* (C/564473)

*தகவல்,*
க.சுந்தரேசன் (மகன்).

# மக்கள் கட்சி நன்றி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.28

ஜனாதிபதியின் மாபெரும் வெற்றிக்காக வாக்களித்த யாழ்ப்பாணம் மற்றும் வன்னி வாழ் மக்களுக்கு ஸ்ரீலங்கா மக்கள் கட்சி யாழ்.-வன்னி மாவட்ட பிரதான இணைப்பாளர் திலக் குமாரஉடுகம நன்றி தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில்:

வளமான எதிர்காலத்தை நோக்கிய எமது பயணத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினது வெற்றியை உறுதி செய்வதில் எங்களுடன் இணைந்து அவருக்கு தங்களின் பொன்னான வாக்குகளை அளித்தது பெரு மகிழ்ச்சி அளிக்கிறது- என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ)


### வீடு வாடகைக்குத் தேவை

மருதனார் மடம், இணுவில், சுன்னாகம், உரும்பிராய், உடுவில், மானிப்பாய், ஆகிய பிரதேசங்களுக்கு உட்பட்ட பகுதியில் 3 பேர் வசிக்கத்தக்க வீடு வாடகைக்கு தேவை.

தொடர்பு:0779846318 (94294)

### தவறிவிட்டது

45, விபுலானந்தர் வீதி கொழும்புத்துறை எனும் விலாசத்தை உடைய P.பஞ்சலிங்கம் என்பவரது அடையாள அட்டை (360540162V) மற்றும் மத்தியஸ்தர் சபை டயறி மற்றும் ஆவணங்கள், விமானப் படை அடையாள அட்டை என்பன அடங்கிய கைப்பை மாம்பழம் சந்தி விபுலானந்தர் வீதிக்கு இடைப்பட்ட குழலில் தவறிவிட்டது.

தொடர்பு:- 021 222 6719
சன்மானம் வழங்கப்படும் (94292)

### அபிவிருத்தி இணைப்பாளர், கிறபிக் டிசைனர்கள் தேவை

தேசிய அபிவிருத்திச் சேவையில் ஈடுபட்டு வரும் எமது நிறுவனத்தின் ஊடாக செயற்படுத்தப்பட்டு வரும் வடக்கின் அபிருத்தி புனர் நிர்மாண வேலைத் திட்டத்திற்கு, அபிவிருத்தி இணைப்பாளர் மற்றும் கிறபிக் டிசைனர்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து தேவைப்படுகிறார்கள். அத்தோடு தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கில மும் மொழிகளிலும் தேர்ச்சி பெற்றவர்களும் தேவைப்படுகின்றார்கள். வயது எல்லை 20- 30 வரையான ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம். நேர்முகப்பரீட்சை ஜனவரி 28, 29, 30, 31ஆம் திகதிகளில் நடைபெறும்.

World Wide Creation Development Center,
இல: 556, கண்டி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்:- 0774027537, 0718244134, 0215670042 (94289)

### வாடகைக்கு

வீடு வாடகைக்குக் கொடுக்கப்படும்.
தொடர்பு: கனகரத்தினம் சாந்தி,
இணுவில் றோட்,
01ஆம் குறுக்குத்தெரு, மானிப்பாய்.
T.P;- 0778329619, 0772765084 (94290)


# மரண அறிவித்தல்கள்

## சுப்பையா சந்திரசேகரம்.



புத்தூர் மேற்கு, புத்தூரைப் பிறப்பிடமாகவும் சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா சந்திரசேகரம் நேற்று (27.01.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா-வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் புதல்வனும் காலஞ் சென்றவர்களான இராமலிங்கம்-மீனாட்சிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும், நல்லபிள்ளையின் அன்புக் கணவரும், விசாலாட்சி (சரசாலை), காலஞ்சென்ற நடராசா (புத் தூர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், புனிதா (தொழில் திணைக்களம், யாழ்ப்பாணம்), மகிந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், செந்தூரனின் (தபால் அலுவலகம், சாவகச்சேரி) மாமனாரும், அனோஜனின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.01.2010) வியாழக்கிழமை நன்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சிறுப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி. (94293) ச.மகிந்தன் (மகன்)

## முருகேசு சிவலிங்கம் *(சிவம்)*



நல்லூர், வைமன் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு சிவலிங்கம் நேற்று (27.01. 2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு-பூரணம் தம்பதியரின் அன்பு மகனும், புஸ்பராணியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான கந்தையா- தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், சிவாதர், சிந்துஜா, கரிகரன், செவ்பிரகன், ஆரணி ஆகியோரின் அன்புத் தந்தையும், தில்லைநாயகி, தயாபரன், சிவானந்தம், நித்தியலட்சுமி, கலைமகள், குருநாதன், நடேசன், சத்தியபாமா ஆகியோரின் அன்புச் சகோதரனும், நல்லநாதன், கனகசபை, நல்லகுருநாதன், சற்குணராஜா ஆகியோரின் மைத்துனரும், லோஜினி, சம்மியா, வாசுகி, ஐஸ்வரியா ஆகியோரின் சிறிய தகப்பனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.01.2010) வியாழக்கிழமை பி.ப 4மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

12/4, வைமன் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (94282)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி பொன்னுத்துரை சின்னத்தங்கம்

(தெய்வானைப்பிள்ளை)



பலாலி கிழக்கு, வசாவிளானைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னுத்துரை சின்னத்தங்கம் நேற்று முன்தினம் (26.01.2010) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி-பொன்னு தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லையா-பொன்னு தம்பதியரின் மருமகளும், பொன்னுத்துரையின் அன்பு மனைவியும், ஐங்கரன் (லண்டன்), பரணீதரன் (ஈசன்), கிரிசா, கிருபானந்தி, யசீகரன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், உமாரதி(லண்டன்), லலிதாதேவி, தில்லைநாதன், வசந்தகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும், வினூஷன் (லண்டன்), துர்க்காயினி (லண்டன்), கவிஷணா, விகாஸ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.01.2010) வியாழக்கிழமை மு.ப. 10மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தீத்தன்குளம் இந்து மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அச்சுவேலி, தெற்கு.*
*அச்சுவேலி.*
T.P. 0217911930 (94288)

*தகவல்,*
*குடும்பத்தினர்.*

## சிதம்பரப்பிள்ளை சீவரெத்தினம்

**(ஓய்வுபெற்ற ஆசிரியர், சன்மார்க்க வித்தியாலயம்)**



சிறாம்பியடியைப் பிறப்பிடமாகவும், அம்மன் வீதி, கந்தர்மடத்தை வதிவிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை சீவரெத்தினம் நேற்று (27.01.2010) புதன்கிழமை இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவம்.

39/04A, அம்மன் வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்

தகவல்:
சி.நவரெட்ணம் (சகோதரன்).
(94223)


මහජන සම්පත
மஹஜன சம்பத
Mahajana Sampatha

26.01.2010

அலுவலக முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2201

வெற்றி எழுத்து: B
வெற்றி எண்கள்: 9 0 7 5 7 2

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | B | 9 | 0 | 7 | 5 | 7 | 2 | ரூபா. 16,067,624/= | பரிசு - |
| 1 பரிசுகள் | | 9 | 0 | 7 | 5 | 7 | 2 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் - |
| 2 பரிசுகள் | | | 0 | 7 | 5 | 7 | 2 | ரூபா. 100,000/= | பரிசுகள் 07 |
| 3 பரிசுகள் | | | | 7 | 5 | 7 | 2 | ரூபா. 10,000/= | பரிசுகள் 73 |
| 4 பரிசுகள் | | | | | 5 | 7 | 2 | ரூபா. 1,000/= | பரிசுகள் 754 |
| 5 பரிசுகள் | | | | | | 7 | 2 | ரூபா. 100/= | பரிசுகள் 7620 |
| 6 பரிசுகள் | | | | | | | 2 | ரூபா. 20/= | பரிசுகள் 74574 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசுகள் | | 9 | 0 | 7 | 5 | 7 | | ரூபா. 10,000/= | பரிசுகள் 09 |
| 8 பரிசுகள் | | 9 | 0 | 7 | 5 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் 74 |
| 9 பரிசுகள் | | 9 | 0 | 7 | | | | ரூபா. 100/= | பரிசுகள் 738 |
| 10 பரிசுகள் | | 9 | 0 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் 7461 |
| 11 பரிசுகள் | B | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் 29928 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 5,646,890.00

Rs. 17,350,379.00

தேசிய லொத்தர் சபை


**கழிவகற்றும் நேரத்தை மாற்றினால் என்ன?**

வண், ஜன.28

யாழ்.நகர வீதிகளில் போக்குவரவு நெருக்கடியாக இருக்கும்வேளையிலா டிரக்டர்கள்மூலம் கழிவகற்றும்வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இவ்வாறு கேள்வி எழுப்புகின்றனர் பாடசாலை மாணவர்களின் பெற்றோர்.

யாழ். நகரில்மாணவர்கள் பாடசாலைகளுக்குச் செல்லும், திரும்பும் நேரங்களைத் தவிர்த்து இந்தச் சுத்திகரிப்பு வேலைகளைச் செய்தால் நன்மையாக இருக்கும்.

மாணவர்களுக்கு போக்குவரத்து நெருக்கடி மற்றும் சுகாதாரப்பாதிப்புக்கள் காணப்படுவதால் இந்த நேர மாற்றம் அவசியம் என்றும் பெற்றோர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்கு [illegible] னர். (ஒ-ரி-160)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஈராக்கில் 3 தற்கொலைத் தாக்குதல்கள்; 36 பேர் உயிரிழப்பு; 70 பேர் படுகாயம்!

பக்தாத், ஜன. 28

ஈராக்கிய தலைநகர் பக்தாத்தில் ஒரே நாளில் 3 இடங்களில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களில் 36 பேர் பலியாயினர். 70 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

ஈராக்கில் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுஸைனின் உறவினரும், அவரது அரசில் இராணுவ அமைச்சராக இருந்தவருமான கெமிக்கல் அலி எனப்படும் அலி ஹசன் அல்-மஜீத் தூக்கிலிடப்பட்டார்.

1988 ஆம் ஆண்டு ஹலப்ஜா என்ற கிராமத்தில் குர்து இன மக்களை விஷவாயு செலுத்தி கொன்றதற்காக அவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்ட்து. இது தவிர மேலும் பல வழக்குகளிலும் அவருக்கு மரணதண்டனைகள் விதிக்கப்பட்டன.

இதைத் தொடர்ந்து அதற்குப் பதிலடி கொடுக்கும் பொருட்டு பக்தாத் நகரில் 3 இடங்களில் தற்கொலைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. ஷெரட்டன், பாபிலோன், ஹம்ரா ஆகிய ஹோட்டல்களில் இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இந்த 3 ஹோட்டல்களிலும் நிறுத்தப்பட்டிருந்த கார்களில் வைக்கப்பட்டிருந்த குண்டுகள் வெடிக்க வைக்கப்பட்டு இத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. இந்த 3 ஹோட்டல்களிலும் வெளிநாட்டினர் அதிக அளவில் தங்குவதுண்டு.

முதல் தாக்குதல் டைக்ரிஸ் ஆற்றுக்கு அருகிலுள்ள ஷெரட்டன் ஹோட்டலுக்கு வெளியே இடம்பெற்றது. இதை அடுத்த சில நிமிடங்களில் மத்திய பக்தாத்திலுள்ள பாபிலோன் ஹோட்டலிலும், இறுதியாக தெற்குப் பகுதியிலுமுள்ள ஹம்ரா ஹோட்டலிலும் தாக்குதல்கள் நடந்தன.

இதுவரை தீவிரவாதிகள் அரச கட்டடங்களை மட்டும்தான் தாக்கி வந்தார்கள். இப்போதுதான் முதல் முறையாக தனியார் கட்டடங்களைத் தாக்க முற்பட்டிருக்கிறார்கள்.

எதிர்வரும் மார்ச் 7 ஆம் திகதி தேர்தல் நடை பெறவுள்ளது. இதனால் தேர்தலுக்கு முன்னர் சட்டம், ஒழுங்கை சீர்குலைக்கவும், குழப்பத்தை ஏற்படுத்தவும் தீவிரவாதிகள் இன்னும் அதிக அளவில் தாக்குதல்களில் ஈடுபடலாம் என அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளார்கள்.

## மிச்செலி ஒபாமாவுக்கும் நியூயோர்க்கில் மெழுகுச்சிலை

அமெரிக்காவில் நியூயோர்க்கிலுள்ள அருங்காட்சியகத்தில், ஜனாதிபதி பராக் ஒபாமாவின் பாரியார் மிச்செலி ஒபாமாவின் உருவ மெழுகுச் சிலையும் திங்கட்கிழமை திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இந்த அருங்காட்சியகத்தில் ஏற்கனவே ஜனாதிபதி பராக் ஒபாமாவின் சிலை திறந்து வைக்கப்பட்டுள்ளது. தற்போது அவரது பாரியாரின் உருவமெழுகு சிலையும் அமைக்கப்பட்டுள்ளது.

மிச்செலி ஒபாமாவின் மெழுகு சிலைக்கு, வெள்ளை நிற அழகிய கவுண் அணிவிக்கப்பட்டுள்ளது. நியூயோர்க் ஜோசன் வூ இச்சிலையை வடிவமைத்துள்ளார். மிச்செலி தமது கணவருடன் வந்து தமது சிலையைப் பார்த்து பெருமகிழ்ச்சியடைந்தார்.

உலக அரங்கில்

## தென் கொரிய ஜனாதிபதி லீ யுங்கின் மனைவியின் பூர்வீகம் அயோத்தியாம்

சியோல், ஜன. 28

தென்கொரிய ஜனாதிபதி லீ யுங் பக்கின் மனைவி கிம் யோன் யோக்கின் மூதாதையர்கள் அயோத்தியில் சுமார் 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த இராஜ வம்சத்தைச் சேர்ந்தவர்கள் என்ற புதிய தகவல் தற்போது வெளியாகியுள்ளது.

கி.பி. 48 ஆம் ஆண்டில் கிம் யோன் யோக்கின் முன்னோர்களில் ஒருவரான அயோத்தி இளவரசி ஹியோ வாங் யோக், கனவில் தான் கண்ட அழகிய இராஜகுமாரனை மணப்பதற்காக தனது பெற்றோரின் அனுமதியுடன் இந்தியாவிலிருந்து ஒரு படகில் கொரியாவுக்குச் சென்று அந்த நாட்டின் மன்னர் சுரோவை மணந்தார் என பழங்கால புத்தகம் ஒன்றில் தகவல் இடம்பெற்று இருக்கிறது.

மரபணுச் சோதனையின் மூலம் 2004 ஆம் ஆண்டில் இது உறுதி செய்யப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகிறது.

தென் கொரிய ஜனாதிபதி மாளிகை வட்டாரங்களை மேற்கோள்காட்டி,'தி கொரியா ரைம்ஸ்' என்ற பத்திரிகை இத் தகவலை வெளியிட்டுள்ளது.

## ஒஸாமா விடுத்துள்ள செய்தி பலவீனத்தின் அடையாளம்

### அமெ. ஜனாதிபதி ஒபாமா கருத்து

வாஷிங்ரன், ஜன. 28

ஒஸாமா பின்லேடன் கடைசியாக ஒலிநாடாவொன்றின் மூலம் விடுத்திருக்கும் செய்தி அல்-குவைதா வலயமைப்பு எந்த அளவுக்கு பலவீனமாகிவிட்டது என்பதன் ஓர் அடையாளம் என அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தெரிவித்துள்ளார்.

அமெரிக்க விமானம் ஒன்றை டெட்ராய்ட் நகரத்தின் மீது தகர்க்க சென்ற மாதம் மேற்கொள்ளப்பட்ட முயற்சியை தாம் பாராட்டுகிறார் என்றும் மென்மேலும் அல்-குவைதா தாக்குதல்கள் நடத்தும் என்றும் ஒலிநாடாவில் ஒஸாமா பின்லேடன் தெரிவித்திருந்தார்.

''முறியடிக்கப்பட்ட விமான வெடிகுண்டு முயற்சி ஒஸாமா பின்லேடனின் உத்தரவின்பேரில் நடந்த ஒரு விடயம் தான் என்பது அவசியம் இல்லை. ஆனால், அந்தத் தாக்குதலுக்கு தானே காரணம் என்பதுபோல காட்டிக்கொள்ள அவர் முயற்சி செய்கிறார். அல்- குவைதா மிகவும் பலவீனம் அடைந்துவிட்டது என்பதையே இது காட்டுகிறது'' என்றும் ஒபாமா கூறியுள்ளார்.

## பாகிஸ்தானில் குண்டுவெடிப்பு: 3 குழந்தைகள் பரிதாப மரணம்

இஸ்லாமாபாத், ஜன. 28

பாகிஸ்தானில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தில் 3 குழந்தைகள் உயிரிழந்தனர்.

வடமேற்குப் பகுதியில் அப்பார்திர் அருகேயுள்ள நஞ்சர்கனி என்னும் கிராமத்தில் நேற்றுக் காலை ஒரு வீட்டருகே இக் குண்டு வெடித்தது. இதில் அங்கு விளையாடிக்கொண்டிருந்த 3 குழந்தைகள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

குண்டுவெடித்த கிராமம் ஆப்கானிஸ்தான் எல்லையோரத்தில் அமைந்துள்ளது.

இதேவேளை, பாகிஸ்தானில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற குண்டு வெடிப்பில் பொலிஸ் உயர் அதிகாரி உட்பட 4 பேர் காயமடைந்தனர்.

பலூசிஸ்தான் மாகாணம் ஜாஃபராபாத் மாவட்டத்திலுள்ள தேரா அலயார் என்ற இடத்தில் இந்தக் குண்டுவெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது. பஸ்தரிப்பு நிலையத்துக்கருகே நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளில் வெடிகுண்டு வைத்து தீவிரவாதிகள் இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இந்தத் தாக்குதல் நடக்கும்போது ஜாஃப்ராபாத் மாவட்ட பொலிஸ் தலைமை அதிகாரி அந்த இடத்தில் காரில் வந்து கொண்டிருந்தார். இதில் அவர் காயமடைந்தார். அவரது அலுவலகக் காரும் பலத்த சேதம் அடைந்தது.

இதுதவிர, அந்த இடத்தில் நின்று கொண்டிருந்த பொதுமக்கள் மூவரும் காயமடைந்தனர். அப்பகுதியில் நிறுத்தப்பட்டிருந்த சில வாகனங்களும் கடுமையாகச் சேதம் அடைந்தன.

எனினும், இச்சம்பவத்தில் அதிர்ஷ்டவசமாக உயிரிழப்பு ஏதும் ஏற்படவில்லை. இந்தத் தாக்குதல் சம்பவத்துக்கு எந்த ஒரு தீவிரவாத அமைப்பும் உடனடியாகப் பொறுப்பேற்கவில்லை என அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## குவைத் கார்ப் பந்தயத்தில் விபத்து; எண்மர் உயிரிழப்பு; 14 பேர் காயம்

குவைத்தில் தோஹா என்ற இடத்தில் அரசிடம் அனுமதி பெறாமல் சட்டவிரோதமாக நடத்தப்பட்ட கார்ப் பந்தயத்தில் கார்கள் மோதி விபத்துக்குள்ளாயின. இதில் 8 பேர் உயிரிழந்தனர். 14 பேர் காயமடைந்தனர். இதில் 7 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

குவைத் நகரத்தின் மேற்குப் பகுதியிலிருந்து 20 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள தோஹா என்ற இடத்தில் இந்தக் கார்ப் பந்தயம் திங்கட்கிழமை நள்ளிரவு நடந்தது. இந்தப் பந்தயத்தில் ஏராளமானோர் பங்கேற்றுள்ளனர்.

இதில் வேகமாகச் சென்றுகொண்டிருந்த இரு கார்கள் ஒன்றுடன் ஒன்று மோதியதுடன், சாலையோரம் நிறுத்தப்பட்டிருந்த 4 கார்கள் மீதும் மோதின. விபத்துக்குள்ளான இந்த கார்கள், கார்ப் பந்தயத்தை சாலையோரம் அமர்ந்து உற்சாகமாகப் பார்த்துக்கொண்டிருந்த இளைஞர்கள் மீதும் மோதின. இதில் 8 பேர் இறந்தனர். 14 பேர் காமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் அனைவரும் அருகிலுள்ள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இதுபோன்று அரசிடம் அனுமதி பெறாமல் கார்ப் பந்தயத்தை நடத்துவது குவைத்தில் வழக்கமாக உள்ளது. இதை அரசும் பெரிதாக எடுத்துக்கொள்வதில்லை.

எனினும், தற்போது விபத்து நடந்து சிலர் இறந்துள்ளமையால், அரசு சிந்திக்கத் தொடங்கியுள்ளது. சட்டவிரோதமாகக் கார்ப் பந்தயத்தை நடத்துவோர் மீது கடும் நடவடிக்கை எடுப்பது குறித்து அரசு தீவிரமாக ஆலோசித்து வருகின்றது.

## இரண்டு இந்திய மாணவர் மீது ஆஸ்திரேலியாவில் தாக்குதல்

### ஒன்பது பேர் பொலிஸாரால் கைது

மெல்போர்ன், ஜன. 28

ஆஸ்திரேலியாவில் இரு இந்திய மாணவர்கள் தாக்கப்பட்டனர். இதுதொடர்பாக 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆஸ்திரேலியாவில் உயர்கல்வி கற்று வரும் இந்திய மாணவர்கள் மீது அடிக்கடி தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. மாணவர் நிதின் கார்க் இந்தத் தாக்குதலில் உயிரிழந்துள்ளார். மேலும் பலர் காயமடைந்துள்ளனர். இதுவரை 100 இற்கும் மேற்பட்ட தாக்குதல் சம்பவங்கள் நடந்துள்ளன.

மத்திய மெல்போர்ன் நகர கவான்டோன் தெருவில் திங்கட்கிழமை இரவு 10.20 மணிக்கு நடந்து சென்றுகொண்டிருந்த இரு இந்திய மாணவர்களை சிலர் கூட்டமாக வந்து கீழே தள்ளி தாக்கியுள்ளனர்.

இந்தத் தாக்குதலில் 22 வயதான மாணவருக்குக் காதில் காயம் ஏற்பட்டது. அடுத்த 20 வயது மாணவருக்கு இலேசான சிராய்ப்புக் காயங்கள் ஏற்பட்டன.

இதில் 22 வயதான மாணவர் மட்டும் வின்செண்ட் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அங்கு அவருக்கு காதில் தையல் போட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது.

இந்திய மாணவர்களைத் தாக்கினர் என்ற குற்றச்சாட்டின்பேரில் 9 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களுக்கு 20 முதல் 22 வயது வரை இருக்கும். கைதானவர்களில் 5 பேர் மீது தாக்குதல் சம்பவம் தொடர்பாக வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது. இவர்கள் ஏப்ரல் 5 ஆம் திகதி மெல்போர்ன் நீதிமன்றத்தில் விசாரணைக்கு ஆஜராக வேண்டுமென்ற நிபந்தனையில் பிணையில் விடப்பட்டனர். இதர 4 பேரிடமும் விசாரணை நடந்து வருகிறது.

இந்தச் சம்பவம் பற்றி ஆஸ்திரேலிய பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறுகையில், ''கைதானவர்கள், ஆசிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் போல் காட்சி அளிக்கிறார்கள். இதுபற்றி விசாரிக்கிறோம்'' என்றார்.

## ஹெய்ட்டி இடிபாடுகளில் இருந்து மேலும் ஒருவர் உயிருடன் மீட்பு

போர்ட்- ஒவ்- பிரின்ஸ், ஜன. 28

ஹெய்ட்டியில் பூகம்பத்தால் ஏற்பட்ட கட்டட இடிபாடுகளுக்குள்ளிருந்து செவ்வாய்க்கிழமை, 14 நாள்களுக்குப் பின்னர் 35 வயதான நபரொருவர் உயிருடன் மீட்கப்பட்டார். இதையடுத்து, அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

அமெரிக்கா அருகே கரீபியன் கடல் பகுதியிலுள்ள ஹெய்ட்டியில் கடந்த 12 ஆம் திகதி கடுமையான பூகம்பம் ஏற்பட்டது. இதில் சுமார் 3 இலட்சம் பேர் பலியாயினர். தலைநகர் போர்ட் - ஒவ் - பிரின்ஸ் நகரில் பெரும்பாலான வீடுகள், கடைகள், கட்டடங்கள் ஆகியவை இடிந்து தரைமட்டமாயின.

இடிபாடுகளை அகற்றும் பணி துரிதமாக நடைபெற்று வருகிறது. அத்துடன், அவற்றுக்குள் சிக்கிக் கிடப்பவர்களும் உயிருடன் மீட்கப்பட்டு வருகின்றனர். மரணித்தவர்களின் சடலங்களும் மீட்கப்பட்டு வருகின்றன. மீட்புப் பணியில் அமெரிக்கா, பிரேஸில், கிரிஸ், பிரான்ஸ் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

பூகம்பம் ஏற்பட்டு நேற்றுப் புதன் கிழமையுடன் 15 நாள்கள் ஆகின்றன. 14 ஆவது நாளான செவ்வாய்க்கிழமை போர்ட் - ஒவ் - பிரின்ஸ் நகரில் ஒரு கட்டடத்தின் இடிபாடுகளில் சிக்கிக் கிடந்த 35 வயது நபர் ஒருவர் உயிருடன் மீட்கப்பட்டார். அவர் உடல் முழுவதும் இடிபாடுகளுக்குள் அமுங்கிக் கிடந்தது.

எனினும், அவரது உடலில் காயங்கள் எதுவும் இல்லை. இருந்தாலும் சிகிச்சைக்காக அவர் வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். இவரை பிரேஸில் குழுவினர் மீட்டெடுத்தனர். இவரையும் சேர்த்து இதுவரை இடிபாடுகளில் சிக்கிக் கிடந்த 3[illegible] பேர் உயிருடன் மீட்கப் பட்டுள்ளனர்.

## மத பேதம் வேண்டாம்! பாப்பரசர் வேண்டுகோள்

ரோம், ஜன. 28

''மதங்களிடையே பேதங்கள் அதிகரித்து வருகின்றன. இது கவலையளிக்கிறது'' என பாப்பரசர் பதினாறாவது ஆசீர்வாதப்பர் வருத்தம் தெரிவித்துள்ளார்.

ஆண்டுதோறும் கிறிஸ்தவர்களிடையே ஒற்றுமை நிலவுவதற்காக நடத்தப்படும் பிரார்த்தனைக் கூட்டத்தில் அவர் இக்கருத்தைத் தெரிவித்துள்ளார்.

''மக்களிடையே மதபேதம் அதிகரித்து வருகிறது. அத்துடன் கிறிஸ்தவ சமயம் மீதான வெறுப்பும் அதிகரித்துள்ளது. மக்கள் மனமாச்சர்யங்களைக் கடந்து ஒன்றுபட வேண்டும்'' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

''விவாதத்திற்குரிய விடயங்களான கருக்கலைப்பு, கருணைக் கொலை ஆகியவற்றில் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வரம்பை நிர்ணயித்து மக்கள் ஒற்றுமையாக வாழவேண்டும்'' என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

### மேடம்



இனம்புரியாத சந்தோஷம் மனதில் குடிகொள்ளும் நாள். வருமோ வராதோ என நினைத்த பணவரவு ஒன்று திடீரென வந்து சேரும். வழக்கு விவகாரங்களில் சுமூகமான நிலைமை காணப்படும். மற்றவர்கள் கடினமாக நினைக்கும் வேலைகளையும் நீங்கள் வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். பெரிய மனிதர் உதவி கிட்டும்.

### இடபம்



மதிப்பு, கௌரவம் மேம்படும். உறவினர்கள் உங்களிடம் பாசமாக நடந்து கொள்வர். தேக ஆரோக்கிய விஷயங்களில் அக்கறை காட்டுவீர்கள். அரசியல் தொடர்புடையவர்கள் திடீர் வெளியூர் பயணங்கள் செல்லலாம். சிறிய பிரச்சினை ஒன்றுக்காக பெரிய அளவில் கவலைப்படுவீர்கள். கொடுக்கல் வாங்கல்களில் கவனம் அவசியம்.

### மிதுனம்



பதற்றம் இருந்தாலும், திட்டமிட்டபடி வேலைகளை முடிப்பீர்கள். பெண்கள் வழியில் சிறு உதவிகள் கிடைத்து பெருமைப்படுவீர்கள். உறவினர்கள் தொடர்பான விடயங்களில் விட்டுக் கொடுத்து செல்வது நல்லது. நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த ஒருவர் உங்களை தேடி வரலாம்.

### கடகம்



நாடி வந்த ஒருவருக்கு இல்லை என்று சொல்லாமல் உதவி செய்வீர்கள். அவசர செலவுகளை சமாளிக்க பொன், பொருள்களை அடகு வைக்கலாம். ஆதாயமில்லாத அலைச்சல்களைச் சந்திக்கலாம். தேக ஆரோக்கியம் பாதிக்கப்படாமல் இருக்க கண்ட இடங்களில் சாப்பிடுவதைத் தவிர்க்கவும். பக்தி நாட்டம் கூடும்.

### சிங்கம்



சுறுசுறுப்பு உற்சாகமாக செயல்படும் நாள். திடீர் வெளியூர் பயணங்கள் செல்ல நேரிடலாம். உறவினர்கள் சிலரின் வீடுகளுக்கு செல்லும் வாய்ப்பு கிடைக்கும். கொடுக்கல் வாங்கல்களில் எச்சரிக்கையாக செயல்படுவீர்கள். புதிய முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. பிள்ளைகளால் சந்தோஷம் அடைவீர்கள்.

### கன்னி



பல நாள்களாக நடக்காமல் இருந்த காரியம் ஒன்று இன்று திடீரென நடக்கலாம். குடும்ப உறுப்பினர்கள் உங்களின் யோசனையை கேட்டு செயற்படுவர். வீண் பிடிவாதங்களை தவிர்த்து எதிலும் விட்டுக் கொடுத்துச் செல்வீர்கள். வெளியூர்களில் இருக்கும் ஒருவர் உங்களை தொடர்பு கொண்டு முக்கிய விஷயமாகப் பேசலாம்.

### துலாம்



பல நாள்களாகப் பார்க்காமல் இருந்த நண்பர் ஒருவரை திடீரெனச் சந்திக்கலாம். விருந்து, விசேட நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளலாம். உள்ளொன்று வைத்து புறமொன்று பேசும் நபர்களை அடையாளம் கண்டு கொள்வீர்கள். தொழில் ரீதியான பயணங்கள் செல்லலாம். எதிர்பார்த்த நல்ல செய்திகளைக் கேட்கலாம்.

### விருச்சிகம்



உறவினர் ஒருவரை சந்திக்க முற்பட்டு அவர் இல்லாமல் திரும்பலாம். சக ஊழியர்கள் விடுமுறையால் கடுமையான வேலை நெருக்கடிகளுக்கு ஆள்படலாம். செய்ய மறந்த வேலை ஒன்றால் தண்டச் செலவுகள், அவதிகளுக்கு ஆளாகலாம். கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியாமல் தவிக்கலாம்.

### தனுசு



தேவையற்ற செலவுகளை குறைக்க வேண்டிய நாள். கடன் பாக்கி ஒன்றை சாமர்த்தியமாகப் பேசி வசூலிப்பீர்கள். அடமானமாக வைத்த பொருள் ஒன்றை மீட்கலாம். உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்லவேண்டும். உறவினர் ஒருவருடன் வெளியிடங்களுக்கு செல்லும் வாய்ப்பு கிட்டும்.

### மகரம்



மற்றவர்கள் மனம் கோணாமல் நடந்து கொள்வீர்கள். தொழில், வியாபார ரீதியான பணவரவுகளைப் பெறலாம். கணவன் மனைவி இடையே அன்யோன்யம் கூடும். நண்பர்கள் வழியில் நல்ல செய்திகளைக் கேட்கலாம். எதிலும் அவசரப்படாமல் அனுபவம் உள்ளவர்களின் ஆலோசனை கேட்டு நடப்பது நன்மை தரும்.

### கும்பம்




உங்களைப் பற்றி மறைமுகமாக விமர்சிப்பவர்களை அறிந்து கொள்வீர்கள். இதுவரை கண்டு கொள்ளாமல் இருந்த சிலர் இப்போது உங்களின் உதவி நாடி வரலாம். இஷ்ட தெய்வ வழிபாடுகளில் நாட்டம் செல்லும். சிறிய தவறு ஒன்று பெரிய பிரச்னையாகி விடுமோ என பயம் கொள்ளலாம். தடுமாற்றங்கள் உண்டாகும்.

### மீனம்



வேண்டா வெறுப்பாக சில வேலைகளைச் செய்வீர்கள். கணவன் மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். சுபகாரிய விஷயங்களில் முன்னேற்றம் காணப்படும். வழக்கத்திற்கு மாறாக கூடுதல் நேரம் பணியாற்றலாம். பழைய சம்பவங்களை அசைபோட்டுப் பார்த்து புதிய காரியங்களில் இறங்குவீர்கள்.

## மரண அறிவித்தல்



### வைத்திலிங்கம் சொர்ணலிங்கம்

### (ஓய்வுபெற்ற ஆசிரியர்- நயினாதீவு)

நயினாதீவு, 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சொர்ணலிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்- யா/நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட ம.வி.) நேற்று (27.01.2010) புதன்கிழமை நயினாதீவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி வைத்திலிங்கம் -நாகமுத்து தம்பதியரின் சிரேஷ்ட புத்திரரும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி வேலாயுதம்- சீனிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற விசாலாட்சியின் (முத்துமணி= ஆசிரியை) அன்புக் கணவரும் காலஞ்சென்ற ஏகதயாபரன் (பாபு) மற்றும் திவாகரன் (ஆசிரியர், கனடா), பகீரதன் (அதிபர், யா/நயினாதீவு மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் திருமதி முத்துலட்சுமி (ஆசிரியை, கனடா), திருமதி யமுனா (ஆசிரியை, யா/நயினாதீவு ம.வி.) ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை, சின்னத்தங்கச்சி, குகதாசன் மற்றும் செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம், நாகமுத்து, கனகரெத்தினம், ஐயாச்சாமி, சிவக்கொழுந்து மற்றும் இராசம்மா, லெட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் சுகந்தன், புராதனி, கஸ்தூரி, லக்ஸ்சிகா, தஷிணா, ஜஷி, மோகிதா ஆகி யோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (28.01.2010) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நயினாதீவு சல்லிபரவை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சொ.பகீரதன்
(அதிபர், யா/நயினாதீவு மகா வித்தியாலயம்).

'வைகுந்தம்',
3ஆம் வட்டாரம்,
நயினாதீவு. (94284)

## அடுத்த மாதம் திருமலையில் வடக்குக் கிழக்குப் பெண்கள் மென்பந்து கிரிக்கெட் போட்டி

வலி. வடக்கு,
ஜன. 28

யாழ்.மாவட்ட பெண்கள் கிரிக்கெட் அணியினர் அடுத்த மாத இரண்டாவது கிழமையில் வடக்கு- கிழக்கு மாகாண அணிகளுக்கு இடையேயான மென்பந்துக் கிரிக்கெட் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக திருமலைக்குச் செல்லவுள்ளனர்.

வடக்கு- கிழக்கு மாகாண பெண்கள் கிரிக்கெட் அணிகளுக்கு இடையேயான போட்டிகளில் திருகோணாமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் அணிகள் மோதவுள்ளன.

இந்த அணிகளில் தெரிவு செய்யப்படும் வீராங்கனைகள் இரண்டாம் கட்டமாக தேசிய மட்டத்திலான பயிற்சிகளில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளார்கள் எனவும் கூறப்படுகின்றது.

தேசிய மட்டத்தில் இணைக்கப்படும் பெண்களுக்கு, தோற்பந்தில் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன. (86)

## கண்ணீர் அஞ்சலி



எமது வித்தியாலய அதிபர் சொ.பகீரதன் அவர்களின் அன்புத் தந்தையும் எமது வித்தியாலய ஆசிரியை திருமதி ப.யமுனா அவர்களின் அன்பு மாமனுமாகிய அமரர்

**வைத்திலிங்கம் சொர்ணலிங்கம்**
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

அவர்களின் மறைவு குறித்து துயரடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அவரின் ஆத்மா சாந்தியடைய நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,
யா/நயினாதீவு மகாவித்தியாலயம், நயினாதீவு. (94281)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 18 . 11 . 1967



விண்ணில் 29 . 12 . 2009

### திருமதி இலங்கேஸ்வரன் தேவகி

பூமியில் ஆயிரம் உறவிருந்தாலும்
தாயே உன்னைப் போல் ஈடாகுமா
கட்டிய கணவன் பிள்ளைகளுடன்
உடன் பிறப்புக்களும் நாம்
கலங்கி அழுகின்றோம் உன் நினைவால்.

என்றும் நினைவுடன்
குடும்பத்தினர்.

சூசையப்பர் கோவிலடி,
கோப்பாய் மத்தி. (94285)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூது செல்லாயோ.......?



பன்னெடுங்காலமாகப் நம் நாட்டில் மட்டுமல்லாது உலகெங்கும் ஆசையோடு வளர்க்கப்பட்டு வரும் ஓர் உயிரினம் புறாக்கள் என்பது எல்லோரும் அறிந்த விடயம். இன்றும் கூட சிறுவர் முதல் பெரியோர் வரை புறாக்களைப் பொழுது போக்காகவும், ஆழகுக்காகவும் மற்றும் பல தேவைகளுக்கும் வளர்க்கின்றனர். ஆலய கோபுரங்கள் மற்றும் வானுயர்ந்த கட்டடங்கள் போன்ற வற்றை இவை தமது வாழ்விடங்களாகக் கொண்டு மக் களோடு மக்களாக சாதுவான பறவைகளாக வாழ்கின்றன.

அன்றைய மன்னர்கள் புறாக்களின் சிறகுகளில் தூதுக் கடிதங்களை பிற மன்னர்களுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதுமட்டுமன்றி இளவரசர், இளவரசிமார்களின் காதல் கடித பரிவர்த்தனை சேவையையும் இவை ஆற்றியுள்ளன. இதனை பல இலக்கியச் சான்றுகள் மூலம் அறிய முடிகிறது.

கொழும்பிடே [Columbidae] எனும் குடும்பத்தைச் சேர்ந்த புறாக்களில் சுமார் 300 இனங்கள் உள்ளன. வட அமெரிக்காவில் சுமார் 300 இனங்கள் உள்ளன. வட அமெரிக்காவின் வரிவால் புறா, ஐரோப்பாவின் பாடும் புறா, பசுபிக் தீவுகளின் வண்ணப்புறா, மொரீஷியஸ் தீவின் இளஞ்சிகப்புப்புறா, அவுஸ்திரேலியாவின் பச்சைப் புறா மற்றும் இந்தியாவின் பாண்டைன், லோட்டன், கொலாஸ், போன்ற இனங்கள் பிரபலமானது. மாடப்புறா, மணிப்புறா தவிட்டுப்புறா, சாம்பல்புறா போன்ற தமிழ் நாட்டுப் புறாக்கள் கொஞ்சம், ஏனைய இனங்களை விட சிறியனவாகக் காணப்படுகின்றன. பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த ஓட்டை இதயப்புறா ஒரு விசித்திரவகை. இந்த பால் வெள்ளைப் புறாவின் மார்புப் பகுதியில் மட்டும் இரத்தச் சிகப்பில் சிறகுகள் இருக்கும். பார்ப்பவர்களுக்கு இதயத்திலிருந்து இரத்தம் வடிவதைப் போன்று இருக்கும். நியூசிலாந்தைச்சேர்ந்த விக்டோரியாப் புறா அளவில் பெரிய இனமாகும்.

அந்தக் காலத்து மன்னர்கள், இளவரசிகள், மகாராணிகள் முதல் இன்றைய சினிமாக் கதாநாயகர் கள்,கதாநாயகிகளின் அந்தப்புர அந்தரங்க தூதுவர்களாக இவைகளின் செயற்பாடுகள் சிறப்பானது.

தமிழ் இலக்கியங்களில் இவை சித்திரிக்கப்படுகின்றன. புறப்பட்ட இடத்திற்கு திரும்பிவரக் கூடிய இப்புறாக்களின் குணத்தைப் பயன்படுத்தி உலகெங்கிலும் புறாபந்தயங்களும் நடந்திருக்கின்றன. புறாக்கள் அதிகம் ஜோடியாகவே வாழ்ந்து ஜோடியாகவே வெளியிடங்களுக்குப் பறந்து செல்கின்றன. தமக்கு வரும் ஆபத்துக்களை மிகத்துல்லியமாக தன் ஜோடிக்கும் ஏனைய புறாக்கூட்டங்களுக்கும் தெரியப்படுத்தி விடக்கூடியன. ஒரு ஜோடிப்புறா, ஓராண்டில் 60 கிலோ தீவனத்தை உட்கொள்கிறது. தானியங்கள், மூங்கில் மற்றுப புல்விதைகள், பழவகைகள்,நெற்றுக்கள் இவற்றின் விரும்பிய உணவாகக் காணப்படுகின்றன.

ஒரு புறாவிற்கு தண்ணீரானது அதன் செயற்பாடுகளுக்கு ஏற்ப குளங்கள், கால்வாய்கள், ஏரிகள் போன்றவற்றில் பருகிக்கொள்ளும். நீருக்குள் அலகை உள்நுழைத்து வெளியில் எடுக்காமலே உறிஞ்சிக் குடித்துவிடும். இன்றுவீட்டுத் தேவைகளுக்காகவும் புறாக்கள் வளர்க்கப்படுகின்றன. புறா வளர்த்தால் குடும்பம் உருப்படாது என்று தமிழ்நாட்டில் மட்டுமன்றி நம் நாட்டிலும் சில பாட்டிமார்கள் உபதேசிக்கின்றனர். இது மூடநம்பிக்கையே. புறாக்கள் எம்மைப் போன்று அழகிய பெண்களைக் கண்டவுடன் காதல் கொள் வதில்லை. தனக்குப்பிடித்த இணையை பல தேர்வுகளிலும் பரீட்சித்தபின்னரே காதல் கொள்ள ஆரம்பிக்கின்றன. இணையை ஆயுள் முடியும் வரை விடாது. அன்பாக காதல் மொழி பேசிக்கொண்டே இருக்கக் கூடியவை இவைகளில் காணப்படும் சிறப்பம்சமாகும்.

து.ஜெயரூபன், கந்தரோடை.

## விடியாத இரவுகள்

எனக்கென்று எழுதப்பட்ட
விடியாத இரவுகளை
வலியோடு தேடுகிறேன்
குழந்தையொன்றின்
பிரசவிப்புக்காய் அல்ல
பிரசவிக்கப்பட்ட
குழந்தையின் நிலைபேற்றுக்காய்

உண்மைகளை உறக்க நிலையிலிருந்து
விழித்தெழுப்ப எனக்கு
வீரியம் போதவில்லை
விழிமூடித் துயிலும் விழிகள் வைத்த
கனவுகள்............
கலையாத மேகங்கள்

மழை வரும் என்றிருந்த
உணர்வு
ஒளிக் கீற்றுக்கள் கீழைத்திசையதனில்
கிளர்ந்தெழுதல் கண்டு
என் மனம் சற்றே
முன்தள்ளி நிற்கின்றது
முடக்கப்பட்ட உணர்வுகளின்
நிசப்தம்.....

இரவுகள் விடியாமற்போவதில்லை
மரணங்கள் நிகழாமல் விடுவதில்லை
அஸ்தமனத்துக்கும் உதிப்புக்கும்
அரைவட்ட இடைவெளியே
ஆனால் இடைவெளியற்ற
என்னுணர்வை எங்கே
பொதிந்து வைப்பேன்?

ஜ.பொ.துஜீவ்(அருள்நிலவன்)
கல்வியியற் கல்லூரி உள்ளகப் பயிற்சி,
ஹாட்லிக்கல்லூரி.

## பொன்மொழிகள்

* அறிஞர்களின் கூட்டம் ஓர் உயிருள்ள வாசிகசாலை.

* விவேகி எடுக்கும் முடிவு மிகவும் அரியதாக இருக்கும்.

* எதனையும் இழந்து நீதியைப் பெறலாம். ஆனால் நீதியை இழந்து எதனையும் பெறக்கூடாது.


* மிகப் பெரிய சாதனைகள் சாதிக் கப்படுவது வல்லமையினால் அல்ல. விடாமுயற்சியினால் ஆகும்.

* வறுமையிலிருந்து செழுமைக்குப் பயணம் செய்வது கடினம். ஆனால் திரும்பி வருவது சுலபம்.

* சோதனைகள் ஒரு மனிதனை அவனுக்கு அறிமுகப்படுத்துகின்றது.

* * * * * * * * * * * * * * * *

யோ. சுவேனிதா,
50/23, செட்டித்தெரு, நல்லூர்.




## வாழ்க்கை

வளைவுகள் சுழிவுகள் பலதும்
வந்துபோகும் மலை தான் வாழ்வு
வற்றாத நதி நீராய்
வந்துநிற்கும் பல சுமைகள்
தொற்றுநோய் போன்று
தொட்டுத் தொட்டே வரும்துன்பம்
விட்டிடாப் பாசத்தால்
விழுந்துழலும் மனித மனம்
சட்டென்று முடிவெடுத்தால் -ஒரு
சரித்திரம் தான் படைக்கலாமோ
விட்டெறியும் கோபத்தால் -வாழ்வு
விபத்தில் மாட்டும் புரியாயோ
சாத்திரங்கள் பல பார்த்து- அதில்
கோத்திரங்கள் சில சேர்த்து
இறை வாழத்தந்த இவ் வாழ்வை
வருத்துதல் அது நியாயம் தானோ?
வாழப் பழகிக் கொள் மனித- இவ்
வாழ்க்கையது வரப்பிரசாதமன்றோ-உன்னை
பற்றிப்பிடிக்கும் துன்பப் பிணியை
பதறாது நிமிர்ந்து எதிர்கொள்ளு-




**கேள்விக்கு என்ன பதில்? 57இல் பரிசு பெறுபவர் விவரம் அடுத்தவாரம் அறிவிக்கப்படும் என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறோம்.**

## கேள்விக்கு என்ன பதில்?-58

26.01.2010 அன்று நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டியவர் யார்? இவர் எத்தனை வாக்குகளால் தனது வெற்றியை சுவீகரித்துக்கொண்டார்?

(சரியான விடையை 28.01.2010 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்).

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும், பிரச்சினைகள் பற்றிப் பேசவும், தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இப்பகுதிக்கான உங் கள் படைப்புகளையும், விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-..............................
முகவரி :-..............................
:-..............................
.................... ....................
திகதி கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## வரலாற்றில் இந்த வாரம்

**ஜனவரி 22**



பிரித்தானியாவின் விக்டோரியா மகாராணி 1901ஆம் ஆண்டு ஜனவரி 22ஆம் திகதி மரணமானார்.

**ஜனவரி 23**

சீனாவில் ஷங்ஷி மாகாணத்தில் 1556ஆம் ஆண்டு ஜனவரி 23ஆம் திகதி நிகழ்ந்த பூமியதிர்ச்சியில் 830,000 மக்கள் பலியாகினர்.



**ஜனவரி 24**



1965 ஆம் ஆண்டு ஜனவரி 24 ஆம் திகதி பிரிட்டிஷ் பிரதமர் வின்ஸ்டன் [illegible] மரணமடைந்தார்.

**ஜனவரி 25**

பிரான்ஸில் அல்ப்ஸ் பகுதியில் முதலாவது குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பித்து வைக்கப் பட்டன.



**ஜனவரி 26**



இந்தியா 1950ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம்திகதி கொமன் வெல்த் அமைப்புக்குள் குடியரசாக மலர்ந்தது.

**ஜனவரி 27**

வியட்நாம் போர் நிறுத்த ஒப்பந்தத்தில் வடவியட் நாமும், அமெரிக்காவும் 1973 ஆம் ஆண்டு ஜனவரி 27இல் கையெழுத் திட்டன.



**ஜனவரி 28**



பிரிட்டிஷ் கால்வாய் தொடர்பான முதலாவது சமரசம் 1788 ஆம் ஆண்டு ஜனவரி 28 ஆம் திகதி [illegible] என்ற இடத்தில் நிகழ்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## B.sc. (வெளிவாரி)

★புதிய ஆண்டிற்கான பதிவுகள் பல்கலைக் கழகத்தினால் கோரப்பட்டுள்ளன.
★A/L இல் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பிரிவுகளில் இரண்டு பாடம் சித்தி அடைந்தவர்களும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாகும்.
★புதிய பிரிவுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.
★ பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக நடைபெறுகின்றன.

குறிப்பு: கடந்த மார்கழி மாதம் பரீட்சை எடுத்தவர்களுக்கான B.sc. இரண்டாமாண்டு, இறுதியாண்டிற்கான விரிவுரைகள்

ஆரம்பம்: 30.01.2010 காலை 8மணி.

யாழ். இணைப்பாளர்கள்,
காமராசர் பல்கலைக்கழகம்,
T.P No; 021 222 8148, 021 222 3208

புதிய உயர்கல்லூரி,
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

(94277)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண் மகிழ:
07.11.1975

மனம் நெகிழ:
07.02.2009

அமரர் புஸ்பநாதன்
**ஜெயகாந்தன்**

ஆண்டு ஒன்று போனதுவோ? ஆருயிரே! உனைப் பிரிந்து
கண்டுகொள்ள ஏங்குகின்றோம் கண்ணெதிரே வாராயோ?
அருமைச் செல்வத்தைப் பரிதவிக்க விட்டு விட்டு
சதி செய்து பிரித்து விட்டான் ஈரமில்லாக் காலனவன்
ஆற்றுவோர் யாருமின்றி உருக்குலைந்து போனோமே
விதியே இதுதானோ என்றெண்ணி பேதலித்து நிற்கின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கும்:

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

மனைவி, மகள், அம்மா, சகோதரர்கள்,
மாமா, மாமி,மைத்துனர்

(94697)

## இணைப்பு பஸ் சேவையில் மாற்றம் தேவை

நெடுந்தீவு, ஜன.28

நெடுந்தீவு குறிகாட்டுவான் பயணிகள் படகுச் சேவை தற்சமயம் மூன்று தடவைகளாக அதிகரிக்கப்பட்டபோதும் அதன் இணைப்புச் சேவையான பஸ் சேவையில் முழுமையான மாற்றம் ஏற்படுத்தப்படவில்லையெனத் தெரிகின்றது. பி.ப. 3 மணிக்குப் புறப்படும் படகில் பயணிப்பவர்கள் பகல் 1.30 மணிக்கே துறைமுகத்திற்கு வந்து காத்திருக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது. ஆகவே குறிகாட்டுவானில் இருந்து இரண்டு மணிக்கு நெடுந்தீவுக்கு வந்து சேரும் பயணிகள் மேற்குப் பகுதியில் உள்ள தமது இடங்களுக்குச் செல்லக்கூடியதாகவும், குறிகாட்டுவானுக்குக் செல்ல வேண்டிய பயணிகள் 3 மணிக்கு நெடுந்தீவில் இருந்து புறப்படும் படகிற்கு வரக்கூடியதாகவும், பஸ் போக்குவரத்துக்கான நேர அட்டவணைகளை மாற்றி அமைக்க வேண்டும் என மக்கள் கூறுகிறார்கள். (ரி-111)

## பெண்கள் கிரிக்கெட் அணிக்குப் பயிற்சி

யாழ்.மாவட்டப் பெண்கள் கிரிக்கெட் அணிக்கான பயிற்சிகள் எதிர்வரும் சனிக்கிழமை 30ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளதாக பயிற்றுவிப்பாளர் வி.கே.சண்முகலிங்கம் அறிவித்துள்ளார்.

ஏற்கனவே வெள்ளிக்கிழமை நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் தவிர்க்க முடியாத காரணத்தினால் நடைபெற மாட்டாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (86)


**Engineering Drawing & AutoCAD**

New batch starts on:
06.02.2010
(10.00 a.m)

IIS
Institute of Informatics Studies
#100, Clock Tower Road, Jaffna
T.P:021 222 2831



**புறொயிலர் தேவை**

புறொயிலர் கல்பேட் கொள்வனவு செய்யப்படும். வைத்திருப்போர் தொடர்பு கொள்ளவும்.

**வீனஸ் பாம்,**
நல்லூர் AGA அலுவலகம் முன்பாக, பலாலி வீதி,
திருநெல்வேலி.தொ.பே.:077 8448300

(94280)



வசீகரத் தோற்றத்திற்கு!
**சந்தனாலேப**



(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல்பூச்சுமருந்து)
வெண்சந்தனம், மரமஞ்சள், குங்குமப்பட்டை, கஸ்தூரி மஞ்சள், செவ்வள்ளி உள்ளிட்ட தேசிய ஆயுர்வேத ஔடதங்களின் கலவை. தேமல், முகப்பரு, தழும்புகள், படர்தாமரை, கண்ணைச் சுற்றிக் கருவளையம், சருமம் வரட்சியடைதலைத் தடுக்கும், சருமத்தை மிருதுவாக்கி பளபளப்புடன் எழில்மிகு வசீகர முக அழகைத் தரும். உதடு, பாதவெடிப்பு, சருமம் சுருங்குதல், பிளவு படுதல் போன்ற சரும நோய்களைப் பூரணமாகக் குணப்படுத்தும். சவரம் செய்த பின்னர் முகத்தில் பூசுவதன் மூலம் பிளேட் எரிச்சலை நீக்கி, சருமத்தை சவரம் செய்வதை இலகுவாக்கும். எடுப்பான கம்பீரத் தோற்றத்தைத் தரும்.

சந்தனாலேப

**'சிவா நறுமணப் பூங்கா'**
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சகல பார்மசிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்)

MANUFACTURED BY: SAN JEEWAKA AYURVEDIC PRODUCTS VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REG NO. A/L 250.


## வீட்டுக்கிருத்திய அழைப்பு

03ஆம் மாதம



அமரர்
முத்தையா பரஞ்சோதி
(பண்டா)

06ஆம் மாதம்



அமரர்
சற்குரு சத்தியலிங்கம்
(ராசு)

எமது அன்புத் தெய்வங்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (28.01.2010) வியாழக்கிழமை மு.ப 11மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

V.T.S. லேன்,
உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.

(94271)

குடும்பத்தினர்.

# ஓராண்டு நினைவலைகள்



மண்ணுலகில்:
29.05.1937

விண்ணுலகில்:
07.02.2009

## திருமதி இராசரெத்தினம் பாக்கியம்
## (பாக்கம்மா)

கொடிய நோய் தந்தசோகம் மட்டும் சொந்தமாய்
கொடிய ஆண்டு நேற்றுப்போல் கரைந்தோட
சொல்லிட வார்த்தையின்றிச் சோர்ந்து விட்டோம் அம்மா
முடியவில்லை நின் வெற்றிடத்தை ஈடுசெய்ய
சோகமாய் வாழ்வின் அத்தியாயமே முடிந்தமையால்
விடிவின்றி விழிநீரும் வான்மழைபோல் சொரியுதம்மா
இன்பமோ துன்பமோ இதமுடன் பகிர்ந்தெங்கள்
இல்லமதில் ஒளியூட்டிட இல்லையே எம் அம்மா
குடும்ப விளக்கே! தவிக்கின்றோம் அம்மாவே!
ஆயிரம் உறவுகள் இருப்பினும் அவையொன்றும்
அம்மா அன்புக்கும் அரவணைப்புக்கும் நிகராகுமா?
ஆண்டவன் திருவடியில் இருந்து ஆறுதல் பெறவும்
உங்கள் ஆத்மா சாந்தி பெறவும்
அந்திரான் முருகனைப் பிரார்த்திக்கின்றோம்.

(94188)

முருகமூர்த்தி கோயில் வீதி,
நவாலி கிழக்கு, மானிப்பாய்.

என்றும் உங்கள் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாராயணனின் மாற்றத்துடன் அவர் வகித்த பதவியின் வகிபாகமும் குறையும்?

இந்தியப் பிரதமரின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் எம்.கே.நாராயணன் அவரது பதவியில் இருந்து அகற்றப்பட்டுள்ளார். அவரை மேற்கு வங்க மாநிலத்தின் ஆளுநராகப் பணியில் இருத்துவதற்கு காங்கிரஸ் தலைமை தீர்மானித்து பணி நியமனம் வழங்கி விட்டது.

மன்மோகன் சிங்கிற்கு நெருக்கமானவரான நாராயணனை



பதவியில் இருந்து அகற்றுவதற்கு மத்திய அரசை தூண்டியது எது என்ற விவரங்கள் இப்போது மெல்லக் கசிய தொடங்கியுள்ளன. மத்திய அரசின் இந்த நடவடிக்கைக்கு ஒன்றுக்கு மேற்பட்ட காரணங்கள் இருக்கின்றன என தகவல் அறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

அதில், முதலாவது காரணம், தற்போதைய உள்துறை அமைச்சரும் தமிழ் நாட்டுக்காரருமான ப.சிதம்பரத்துடன் நாராயணனுக்கு உறவுகள் நன்றாக இல்லை என்பது.

மும்பையில் பாகிஸ்தான் ஆதரவு ஆயுதப் படையினர் தாக்குதல் நடத்தி யமையை அடுத்து நிதி அமைச்சராக இருந்த ப.சிதம்பரம் உள்துறை அமைச் சராக மாற்றப்பட்டார். பதவியேற்றதுமே இந்திய வெளியக உளவுப் பிரிவான 'றோ'வின் தலைவரும், புலனாய்வுத் துறைத் தலைவரும் தனக்கு நேரடியாக அறிக்கைகளைச் சமர்ப்பிக்க வேண்டும் என்பதை தேசிய பாதுகாப்பு ஆலோச கருக்கு சிதம்பரம் தெளிவுபடுத்தி விட்டார். முன்னதாக, அந்த அறிக்கைகள் அனைத்தும் நாராயணனிடமே சமர்ப்பிக்கப்பட்டு வந்தன.

அவற்றின் அடிப்படையில் நாட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் உள்ள பாதுகாப்புச் சூழ்நிலைகள் குறித்து அவர் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு விளக்குவார். அவ்வாறு செய்வது நாராயணனுக்கு இலகுவானதாகவும் வசதியானதாகவும் இருந்தது.

இந்த நிலையில், தான் விரும்பியபடி விடயங்கள் நடக்கவில்லை என்ற உடனேயே தேசிய தீவிரவாத எதிர்ப்பு நிலையம் - என்ற புதிய அமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கான முன்மொழிவுகளை சிதம்பரம் வைத்தார்.

நாராயணனுக்கு விடுக்கப்பட்ட முதல் எச்சரிக்கை இதுதான். அந்த முன்மொழிவுகளை எதிர்த்து தேசிய பாதுகாப்பு ஆலோசகர் வாதிடுவதற்கு முயன்றார். ஆனால், சிதம்பரம் தனது அடிகளை உறுதியாக எடுத்து வைத்தார்.

அத்துடன், நாட்டின் உள்ளகப் பாதுகாப்புக்குத் தானே பொறுப்பு என்றால், அதற்குத் தேவையான, பொருத்தமான சாதனங்கள் அனைத்தையும் உருவாக்கிக் கொள்ளும் சுதந்திரம் தனக்கு வழங்கப்பட வேண்டும் என்பதை பிரதமர் மன்மோகன் சிங்கிடம் சிதம்பரம் உறுதியாகத் தெரிவித்துவிட்டார்.

தேசிய தொழில்நுட்ப ஆராய்ச்சி நிறுவனம், புலனாய்வுக் கூட்டுக் குழு, வான் பயணங்கள் தொடர்பான ஆய்வு மையம், ஆய்வு மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு ஆகிய அனைத்தும் சிதம்பரம் ஏற்படுத்திய புதிய அமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டன.

இந்த நகர்வுகள் எல்லாம் நாராயணனுக்கு வேலை இல்லாத நிலையை ஏற்படுத்தியதுடன் அவரது அதிகாரங்களையும் பெருமளவில் குறைத்தன. சிதம்பரம் - நாராயணன் இடையிலான இந்தப் பிணக்குகள் எல்லாம், தெலுங்கானாப் பிரச்சினைகளைக் கையாள்வதற்கு காங்கிரஸ் கட்சியால் சிதம்பரம் நியமிக்கப்பட்டதற்குப் பின்னர் வெளிச்சத்துக்கு வந்தன.

தனித் தெலுங்கானா மாநிலம் அமைக்க வேண்டும் என்று கேட்டு தெலுங்கானா ராஜ்ட்ர சமித்தி தலைவர் ரி.ஆர்.சந்திரசேகர ராவ் காலவரையறை அற்ற உண்ணா நிலைப் போராட்டம் நடத்தினார்.

இதனையொட்டி கடந்த நவம்பர், டிசெம்பர் மாதங்களில் கர்நாடக மாநிலத்தில் பெரும் வன்முறைகள் வெடித்தன. இந்தப் பிரச்சினைகள் தொடர்பில் நாராயணன் சர்ச்சைக்குரிய தகவல்களை அரசுக்கு வழங்கினார்.

பிரச்சினை தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக புதுடில்லியில் இருந்து ஹைதராபாத்திற்கு அனுப்பப்பட்ட புலனாய்வுத் துறை மூத்த அதிகாரியின் முடிவுகளில் நாராயணன் மிகக் காத்திரமாகச் செல்வாக்குச் செலுத்தினார் என்று சொல்கின்றன அரசியல் வட்டாரங்கள்.

நாராயணனின் தகவல்களின் அடிப்படையில், தெலுங்கான தனி மாநிலம் உருவாக்கப்படும் என்று டிசெம்பர் 6ஆம் திகதி பின்னிரவில் சிதம்பரம் அறிவித்தார். நாராயணனின் காய் நகர்த்தலில் விழுந்த சிதம்பரம் அதற்கான விளைவை அடுத்த நாளே எதிர்கொண்டார். எதிர்க் கட்சிகள் அவரைத் தும்புபறக்க விளாசி விமர்சித்தன. அதேசமயத்தில் தெலுங்கானா பிரச்சினையும் மேலும் தீவிரமடைந்தது.

நாராயணனின் நீக்கத்துக்கான அடுத்த காரணம், 26/11 மும்பைத் தாக்குதல் தொடர்பாக அவர் 'பாகிஸ்தான் போஸ்ட்' பத்திரிகைக்குக் கொடுத்த பேட்டி. பாகிஸ்தானுடன் எந்தவிதமான பேச்சுக்களையும் மீளத் தொடங்குவதை தேசிய பாதுகாப்பு ஆலோசகர் என்ற ரீதியில் தான் மறுக்கிறார் என அவர் தெரிவித்திருந்தார்.

ஆனால், இந்த விவகாரம் தொடர்பில் அரசியல் பார்வை வேறானதாக இருந்தது. பயங்கரவாதம் தொடர்பான விடயங்களைத் தீர்த்துக் கொள்வது மற்றும் இரு நாடுகள் இடையில் அமைதியை ஏற்படுத்துவது என்பன தொடர்பில் பேச்சுக்களை நடத்துமாறு அமெரிக்காவால் இந்தியாவுக்கு ஆலோசனையும் அழுத்தமும் கொடுக்கப்படுகிறது. நாராயணனின் ஆலோசனைகள் இந்த விடயத்தில் புறக்கணிக்கப்பட்டதுடன், ஷாம் எல் ஷேக்கில் கூட்டறிக்கை ஒன்றிலும் கையெழுத்திட்டார் பிரதமர் மன்மோகன் சிங். இந்தச் சமயத்தில் ஒன்றைக் குறிப்பிட வேண்டும், 26/11 மும்பைத் தாக்குதலின் பின்னர் அதிகாரத்தில் தொடர்ந்து இருந்து வந்த ஒரே நபர் நாராயணன்தான்.

தாக்குதலைத் தடுக்கத் தவறியமைக்குப் பொறுப்பேற்று அப்போதைய மத்திய உள்துறை அமைச்சர் சிவராஜ் பட்டீல், மகாராஷ்ரா முதல்வர் விலாஸ்ராவோ தேஷ்முக் ஆகியோர் பதவி விலகி இருந்தனர். அந்தச் சமயத்திலேயே நாராயணனும் வெளியேற்றப்பட்டு இருக்க வேண்டும். எனினும் மன்மோகன் சிங்குடன் அவருக்கு இருந்த நெருக்கம் அவரைக் காப்பாற்றியது.

நாராயணனின் இரத்தத்தை உறிஞ்ச அப்போதே பல தரப்புக்களும் காத்துக் கொண்டிருந்த போதும் மன்மோகன் சிங் ஏன் அவரைக் காப்பாற்றினார்?

தமிழ்நாடு முதலமைச்சரும் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவருமான மு.கருணாநிதிக்கு நெருக்கமானவர் நாராயணன் என்பதே அதற்குக் காரணம் என்கின்றன அரசியல் வட்டாரங்கள். ஈழத் தமிழர்கள் பிரச்சினை கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்த, விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை சிறிலங்காப் படைகள் நெருங்கிக் கொண்டிருந்த அந்தச் சமயத்தில் நாராயணனை அகற்ற மன்மோகன் சிங் விருப்பப்படவில்லை.

ஈழத் தமிழர் பிரச்சினை தொடர்பில் தமிழ் நாடு அரசு எந்த விதப் பிரச்சினைகளையும் எழுப்பக்கூடாது என்பதில் மன்மோகன் சிங் மிகக் கவனமாக இருந்தார். அதனாலேயே அன்று நாராயணனின் தலை தப்பியது.

சிதம்பரம் உருவாக்கிய புதிய அமைப்பு எல்லா அதிகாரங்களையும் தனது கைகளில் எடுத்துக் கொண்டுள்ள நிலையில் இனி, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பதவியின் முக்கியத்துவம் குறைந்துவிடும் என்கின்றன புதுடில்லி வட்டாரங்கள்.

ஆனால், வெளிவிவகாரத் துறையின் கொள்கை வகுப்பிற்குள் மட்டுப்படுத்தப்பட்டதாக அவர்களின் பதவி அமையும். இனிவரும் காலங்களில் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பதவி என்பது ஓர் இராஜதந்திர வகிபாகத்தை மட்டுமே கொண்டிருக்கும் என்று புதுடில்லி வட்டாரங்கள் கூறுகின்றன. அதற்கு மேலும் தேவைப்பட்டாலும், அதற்கான வரையறைகள் வேறாக இருக்கும்.

நன்றி: 'புதினப் பலகை'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



edexcel INTERNATIONAL
BTEC HND
New Batches start on: 28/01/2010 at 10.00 a.m
HND in Computing
HND in Quantity Surveying
HND in Civil Engineerig
HND in Business Management
உங்கள் பதிவுகளுக்கு முந்திக்கொள்ளுங்கள்
IIS CITY CAMPUS
200,Sivan pannai Road, Jaffna
T.P:021 222 8060 Fax: 021 222 6933
Web:iiscitycampus.com

Walk in Interview
Position: Montessori Teachers
*Medium of Instruction:* English & Tamil
*Expectation :* Good command in English & good personality.
*Age limit* : 25 - 40
*Salary* : Attractive and Negotiable
*Date* : 30/01/2010
*Time* : 10.00am onwards
British college of Higher studies
No.15, 2nd Floor , Sirampiyady Lane (Off Stanley Road), Jaffna (Above Cosy Hotel)
Tel : 021-2224550, Mobile : 0777222422

## வீதி புனரமைப்பு பூர்த்தியாகவில்லை

நெடுந்தீவு.ஜன.28

நெடுந்தீவு இறங்குதுறை அந்தோனியார் கோவில் வீதி புனரமைப்புப் பணிகள் 2009இல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வேலைத்திட்டக் குறிப்பில் கூறப்பட்டுள்ள போதும், மேற்படி வீதியின் புனரமைப்புப் பணிகள் முழுமையாகப் பூர்த்தியடையவில்லை.

சுமார் 500 யார் தூரம்வரையே புனரமைப்புப் பணிகள் இடம்பெற்றுள்ளன. இதே சமயம் முக்கிய வீதிகளில் ஒன்றான வெல்லை வீதியும் சேதமடைந்த நிலையிலேயே உள்ளது. இந்த வீதியைத் திருத்துவதற்கான நடவடிக்கைகள் எதுவும் இதுவரை இடம்பெற்றதாகத் தெரியவில்லை.

மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள வீதிகள் புனரமைப்படாதிருக்க முக்கியத்துவமற்ற வீதிகளின் புனரமைப்புப் பணிகளில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (ரி-111)

## சேவாலங்கா நிறுவனத்தின் புதிய கட்டட திறப்பு விழா

யாழ்ப்பாணம்.ஜன.28

பலாலி வீதியில், கோண்டாவிலில் அமைந்துள்ள சேவாலங்கா நிறுவனத்தின் புதிய யாழ்.மாவட்ட அலுவலக கட்டடம் நாளையதினம் 29ஆம் திகதி காலை 9.30 மணியளவில் திறந்து வைக்கப்படும்.

நிறுவனத்தின் தலைவர் கலாநிதி ஹர்சா குமார நவரட்ணவின் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் கே.கணேஷ் கலந்து கொள்வார். சி.வி.கே. சிவஞானம் உட்பட இன்னும் சிலர் சிறப்பு விருந்தினர் களாகக் கலந்து கொள்வர். (ரி)

## தவறிவிட்டது

நீர்வேலி வடக்கு, அரசகேசரி விநாயகர் வீதியைச் சேர்ந்த செல்வி குகனேஸ்வரன் கேமாலினி என்பவரது இல 887 221561V கொண்ட தேசிய அடையாள அட்டை மற்றும் NPTV-7719 இலக்கம் கொண்ட மோட்டார் சைக்கிளுக்குரிய காப்புறுதிப்பத்திரம், வரிச்சான்றிதழ், மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் என்பன உரும்பிராய்ச் சந்திக்கும், கரந்தன் ராச வீதிச் சந்திக்கும் இடையில் கடந்த 22ஆம் திகதியன்று தவறவிடப்பட்டுள்ளன. இவற்றைக் கண்டெடுத்தோர் தயவுசெய்து மேற்குறிப்பிட்ட விலாசத்தில் கையளித்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (சி-564469)

## நாளை கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஜன.28

திருநெல்வேலி பழம் கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 16 நாள்கள் நடைபெறவுள்ளது. எதிர்வரும் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த் திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம் பெறும். (ஒ)

## இலவச ஆங்கில கணனி பயிற்சிநெறி

யாழ்ப்பாணம், ஜன.28

லண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலய யாழ்ப்பாணம் மற்றும் சாவகச்சேரி கணனிப் பயிற்சி நிலையங்களில், வன்னியில் இருந்து வந்த மாணவர்களுக்கு இலவச ஆங்கிலம், கணனிப் பயிற்சிகள் நடைபெற்று வருகின்றன. (ஒ)

C.P.T. CAUSEWAY PAINTS
Sunny HI - Build Lacquer
Pearl/Metalic HI - Build Lacquer
Computer Mixing செய்து Debeer பெயின்ட் முதல் முறையாக யாழ்.நகரில் (Holland) இல் தயாரிக்கப்பட்ட No.1 பெயின்ற் கொழும்பு விலையில்
Sunny Auto பெயின்ற் கூடிய விலைக் கழிவில் பெற்றுக்கொள்ளலாம்.
மொத்தமாகக் கொள்வனவு செய்யும்போது 25%விலைக்கழிவுடன் 12 ரின் பெயின்றிற்கு 01 ரின் இலவசமாகவும் வழங்கப்படும்.



மற்றும் கோஸ்வே பெயின்ற் வகைகள் குறைந்த விலையில் கீழ் காணும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.
Aashaa Merchant (Pvt) Ltd,
No.137, Palaly Road, Post box Junction, Thirunelvely.
T.P: 0779499992
ஆசா மேச்சன்ற் (பி) லிமிட்டெட்
137, பலாலி வீதி, தபால்பெட்டிச் சந்தி, திருநெல்வேலி

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் குமாரசாமி சண்முகலிங்கம்

(ஓய்வுபெற்ற சிரேஷ்ட புகையிரத நிலைய அதிபர்)

திதி: 28.01.2010 (திரயோதசி)

அன்னையின் மடியில்: 04.06.1931

ஆண்டவன் அடியில்: 11.02.2006

'வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்'

பிறந்தவன் எவனுக்கும் மரணமும்
மரணப்பட்டவனுக்குப் பிறப்பும் நிச்சயமே
தவிர்க்கமுடியாத உன் கடமைகளைச்
செயலாற்றுவதில் இதற்காகக் கவலைப்படாதே.

எங்களின் இதயத் தெய்வமே!
தங்களின் உயர்ந்த எண்ணங்களை
எங்களின் இலட்சியமாகக் கொண்டு
தங்களின் புனிதமான பாதையிலே
நாங்கள் உறுதியாகச் செல்லுவோம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

'மங்கை இல்லம்'
சந்தை வீதி, உடுப்பிட்டி.

(சி-564430)

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

மண்ணில் 25 ★ 01 ★ 1924

விண்ணில் 30 ★ 12 ★ 2009



அமரர்

### ஸ்ரீமான் தாமோதரம்பிள்ளை முத்துவேலு

*30.12.2009* அன்று இறைபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவரின் மரணச் செய்தி கேட்டு நேரில் வந்தும், தொலைபேசி, தந்தி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவி செய்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு நாளை *(29.01.2010)* வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சன்னதி றோட், உடுப்பிட்டி.
T.P: 021 226 4030

குடும்பத்தினர்.

(94254)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொமன்வெல்த் வெளியிட்ட இந்திய வரைபடத்தில் காஷ்மீர், குஜராத் பகுதிகள் பாகிஸ்தானுடன் சேர்ப்பு

## மத்திய அரசு கண்டனம்; தவறுக்கு மன்னிப்பு

டில்லி, ஜன. 28

கொமன்வெல்த் விளையாட்டுக் கூட்டமைப்பு வெளியிட்ட இந்திய வரைபடத்தில் காஷ்மீர் மற்றும் குஜராத் மாநிலங்களின் சில பகுதிகள் பாகிஸ்தானுடன் சேர்க்கப்பட்டு இருந்தன. இதுபற்றி மத்திய அரசு கண்டனம் தெரிவித்ததையடுத்து, கொமன்வெல்த் கூட்டமைப்பு சரியான வரைபடத்தை வெளியிட்டதுடன் தவறுக்கு மன்னிப்பும் கேட்டது.

கொமன்வெல்த் நாடுகளின் விளையாட்டுப் போட்டிகள் வரும் ஒக்ரோபர் மாதம் டில்லியில் நடைபெற உள்ளன. இந்த போட்டிகளுக்கு இன்னும் 9 மாதங்கள் இருக்கும் நிலையில் போட்டிகளுக்கு தேவையான கட்டமைப்பு வசதிகள் இன்னும் சரியான முறையில் செய்யப்படவில்லை என்ற முறைப்பாடு ஏற்கனவே எழுந்தது.

இந்த நிலையில், கொமன்வெல்த் விளையாட்டுக் கூட்டமைப்பு, அதன் இணையத்தளத்தில் வெளியிட்ட இந்திய வரைபடம் பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

அந்தப் படத்தில் காஷ்மீர் மாநிலத்தின் வடக்குப் பிரதேசத்தில் உள்ள சிலாஸ், கில்ஜித், ஸ்கார்டு ஆகிய பகுதிகள் பாகிஸ்தான் நாட்டுடன் சேர்க்கப்பட்டு உள்ளன. கில்ஜித் - பல்டிஸ்டான் பகுதிகள் ஏற்கனவே இந்திய - பாகிஸ்தான் இடையே உள்ள பிரச்சினைக்குரிய பகுதிகள் ஆகும்.

இதேபோல, குஜராத் மாநிலத்தில் உள்ள கட்ச் பிரதேசத்தின் மேற்கு பகுதியில் சில இடங்கள் பாகிஸ்தான் நாட்டுடன் சேர்க்கப்பட்டுள்ளன.

இதை அறிந்த மத்திய அரசு அதிகாரிகளும், இந்திய விளையாட்டு வீரர்களும் அதிர்ச்சி அடைந்தனர். உடனடியாக இந்திய கொமன்வெல்த் விளையாட்டு அமைப் பாளர்களும், மத்திய அரசும், லண்டனில் உள்ள கொமன்வெல்த் விளையாட்டு கூட்டமைப்பின் கவனத்துக்கு இதைக் கொண்டு சென்றனர். தவறான வரைபடத்தை வெளியிட்ட கொமன்வெல்த் விளையாட்டு கூட்டமைப்புக்கு கடும் கண்டனமும் தெரிவிக்கப்பட்டது.

கொமன்வெல்த் விளையாட்டு கூட்டமைப்பு தலைமை அதிகாரி மைக் கூப்பர் டில்லியில் முகாமிட்டுள்ளார். அவரிடம் இதுபற்றி கேட்டதற்கு, தவறு நடந்துவிட்டது. அதற்காக நாங்கள் மன்னிப்பு கேட்டுக்கொள்கிறோம் என்று தெரிவித்தார்.

பின்னர் ஒரு சில மணி நேரத்தில் சரியான வரைபடத்தை கொமன்வெல்த் விளையாட்டு கூட்டமைப்பு வெளியிட்டது.

# தெலுங்கானா காங்கிரஸாரின் புதுடில்லிப் பயணம் திடீர் ரத்து

ஐதராபாத், ஜன. 28

கட்சி மேலிடத்தின் உத்தரவை அடுத்து, தெலுங்கானாப் பகுதி காங்கிரஸ் தலைவர்கள் தங்களது டில்லிப் பயணத்தை ரத்து செய்தனர்.

தெலுங்கானா தனி மாநிலம் அமைக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி, அந்தப் பகுதியைச் சேர்ந்த காங்கிரஸ் எம்.எல்.ஏ. மற்றும் எம்.பிக்கள், அரசுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியுள்ளனர். தங்கள் கோரிக்கையை கட்சி மேலிடத் தலைவர்களிடம் வலியுறுத்துவதற்காக அவர்கள் கடந்த திங்களன்று டில்லி புறப்படத் தயாராக இருந்தனர்.

இதற்கிடையே, கட்சியின் பொதுச் செயலரும், மத்திய அமைச்சருமான வீரப்ப மொய்லி, தெலுங்கானா விவகாரத்தில் மத்திய அரசு சார்பில் விரைவில் முடிவு அறிவிக்கப்படும். எனவே, கட்சி நிர்வாகிகள் எவரும் டில்லிக்கு வரவேண்டாம் என அறிவுறுத்தினார்.

இதையடுத்து, தெலுங்கானாப் பகுதி காங்கிரஸ் எம்.எல்.ஏ. மற்றும் எம்.பிக்கள், தங்களது டில்லிப் பயணத்தை ரத்து செய்தனர். ஏற்கனவே டில்லி சென்ற ஜனா ரெட்டி, தாமோதர் ரெட்டி ஆகிய எம்.எல்.ஏக்கள் நேற்றுமுன்தினம் உடனடியாக ஐதராபாத் திரும்பினர்.



புதுடில்லியில் நேற்றுமுன்தினம் நடந்த குடியரசு தின விழாவில் அணிவகுப்பு மரியாதையை பிரதமர் மன்மோகன்சிங் ஏற்றுக்கொண்டபோது....

# மனிதனை விண்வெளிக்கு அனுப்ப ரூபா 12 ஆயிரம் கோடியில் ஏவுதளம்

## ஸ்ரீஹரிகோட்டாவில் அமைப்பு

ஸ்ரீஹரிகோட்டா, ஜன. 28

மனிதனை விண்வெளிக்கு அனுப்புவதற்காக சென்னையை அடுத்த ஸ்ரீஹரிகோட்டாவில் ரூபா 12 ஆயிரம் கோடி செலவில் புதிய ரொக்கெட் ஏவுதளம் அமைக்கப்படுகிறது.

சென்னை அருகே ஆந்திர மாநிலத்தில் உள்ள ஸ்ரீஹரிகோட்டாவில் ரொக்கெட் ஏவுதளம் உள்ளது. இங்கிருந்து, ரொக்கெட்டுகள் மூலம் செயற்கை கோள்கள் விண்ணுக்கு செலுத்தப்படுகின்றன.

இங்குள்ள முதல் ஏவுதளம் கடந்த 1971 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. 2 ஆவது ஏவுதளம் 2005 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. அடுத்த கட்டமாக விண்வெளிக்கு மனிதனை அனுப்புவதற்காக ஸ்ரீஹரிகோட்டாவில் ரூபா 12 ஆயிரம் கோடி செலவில் 3 ஆவது ஏவுதளம் ஒன்று அமைக்கப்பட இருக்கிறது.

குடியரசு தினத்தையொட்டி, ஸ்ரீஹரிகோட்டா விண்வெளி நிலையத்தில் அதன் தலைவர் சந்திரதத்தன் நேற்று முன் தினம் தேசியக் கொடியை ஏற்றி வைத்து பேசுகையில் இந்தத் தகவலை தெரிவித்தார்.

3 ஆவது ஏவுதளத்தின் கட்டுமான பணி இன்னும் 6 மாதங்களில் தொடங்கும் என்றும், 2015ஆம் ஆண்டில் அந்த ஏவுதளம் பயன்பாட்டுக்கு வரும் என்றும் அப்போது அவர் கூறினார்.

# கும்மிடிப்பூண்டி இலங்கை அகதிகள் முகாமில் ஊட்டச்சத்து வழங்கிய குழந்தைகளுக்கு வாந்தி

கும்மிடிப்பூண்டி, ஜன. 28

கும்மிடிப்பூண்டி இலங்கைத் தமிழர் அகதிகள் முகாமில் இந்திய செஞ்சிலுவை சங்கத்தின் சார்பில் குழந்தைகள் நல காப்பகம் ஒன்று உள்ளது. இதில் 50 அகதிக் குழந்தைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

இந்தக் குழந்தைகளுக்கு மாதர்பாக்கம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து 50 போத்தல்கள் இரும்புச் சத்து கலவை வந்தது. இதில் 5 போத்தல்கள் கலவையை கிராம செவிலியர் குழந்தைகளுக்குக் கொடுத்தார்.

இந்தக் கலவையைச் சாப்பிட்ட சில நிமிடங்களிலேயே 10 குழந்தைகள் திடீரென வாந்தி எடுத்து மயங்கி விழுந்தன. சிலருக்கு பேதியும் ஏற்பட்டது. இதையடுத்து பாதிக்கப்பட்ட குழந்தைகள் தனியார் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க் கப்பட்டனர். இதுபற்றி சுகாதாரத்துறை உயர் அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# இந்தியா - பாகிஸ்தான் இடையே 3 மணிநேரம் துப்பாக்கிச் சண்டை

## தீவிரவாதிகளின் ஊடுருவல் முறியடிப்பு

ஜம்மு, ஜன. 28

இந்தியா - பாகிஸ்தான் இராணுவத்தினர் இடையே குடியரசு தினமான நேற்றுமுன்தினம் அதிகாலையில் 3 மணி நேரம் துப்பாக்கி சண்டை நடந்தது.

இந்தியா முழுவதும் நேற்றுமுன்தினம் குடியரசு தினம் சிறப்பாக நடந்தது. அதே நேரத்தில் நேற்றுமுன்தினம் அதிகாலை 2 மணிக்கு இந்திய எல்லையை நோக்கி பாகிஸ்தான் இராணுவத்தினர் துப்பாக்கியால் சுட்டனர். ஜம்முவில் இருந்து 25 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள கானாசாக் மலைப்பகுதியில் பாதுகாப்புப் பணியில், எல்லைப் பாதுகாப்புப் படையினர் ஈடுபட்டனர். பாகிஸ்தான் தரப்பில் இருந்து துப்பாக்கியால் சுட்டதும் இந்திய இராணுவத்தினர் உஷாரானார்கள்.

உடனே பாகிஸ்தான் இராணுவத்தினரை நோக்கி இந்திய இராணுவத்தினர் துப்பாக்கியால் திருப்பி சுட்டனர். இந்தத் துப்பாக்கிச் சண்டை 3 மணிநேரம் நடந்தது. அதிகாலை 5 மணிக்குத் துப்பாக்கிச் சண்டை முடிவுக்கு வந்தது. இதில் இந்தியச் சிப்பாய் ஒருவர் காயமடைந்தார்.

பாகிஸ்தான் இராணுவத்தினருடன் துப்பாக்கிச் சண்டை நடந்து கொண்டிருந்தபோதே பாகிஸ்தான் எல்லைக்குள் இருந்து சில தீவிரவாதிகள் பனிப்பொழிவை பயன்படுத்தி இந்திய எல்லைக்குள் ஊடுருவ முயன்றனர். உடனே அவர்கள் மீது இந்திய இராணுவத்தினர் துப்பாக்கியால் சுட்டனர். இதைத்தொடர்ந்து, தீவிரவாதிகள் பாகிஸ்தான் பகுதிக்குள் பின்வாங்கிக்கொண்டனர்.

இதுபற்றி எல்லைப் பாதுகாப்புப் படை டி.ஜி.பி.குல்தீப் கோடா கூறுகையில், அத்துமீறல் நடந்த இடத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. அங்குள்ள நிலைமையை உன்னிப்பாக கவனித்து வருகிறோம் - என்றார்.

காஷ்மீரில் பெலிஜியா மாக் என்ற இடத்திலும் நேற்றுமுன்தினம் அதிகாலை பாகிஸ்தான் - இந்திய இராணுவத்தினர் இடையே துப்பாக்கி சண்டை நடந்தது. இந்த துப்பாக்கி சண்டை ஒன்றரை மணி நேரம் நீடித்தது. அங்கும் தீவிரவாதிகள், இந்திய எல்லைக்குள் ஊடுருவ முயன்றனர். இந்த முயற்சியை இந்திய இராணுவத்தினர் தடுத்து விட்டனர்.

பூஞ்ச் பகுதியிலும் பாகிஸ்தான் இராணுவத்தினர் அத்துமீறி இந்திய எல்லைக்குள் பீரங்கியால் சுட்டனர். உடனே இந்திய இராணுவத்தினர் பதிலடி கொடுத்தனர். இதைத்தொடர்ந்து சுடுவதை பாகிஸ்தானியர் நிறுத்திக்கொண்டனர். பாகிஸ்தானியர் பீரங்கியால் சுட்டபோது, சில குண்டுகள் வெடிக்காமல் இந்திய எல்லைக்குள் கிடந்தன.

**இந்தியச் செய்திகள்**

# புதிய வாகனங்களைப் பதிவு செய்வதில் ஈழத் தமிழ் அகதிகளுக்கு சிக்கல் நிலை

விருதுநகர், ஜன.28

தமிழகத்தில் இலங்கை அகதிகள், தங்களது புதிய வாகனங்களைப் பதிவு செய்ய முடியாமல் தவித்து வருகின்றனர். தங்களுக்கு சாரதி உரிமம் வழங்குவதற்கான கட்டுப்பாடுகளைத் தளர்த்த வேண்டும் என்று அகதிகள் கோரிக்கை விடுத்தனர்.

இதையடுத்து, கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு முகாம் அலுவலரிடம் அங்கிருப்பதற்கான சான்றும், கல்வி, வயது சான்று வழங்கினால் சாரதி உரிமம் வழங்கப்படும் என சலுகை அளிக்கப்பட்டது.

அகதிகள், தங்கு தடையின்றி சாரதி உரிமம் பெற்று வருகின்றனர்.

சாரதி உரிமம் பெற்றவர்கள் சொந்தமாக வாகனங்கள் வாங்கி வருகின்றனர். புதிய வாகனங்களை பதிவுசெய்ய வட்டார போக்குவரத்து அலுவலகங்களில் மறுக்கப்படுகிறது என அகதிகள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

மத்திய வாகன சட்டம் தெரிவிக்கையில், இந்தியக் குடியுரிமை அல்லாதவர்களுக்கு சட்டப்படியாக தங்குவதற்கான சான்றுகள் இருந்தால் வாகனப்பதிவு செய்யலாம் என்கிறது. இதன்படி வெளிநாட்டினர் என்றால் அவர்களது விஸா, கடவுச்சீட்டுச் சான்றுகள் மூலம் வாகனப் பதிவு அனுமதிக்கலாம் என அறிவுறுத்துகிறது.

இலங்கை அகதிகளுக்கு, தமிழக அரசு மனிதாபிமான அடிப்படையில் மட்டுமே ரேஷன் கார்டுகள் மற்றும் சலுகைகள் வழங்கி வருகிறது. அகதிகள், இந்தியப் பிரஜை இல்லை என்பதால் அவர்களது சொந்த வாகனங்களைப் பதிவு செய்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தொடர் இந்தியா வசம்!

இந்தியா- பங்களாதேஷ் அணிகள் மோதிய 2ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி வெற்றிகொண்டது. இதன்மூலம் தொடரையும் கைப்பற்றியது.

மிர்புரில் நடந்த இரண்டாவது டெஸ்டின் முதல் இன்னிங்ஸில் பங்களாதேஷ் 233 ஓட்டங்களையும், இந்தியா 544 ஓட்டங்களையும் பெற்றன.

பின்னர் 311 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் தனது 2ஆவது இன்னிங்ஸை விளையாடிய பங்களாதேஷ் அணி நேற்று முன்தினம் 3ஆவது நாள் ஆட்ட நேர முடிவின்போது 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 228 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது. ஆரம்ப வீரரான தமிம் இக்பால் அபாரமாக ஆடி 151 ஓட்டங்களைக் குவித்தார்.

தொடர்ந்து நேற்று தனது இன்னிங்ஸைத் தொடர்ந்த பங்களாதேஷ் அணிக்கு, இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்ப்பதற்காக மேலும் 83 ஓட்டங்கள் தேவைப்பட்டன. கைவசம் 7 விக்கெட்டுகள் இருந்தன.

4ஆவது விக்கெட்டுக்காக இணைந்திருந்த ஜோடியை ஹர்பஜன்சிங் பிரித்தார். சதாத் உசேன் 40 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அப்போது பங்களாதேஷ் அணி 290 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

ஓஜாவின் அபாரமான பந்துவீச்சால் அஸ்ரப் 25 ஓட்டங்களுடனும், அணித் தலைவர் சஹீப் - அல்ஹசன் 7 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

அதைத்தொடர்ந்து சஹீர்கானின் அபாரமான பந்துவீச்சால் விக்கெட்டுகள் தொடர்ந்து சரிந்தன. ஒரே ஓவரில் அவர் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியவை சிறப்பம்சம்.

இறுதியில் பங்களாதேஷ் அணி 312 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தது.

இந்திய அணி சார்பாக பந்துவீச்சில், சஹீர்கான் 7 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். டெஸ்ட் போட்டிகளில் அவரது சிறந்த பந்துவீச்சு இதுவாகும்.

இந்த டெஸ்டில் அவர் மொத்தம் 10 விக்கெட்டுகளைக் கைப்பற்றி முத்திரை பதித்தார்.

பின்னர் 2 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்கோடு களமிறங்கிய இந்திய அணி, 2ஆவது பந்திலேயே இலக்கை அடைந்தது. இதன்மூலம் இந்திய அணி, 10 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

சஹீர்கான் ஆட்ட நாயகனாகவும், தொடர் நாயகனாகவும் தெரிவுசெய்யப்பட்டார்

இந்த வெற்றி மூலம் இந்தியா 2-0 என்ற கணக்கில் தொடரைக் கைப் பற்றியது. முதல் டெஸ்டில் இந்தியா 114 ஓட்டங்களால் வெற்றி பெற்றிருந்தது.

தொடரை வென்றதன் மூலம் இந்தியா தரவரிசையில் தொடர்ந்து முதலிடத்தைத் தக்கவைத்துள்ளது.





# மூன்றாவது போட்டியிலும் ஆஸ்திரேலியா வெற்றி தொடரை பரிதாபமாக இழந்தது பாகிஸ்தான்

அடிலெய்ட், ஜன. 28

பாகிஸ்தானுக்கு எதிரான மூன்றாவது ஒரு நாள் போட்டியில், 40 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஆஸ்திரேலியா வெற்றி பெற்றது. இதன் மூலம் 3-0 என்ற கணக்கில் ஒரு நாள் தொடரையும் வென்றது.

ஆஸ்திரேலியா சென்றுள்ள பாகிஸ்தான் அணி 5 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது.



ஏற்கனவே நடந்துமுடிந்த முதல் 2 போட்டிகளிலும் வென்ற ஆஸ்திரேலிய அணி, 2-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றிருந்தது.

இந்நிலையில் முக்கியமான 3ஆவது போட்டி நேற்றுமுன்தினம் அடிலெய்டில் நடந்தது.

நாணயச் சுழற்சியில் வென்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அதன்படி ஆஸ்திரேலிய அணி சார்பாக வோட்ஷன், மார்ஷ் இருவரும் சிறப்பான ஆரம்பம் கொடுத்தனர். வேகமாக ஆட்டங்களைக் குவித்த வோட்சன் 33 ஓட்டங்களுடன் வெளியேறினார். அடுத்து வந்த அணித்தலைவர் பொண்டிங், 'டக்-அவுட்டானார்.

அவரைத் தொடர்ந்து கிளார்க் (80), மார்ஷ் (83) ஆகியோர் இணைந்து சிறப்பாக ஆடி ஓட்டங்களைக் குவித்தனர்.

நடுவரிசையில் களமிறங்கிய ஹசி, 28 பந்துகளில் 49 ஓட்டங்களை விளாச, 50 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுகளை இழந்த ஆஸ்திரேலிய அணி, 286 ஓட்டங்களை எடுத்தது.

பாகிஸ்தான் அணி சார்பாகப் பந்து வீச்சில், உமர் குல், நவீட் உல் ஹஸன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும், மொஹமட் ஆஸிப், சயீத் அஜ்மல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர்.

பின்னர் சற்றுக் கடினமான இலக்கை விரட்டிய பாகிஸ்தான் அணிக்கு ஆரம்பமே சரியாக அமையவில்லை. கம்ரன் அக்மல் (1), யூனிஸ்கான் (12), அணித்தலைவர் முகமது யூசுப் (11) ஆகியோர் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். சல்மான் பட் (34) ஓரளவு ஓட்டங்களைச் சேர்த்தார்.

பின்னர் வந்த வீரர்களில் உமர் அக்மல், பவத் ஆலம் ஆகியோர் இணைந்து அணியை மீட்டனர். அரைச் சதம் கடந்த உமர் அக்மல் 59 ஓட்டங்களுடன் ஆட்ட மிழந்தார்.

ஆலம் (33) ஆறுதல் அளித்தார். அடுத்து வந்த அப்ரிடி அதிரடியாக ஆடி, தனது பங்கிற்கு 40 ஓட்டங்களைச் சேர்த்தார்.

குல் (0), ஆசிப் (1) ஆகியோர் சோபிக்கத் தவறினர். இறுதியில் பாகிஸ்தான் அணி, 47.4 ஓவர்கள் முடிவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து, 246 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

இதன்மூலம் 40 ஓட்டங்களால் ஆவுஸ்திரேலிய அணி வெற்றிபெற்றது.

ஆஸ்திரேலிய அணி சார்பாக பந்துவீச்சில் 5 விக்கெட்டுகளை வீழ்த்திய ஹரிஸ், ஆட்ட நாயகனாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

இந்த வெற்றியின் மூலம் ஐந்து போட்டிகளைக் கொண்ட தொடரை 3-0 கணக்கில் ஆஸ்திரேலியா தன்வசப்படுத்தியது.

ஏற்கனவே நடந்துமுடிந்த டெஸ்ட் தொடரை இழந்த பாகிஸ்தான் அணி, தற்போது ஒருநாள் தொடரையும் கோட்டை விட்டுள்ளது.

# தென்னாபிரிக்கப் பயிற்றுவிப்பாளர் ராஜினாமா



தென்னாபிரிக்கக் கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக இருந்த மிக்கி ஆர்தர், திடீரென தனது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார். இதையடுத்து இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கான தற்காலிக பயிற்சியாளராக வோன் ஜில், நியமிக்கப்பட்டுள்ளார்.

தென்னாபிரிக்க அணியின் பயிற்சியாளராகக் கடந்த 2005ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டவர் மிக்கி ஆர்தர். 2 ஆண்டு பதவிக்காலம் முடிந்தும், பலமுறை இவருக்குப்பதவி நீடிப்புச் செய்யப்பட்டது. இவர் தலைமையில் தென்னாபிரிக்க அணி பல வெற்றிகளைப் பெற்றபோதும், சமீபத்தில் சொந்த மண்ணில் நடந்த மினி உலகக் கிண்ணத் தொடரில் தென்னாபிரிக்க அணி, அரையிறுதிக்குக் கூட முன்னேறவில்லை.

இதுதவிர, இங்கிலாந்துக்கு எதிராக ஒருநாள் தொடரையும் இழந்தமை மற்றும் டெஸ்ட் தொடரை சமனிலையில் முடித்தமை போன்றவை இவரை அதிகம் பாதித்து விட்டது எனக் கூறப்படுகிறது.

2012ஆம் ஆண்டுவரை பயிற்சியாளராகத் தொடரவிருந்த இவர், தென்னாபிரிக்கக் கிரிக்கெட் சபைத் தலைவரான ஜெரால்ட் மஜோலாவைச் சந்தித்த பின்னரே திடீரென பயிற்சியாளர் பதவியை ராஜினாமாச் செய்தார்.

இதுகுறித்து ஆர்தர் கூறியவை வருமாறு:-

''எனது பயிற்சிக் காலத்தில் ஆவுஸ்திரேலியா, இங்கிலாந்து அணிகளை அவர்களின் சொந்த மண்ணில் வைத்தே வீழ்த்தியமையானது பெருமையாக உள்ளது.

''இதுதவிர, கடந்த ஓர் ஆண்டில் தென்னாபிரிக்க அணியை டெஸ்ட் மற்றும் ஒரு நாள் தரவரிசைப் பட்டியலில் முதலிடம் பெறச்செய்தேன்.

''இந்தியாவுக்கு எதிரான தொடரில் விளையாடுவதற்குத் தென்னாபிரிக்க அணி தயாராகவுள்ள நிலையில், பதவி விலகியிருப்பது மிகவும் வருத்தம்தான். ஆனால், எந்த ஒரு நல்லதுமே, முடிவுக்கு வரத்தான் செய்யும். நான் பதவி விலக இதுதான் சரியான நேரம். இனி இதுபோன்ற சரியான நேரம் கிடைக்காது. இந்த இடத்துக்கு வேறொருவர் வருவதற்கு நேரம் வந்து விட்டது'' - என்றார்.

சொந்த மண்ணில் தென்னாபிரிக்க அணி அடைந்த தோல்வியால் மட்டும் மிக்கி ஆர்தர், பதவி விலகலுக்கு காரணமல்ல என்றும் - அணித்தலைவர் கிரேம் ஸ்மித்துடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடும் ஒரு காரணம் எனவும் கூறப்படுகிறது.

இதையடுத்து ஆர்தரின் இடத்திற்கு இந்தியா வரும் தென்னாபிரிக்க அணிக் காக வோன்ஜில் தற்காலிகப் பயிற்சி யாளராக இருப்பார் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# டெஸ்ட்-ஒருநாள் போட்டிகளுக்கும் தலைவராகச் செயற்படத் தயார்

மெல்போர்ண், ஜன. 28

டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளிலும் பாகிஸ்தான் அணிக்கு அணித் தலைவராகச் செயற்படத் தயார் என்று அவ்வணியின் சகலதுறை வீரரான அப்ரிடி தெரிவித்துள்ளார்.



தற்போது பாகிஸ்தான் 'ருவென்ரி-20' அணியின் தலைவராக அப்ரிடி செயற்பட்டு வருகிறார்.

நேற்றுமுன்தினம் ஆஸ்திரேலியாவுடனான போட்டியில் தோற்றதன் மூலம் தொடரை பாகிஸ்தான் அணி இழந்ததன் பின்னர் கருத்துக் கூறும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு:-

''டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளிலும் பாகிஸ்தான் அணிக்குத் தலைவராக இருக்க வேண்டும் என்று அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. எனது திறமையில் நம்பிக்கை வைத்திருக்கும் தெரிவுக் குழுவினர் மற்றும் கிரிக்கெட் சபைக்கு இதற்கு நான் நன்றி கூறுகிறேன்.

ஆஸ்திரேலிய அணியுடன் தற்போது நடந்துகொண்டிருக்கும் தொடர் முழுவதற்கும் முகமது யூசுப்புக்கு முழு ஆதரவு கொடு[illegible] வீரர்கள் அனைவரும் ஒற்று[illegible] உள்ளனர்'' - என்றார்.

# ஐ.பி.எல். தொடரில் விளையாடும் வாய்ப்பு பாக். வீரர்களுக்கு உண்டு!

புதுடில்லி, ஜன. 28

''ஐ.பி.எல். கிரிக்கெட்டில் பாகிஸ்தான் வீரர்கள் பங்கேற்பதற்கான வாய்ப்புகள் இன்னும் உள்ளன'' - என்று ஐ.பி.எல். தலைவரான லலித் மோடி தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல். கிரிக்கெட்டுக்கான வீரர்களைத் தெரிவுசெய்யும் ஏலத்தில் 11 பாகிஸ்தான் வீரர்களை எந்த அணியும் ஏலம் கேட்காதமையால் சர்ச்சை உருவானது. வேண்டுமென்றே தங்கள் நாட்டு வீரர்களை புறக்கணித்து அவமதித்து விட்டனர் எனவும் பாகிஸ்தான் அரசு குற்றம் சாட்டியது.

இந்த நிலையிலேயே லலித் மோடி இவ்வாறு கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு:-

''3ஆவது ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் வீரர்கள் பங்கேற்பதற்கான வாய்ப்பு இன்னும் உள்ளது.

''சில அணிகள் இன்னும் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட வீரர்களுக்கான இடத்தை முழுமையாக நிரப்பவில்லை. மேலும், ஒரு சில வீரர்கள் ஆட விரும்பாமல் விலகலாம். அவர்களுக்குப் பதிலாக பாகிஸ்தான் வீரர்களை மாற்று வீரர்களாகப் பயன்படுத்தலாம் அல்லது தேவையான இடத்திற்கு நிரப்பலாம்.

''பாகிஸ்தான் வீரர்களை ஏலம் எடுக்காதமைக்கு முன்கூட்டியே திட்டமிடல் எதுவும் கிடையாது. இங்கு எந்தத் தவறான அணுகுமுறைகளும் நடக்கவில்லை. வீரர்களை ஏலம் எடுப்பது ஒவ்வொரு அணியினதும் சொந்த முடிவு. இந்த விவகாரத்தில் அரசின் தலையீடும் எதுவும் கிடையாது'' - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்ட ரீதியான தேர்தல் முடிவுகள்

## யாழ்.மாவட்டம்

| வேட்பாளர் பெயர் | பெற்ற வாக்குகள் | விகிதா சாரம் |
|---|---|---|
| சரத்பொன்சேகா | 113,877 | 63.84 |
| மஹிந்த ராஜபக்ஷ | 44,154 | 24.75 |
| முகமட் இஸ்மாயில் | 3,370 | 1.89 |
| சன்னா ஜானக சுகத் ஸ்ரீ | 3,325 | 1.86 |
| எம்.கே.சிவாஜிலிங்கம் | 3,285 | 1.80 |
| செல்லுபடியான வாக்குகள் | 178,369 | 96.35 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 6,763 | 3.65 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | 185,132 | 25.66 |

## வன்னி மாவட்டம்

| | | |
|---|---|---|
| சரத் பொன்சேகா | 70,367 | 66.86% |
| மஹிந்த ராஜபக்ஷ | 28,740 | 27.31% |
| முகமட் இஸ்மாயில் | 2,021 | 1.92% |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 105,252 | 97.75% |
| செல்லுபடியற்ற வாக்குகள் | 2,428 | 2.25% |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | 107,680 | 40.33% |

## திருகோணமலை மாவட்டம்

| | | |
|---|---|---|
| சரத் பொன்சேகா | 87,661 | 54.09% |
| மஹிந்த ராஜபக்ஷ | 69,572 | 43.04% |
| முகமட் இஸ்மாயில் | 1,115 | 0.69% |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 162,072 | 98.52% |
| செல்லுபடியற்ற வாக்குகள் | 2,432 | 1.48% |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | 164,504 | 68.22% |

## திகாமடுல்ல மாவட்டம்

| | | |
|---|---|---|
| சரத் பொன்சேகா | 153,105 | 49.94% |
| மஹிந்த ராஜபக்ஷ | 146,912 | 47.92% |
| முகமட் இஸ்மாயில் | 1,270 | 0.41% |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 306,562 | 99.06% |
| செல்லுபடியற்ற வாக்குகள் | 2,912 | 0.94% |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | 309,474 | 73.54% |

## மட்டக்களப்பு மாவட்டம்

| | | |
|---|---|---|
| சரத் பொன்சேகா | 146,057 | 68.93% |
| மஹிந்த ராஜபக்ஷ | 55,663 | 26.27% |
| முகமட் இஸ்மாயில் | 3,016 | 1.42% |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 211,891 | 97.97% |
| செல்லுபடியற்ற வாக்குகள் | 4,396 | 2.03% |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | 216,287 | 64.83% |

## இரத்தினபுரி மாவட்டம்

| | | |
|---|---|---|
| மஹிந்த ராஜபக்ஷ | 377,734 | 63.76% |
| சரத்பொன்சேகா | 203,566 | 34.36% |
| முகமட் இஸ்மாயில் | 1,767 | 0.30% |
| செல்லுபடியான வாக்குகள் | 592,426 | 99.26% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 4,430 | 0.74% |
| மொத்த வாக்குகள் | 734,651 | 81.24 |

## நுவரெலியா மாவட்டம்

| | | |
|---|---|---|
| சரத்பொன்சேகா | 180,604 | 52.14% |
| மஹிந்த ராஜபக்ஷ | 151,604 | 43.77% |
| முகமட் இஸ்மாயில் | 4,134 | 1.19% |
| செல்லுபடியான வாக்குகள் | 346,382 | 98.17% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 6,462 | 1.83% |
| மொத்த வாக்குகள் | 352,844 | 77.19% |

## காலி மாவட்டம்

| | | |
|---|---|---|
| மஹிந்த ராஜபக்ஷ | 386,971 | 63.69% |
| சரத்பொன்சேகா | 211,633 | 34.83% |
| அசல அசோகா | 1,770 | 0.29% |
| செல்லுபடியான வாக்குகள் | 607,621 | 99.38% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 3,765 | 0.62% |
| மொத்த வாக்குகள் | 611,386 | 80.25 |

## மாத்தறை மாவட்டம்

| | | |
|---|---|---|
| மஹிந்த ராஜபக்ஷ | 296,155 | 65.53% |
| சரத்பொன்சேகா | 148,510 | 32.86% |
| அசல அசோகா | 1,381 | 0.31% |
| செல்லுபடியான வாக்குகள் | 451,929 | 99.34% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 3,025 | 0.66% |
| மொத்த வாக்குகள் | 454,954 | 78.60% |

## கொழும்பு மாவட்டம்

| | | |
|---|---|---|
| மஹிந்த ராஜபக்ஷ | 614,740 | 52.93% |
| சரத்பொன்சேகா | 533,022 | 45.90% |
| அனுரா லியனகே | 1,798 | 0.15% |
| செல்லுபடியான வாக்குகள் | 1,161,382 | 99.03% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 11,394 | 0.97% |
| மொத்த வாக்குகள் | 1,172,776 | 77.06% |

## களுத்துறை மாவட்டம்

| | | |
|---|---|---|
| மஹிந்த ராஜபக்ஷ | 412,562 | 63.06% |
| சரத்பொன்சேகா | 231,807 | 35.43% |
| முஹமட் இஸ்மாயில் | 1,683 | 0.26% |
| செல்லுபடியான வாக்குகள் | 654,249 | 99.31% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 4,541 | 0.69% |
| மொத்த வாக்குகள் | 658, 790 | 81.01% |

## குருநாகல் மாவட்டம்

| | | |
|---|---|---|
| மஹிந்த ராஜபக்ஷ | 582,784 | 63.08% |
| சரத்பொன்சேகா | 327,594 | 35.46% |
| முஹமட் இஸ்மாயில் | 3,112 | 0.34% |
| செல்லுபடியான வாக்குகள் | 923,893 | 99.29% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 6,644 | 0.71% |
| மொத்த வாக்குகள் | 930,537 | 78.62% |

## புத்தளம் மாவட்டம்

| | | |
|---|---|---|
| மஹிந்த ராஜபக்ஷ | 201,981 | 58.70% |
| சரத்பொன்சேகா | 136,233 | 39.59% |
| முஹமட் இஸ்மாயில் | 1,415 | 0.41% |
| செல்லுபடியான வாக்குகள் | 344, 113 | 99.17% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 2,886 | 0.83% |
| மொத்த வாக்குகள் | 346,999 | 70.02% |

## அனுராதபுரம் மாவட்டம்

| | | |
|---|---|---|
| மஹிந்த ராஜபக்ஷ | 298,448 | 66.32% |
| சரத்பொன்சேகா | 143,761 | 31.94% |
| முஹமட் இஸ்மாயில் | 1,921 | 0.43% |
| செல்லுபடியான வாக்குகள் | 450, 038 | 99.17% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 3,785 | 0.83% |
| மொத்த வாக்குகள் | 453,823 | 78.35% |

## பதுளை மாவட்டம்

| | | |
|---|---|---|
| மஹிந்த ராஜபக்ஷ | 237,579 | 53.23% |
| சரத்பொன்சேகா | 198,835 | 44.55% |
| முஹமட் இஸ்மாயில் | 1,292 | 0.29% |
| செல்லுபடியான வாக்குகள் | 446, 294 | 98.66% |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 6,083 | 1.34% |
| மொத்த வாக்குகள் | 452,377 | 78.70% |

## கண்டி மாவட்டம்

| | | |
|---|---|---|
| மகிந்த ராஜபக்ஷ | 406,636 | 54.16% |
| சரத் பொன்சேகா | 329,492 | 43.89% |
| மொகமட் இஸ்மாயில் | 2810 | 0.37% |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 750,786 | 98.85% |
| செல்லுபடியற்ற வாக்குகள் | 8700 | 1.15% |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | 759,486 | 78.26% |

## மாத்தளை மாவட்டம்

| | | |
|---|---|---|
| மகிந்த ராஜபக்ஷ | 157,953 | 59.74% |
| சரத் பொன்சேகா | 100,513 | 38.01% |
| மொகமட் இஸ்மாயில் | 1105 | 0.42% |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 264,419 | 99.00% |
| செல்லுபடியற்ற வாக்குகள் | 2666 | 1.00% |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | 267,085 | 77.94% |

## அம்பாந்தோட்டை மாவட்டம்

| | | |
|---|---|---|
| கிந்த ராஜபக்ஷ | 226,887 | 67.21% |
| சரத் பொன்சேகா | 105,336 | 31.00% |
| அச்சலா அசோக சுரவீர | 957 | 0.28% |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 337,564 | 99.35% |
| செல்லுபடியற்ற வாக்குகள் | 2218 | 0.65% |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | 339,782 | 80.67% |

## பொலன்னறுவை மாவட்டம்

| | | |
|---|---|---|
| மகிந்த ராஜபக்ஷ | 144,889 | 64.92% |
| சரத் பொன்சேகா | 75,026 | 33.62% |
| முகமட் இஸ்மாயில் | 619 | 0.28% |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 223,175 | 99.34% |
| செல்லுபடியற்ற வாக்குகள் | 1,472 | 0.66% |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | 224,647 | 80.13% |

## கம்பஹா மாவட்டம்

| | | |
|---|---|---|
| மகிந்த ராஜபக்ஷ | 718,716 | 61.66% |
| சரத் பொன்சேகா | 434,506 | 37.28% |
| முகமட் இஸ்மாயில் | 2059 | 0.18% |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 1,165,648 | 99.24% |
| செல்லுபடியற்ற வாக்குகள் | 8,960 | 0.76% |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | 1,174,608 | 79.66% |

## மொனராகல மாவட்டம்

| | | |
|---|---|---|
| மஹிந்த ராஜபக்ஷ | 158,435 | 69.01% |
| சரத் பொன்சேகா | 66,803 | 29.10% |
| அசோக சுரவீர | 874 | 0.38% |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 229,584 | 99.02% |
| செல்லுபடியற்ற வாக்குகள் | 2,272 | 0.98% |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | 231,856 | 77.12% |

## கேகாலை மாவட்டம்

| | | |
|---|---|---|
| மஹிந்த ராஜபக்ஷ | 296,639 | 61.80% |
| சரத் பொன்சேகா | 174,877 | 36.44% |
| முகமட் இஸ்மாயில் | 1,377 | 0.29% |
| செல்லுபடியாகும் வாக்குகள் | 479,964 | 99.25% |
| செல்லுபடியற்ற வாக்குகள் | 3,604 | 0.75% |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | 483,568 | 78.76% |

# யாழ்ப்பாண மாவட்டத்தின் தொகுதி ரீதியான முடிவுகள்

### ஊர்காவற்றுறை

| | | |
|---|---|---|
| மஹிந்த ராஜபக்ஷ | 4,611 | 46.19% |
| சரத் பொன்சேகா | 3,976 | 39.83% |

### வட்டுக்கோட்டைத் தொகுதி

| | | |
|---|---|---|
| சரத் பொன்சேகா | 11,712 | 62.68% |
| மஹிந்த ராஜபக்ஷ | 4,247 | 22.73% |
| எம்.கே. சிவாஜிலிங்கம் | 500 | 2.68% |
| சுகத்சிறி கமஹே | 486 | 2.60% |
| முகமட் இஸ்மாயில் | 326 | 1.74% |

### காங்கேசன்துறை

| | | |
|---|---|---|
| சரத் பொன்சேகா | 8,216 | 56.90% |
| மஹிந்த ராஜபக்ஷ | 4,559 | 31.57% |
| சுகத்சிறி கமஹே | 283 | 1.96% |
| முகமட் இஸ்மாயில் | 254 | 1.76% |
| எம்.கே.சிவாஜிலிங்கம் | 207 | 1.43% |

### மானிப்பாய்

| | | |
|---|---|---|
| சரத் பொன்சேகா | 13,390 | 62.01% |
| மஹிந்த ராஜபக்ஷ | 5,749 | 26.62% |
| சுகத்சிறி கமஹே | 447 | 2.07% |
| முகமட் இஸ்மாயில் | 391 | 1.81% |
| எம்.கே.சிவாஜிலிங்கம் | 231 | 1.07% |

### கோப்பாய்த் தொகுதி

| | | |
|---|---|---|
| சரத் பொன்சேகா | 13,151 | 64.13% |
| மஹிந்த ராஜபக்ஷ | 4,538 | 22.13% |
| முகமட் இஸ்மாயில் | 528 | 2.57% |
| சுகத்சிறி கமஹே | 471 | 2.30% |
| எம்.கே.சிவாஜிலிங்கம் | 306 | 1.49% |

### உடுப்பிட்டி

| | | |
|---|---|---|
| சரத் பொன்சேகா | 8,974 | 67.20% |
| மஹிந்த ராஜபக்ஷ | 2,545 | 19.06% |
| எம்.கே.சிவாஜிலிங்கம் | 334 | 2.50% |
| சுகத்சிறி கமஹே | 314 | 2.35% |
| முகமட் இஸ்மாயில் | 301 | 2.25% |

### பருத்தித்துறை

| | | |
|---|---|---|
| சரத் பொன்சேகா | 8,585 | 69.30% |
| மஹிந்த ராஜபக்ஷ | 2,361 | 19.06% |
| எம்.கே.சிவாஜிலிங்கம் | 326 | 2.63% |
| சுகத்சிறி கமஹே | 227 | 1.83% |
| முகமட் இஸ்மாயில் | 223 | 1.80% |
| விக்கிரமபாகு கருணரட்ண | 100 | 0.81% |

### சாவகச்சேரி

| | | |
|---|---|---|
| சரத் பொன்சேகா | 11,599 | 62.39% |
| மஹிந்த ராஜபக்ஷ | 4,567 | 24.57% |
| சுகத்சிறி கமஹே | 493 | 2.65% |
| எம்.கே. சிவாஜிலிங்கம் | 348 | 1.87% |
| முகமட் இஸ்மாயில் | 323 | 1.74% |

### நல்லூர்

| | | |
|---|---|---|
| சரத் பொன்சேகா | 11,543 | 70.42% |
| மஹிந்த ராஜபக்ஷ | 3,554 | 21.68% |
| சுகத்சிறி கமஹே | 231 | 1.41% |
| முகமட் இஸ்மாயில் | 196 | 1.20% |
| எம்.கே.சிவாஜிலிங்கம் | 173 | 1.06% |

### யாழ்ப்பாணம்

| | | |
|---|---|---|
| சரத் பொன்சேகா | 7,914 | 66.17% |
| மஹிந்த ராஜபக்ஷ | 3,296 | 27.56% |
| சுகத்சிறி கமஹே | 139 | 1.16% |
| எம்.கே.சிவாஜிலிங்கம் | 126 | 1.05% |
| முகமட் இஸ்மாயில் | 107 | 0.89% |
| அச்சலா அசோகசுரவீர | 50 | 0.42 |

### கிளிநொச்சி

| | | |
|---|---|---|
| சரத் பொன்சேகா | 4,717 | 75.11% |
| மஹிந்த ராஜபக்ஷ | 991 | 11.78% |
| முகமட் இஸ்மாயில் | 199 | 3.17% |
| சுகத்சிறி கமஹே | 45 | 0.72% |
| எம்.கே.சிவாஜிலிங்கம் | 42 | 0.67% |

# மட்டக்களப்பு மாவட்ட தேர்தல் முடிவுகள்

### கல்குடா

| | | |
|---|---|---|
| மஹிந்த ராஜபக்ஷ | 27,932 | 63.10% |
| சரத்பொன்சேகா | 15,260 | 34.47% |

### மட்டக்களப்பு

| | | |
|---|---|---|
| சரத்பொன்சேகா | 38,608 | 60.45% |
| மஹிந்த ராஜபக்ஷ | 20,112 | 34.14% |

### பாண்டிருப்பு

| | | |
|---|---|---|
| சரத்பொன்சேகா | 36,776 | 80.12% |
| மஹிந்த ராஜபக்ஷ | 5,968 | 13.00% |

### அம்பாறை

| | | |
|---|---|---|
| மஹிந்த ராஜபக்ஷ | 73,389 | 67.94% |
| சரத்பொன்சேகா | 32,895 | 30.45% |

### சம்மாந்துறை

| | | |
|---|---|---|
| சரத்பொன்சேகா | 36,776 | 80.12% |
| மஹிந்த ராஜபக்ஷ | 5,968 | 13.00% |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்தியாவின் 61 ஆவது குடியரசு நாளை முன்னிட்டு

இந்திய கலாசார நிலையம் வழங்கும்

ரஸோடிபனா - ரஸங்களின் உற்பத்தி

பரதநாட்டிய நிகழ்வு

புகழ்பூத்த நடன விற்பன்னர்கள்
ஸ்ரீதர் - அனுராதா தம்பதிகள் வழங்குகின்றார்கள்

காலம்:
ஜனவரி 28 வியாழன், மாலை 6 மணி
இடம்: திருமறைக் கலாமன்றம்
(கலைத்தூது கலையகம்) யாழ்ப்பாணம்

ஜனவரி 29 ஆம் திகதி
வெள்ளிக்கிழமை மாலை 6 மணி
இடம்: வீரசிங்கம் மண்டபம்
12 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

யாவரும் வரவேற்கப்படுகின்றனர். ஆசனங்களுக்கு முந்தி வருபவர்களுக்கு முன்னுரிமை.

மேலதிக விபரங்களுக்கு :
**இந்திய கலாசார நிலையம், கொழும்பு.**
தொ.பே: 0112500014, 2598674.

**அனுசரணை:**
⇨ யாழ்ப்பாணம் கலாசார மன்றம்
⇨ ஆயுள்காப்புறுதிக் கூட்டுத்தாபனம் (லங்கா) லிமிட்டட்
⇨ ICICI Bank இலங்கை
⇨ இந்தியன் ஓவர்ஸீஸ் வங்கி கொழும்புக் கிளை

## காணிகளை ஆக்கிரமிக்கும் குருநகர் மக்கள்

வண்ணை, ஜன.28

யாழ். - கடற்கரை வீதி, றேகடி, அலுப்பாந்தி மற்றும் பொலீஸ் நிலைய பழைய இடம் ஆகியவற்றில் அத்துமீறி காணிகளைப் பிடிப்பதற்கு குருநகர்ப் பகுதியைச் சேர்ந்த மக்கள் மிகுந்த ஆர்வம் காட்டுகின்றனர்.

ஆக்கிரமித்த காணித்துண்டங்களை அவர்கள் அடையாளப்படுத்த கம்புகள் நட்டு கயிறுகளால் எல்லை குத்திவைத்துள்ளதையும் காணக்கூடியதாக உள்ளது.

இந்தப்பகுதியில் இருந்த படையினரின் காவலரண்கள் அகற்றப்பட்டுள்ளதால், மக்கள் போட்டிபோட்டுக்கொண்டு அங்கு காணப்படும் வெளியான பிரதேசத்தை ஆக்கிரமித்துள்ளனர்.


இதேபோன்று 1990 ஆம் ஆண்டுப் பகுதிகளிலும் மக்கள் காணிகளைப் பிடித்ததும் பின்பு ஏற்பட்ட அனர்த்தங்கள் காரணமாக அவை கைவிடப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (ஓ-160)

## அராலி வடக்கில் மணவாளக் கோலத் திருவிழா

யாழ்ப்பாணம், ஜன.28

அராலி வடக்கு செட்டியாமடம் மண்டையன்திடல் வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மணவாளக்கோலத் திருவிழா இன்று வியாழக்கிழாமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும். பிற்பகல் 4 மணிக்கு சுவாமி வீதிவலம் வருவார். (ஓ)

## அருள்மிகு இணுவில் கந்தசுவாமி கோயில் தைப்பூசதின மஞ்சத்திருவிழா



நாளை மறுதினம் -சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு வசந்தமண்டபப் பூசை நடைபெற்று இரவு 7 மணிக்கு மின்சார தீபங்களால் அலங்கரிக்கப்பட்ட நூற்றாண்டுப் பழமை வாய்ந்த உலகப் பெருமஞ்சத்தில் திருவீதியுலா இடம் பெறும்.

(சி/564472)

அனுசரணையாளர்கள் :

து.இராமமூர்த்தி
மணவறை, முத்துச்சப்பரம்,
அன்னச்சோடனை, சாமி
அலங்காரம், பூவேலை மற்றும்
இதர வேலைகளைப் பெற்றிட
இணுவில் தெற்கு, இணுவில்.

ஐங்கரன் பந்தல்சேவை
விசேட வைபவங்களுக்கான
சுவையான உணவினைப்
பெற்றிட
இணுவில் மேற்கு.

## தீவக லயன்ஸின் வைத்திய சேவை

புங்குடுதீவு, ஜன.28

தீவக லயன்ஸ் கழகத்தின் சேவைத் திட்டங்கள் புங்குடுதீவு சர்வோதய புஸ்பாமணி மண்டபத்தில் அண்மையில் தீவக லயன்ஸ் கழகத் தலைவர் எஸ். சீவரெத்தினம் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டு வைத்திய சேவையைப் பெற்றுக் கொண்டனர் (ஓ-188)


### அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

1160 நீலம்

வெற்றி இலக்கங்கள்

விருச்சிகம் 10 11 28 30

26-01-2010

ஜக்பொட் பரிசு ரூபா. 2,000,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 116,219 | 20/- | 2,324,380/- |
| 2 இலக்கங்கள் | 10,728 | 40/- | 429,120/- |
| 1 இல. + லக்கினம் | 10,486 | 60/- | 629,160/- |
| 2 இல. + லக்கினம் | 989 | 200/- | 197,800/- |
| 3 இலக்கங்கள் | 273 | 1000/- | 273,000/- |
| 3 இல. + லக்கினம் | 25 | 10,000/- | 250,000/- |
| 4 இலக்கங்கள் | 2 | 200,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 2,000,000/- | - |
| மொத்தம் | | | 4,503,460/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 138,727 | | 5,003,460/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,518,750/-

ஆலிந்தயே வீாசனாவ

தங்கக்காசு வெற்றியாளர் : நீல் இரத்னசிரி களுத்துறை தெற்கு
கைத்தொலைபேசி வெற்றியாளர்: நிமல் பிரேமரத்ன வெலிவேரிய

2010 ஜனவரி 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்கள் சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| மாத்தளை | 400918546-4-34 |
| குருநாகல் | 400914210-6-41 |
| கொழும்பு | 400925995-7-40 |
| கண்டி | 400916247-4-38 |
| காலி | 400926095-9-04 |

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை



**விற்பனைக்கு**

HARA-5550, HARA New Model-8700, JUKI என்னும் தையல் இயந்திரங்கள், அவற்றுக்கான உதிரிப்பாகங்கள் என்பன கொழும்பு விலையில் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- சிற்றிசன் போய்ஸ் செலெக்சன் அன் ரெயிலறிங்
இல:01, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம் (மலாயன் கபே முன்பாக) தொ.இல: 0776143301
குறிப்பு:- ஆண்களுக்கான ஆடைகள் தைக்க அனுபவமானவர்கள் தேவை (ஆண்கள்)


## குடாநாட்டில் நேற்றைய தினமும் போக்குவரத்துச் சீரடையவில்லை

யாழ்ப்பாணம், ஜன.28

கடந்த இரண்டொரு தினங்களாக பாதிக்கப்பட்டிருந்த குடாநாட்டுப் போக்குவரத்துச் சேவைகள் நேற்றும் பெரியளவில் சீரடையவில்லை.

ஜனாதிபதித் தேர்தல் பணிகளுக்காக போக்குவரத்துச் சபை மற்றும் தனியார்துறை பஸ்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்ததால், போக்குவரது நிலைமைகள் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தன.

அந்தப் பணிகள் யாவும் முடிவுற்ற நிலையில் மற்றும் போக்கவரத்துச் சேவைகள் வழமைக்குத் திரும்பவில்லை. நேற்றுக்காலை ஓரளவு பஸ்கள் சேவையில் ஈடுபட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. எனினும் மாலை வேளை போக்குவரத்துச் சேவைகள் குறைந்து காணப்பட்டன.

இதேவேளை, யாழ். நகரப்பகுதியில் நேற்று மக்களின் நடமாட்டம் குறைவாகவே இருந்தது. நேற்று பொது விடுமுறைதினம் என்பதால், முக்கிய கருமங்கள் மற்றும் தேவைக்கே மக்கள் யாழ். வந்திருந்தனர்.

குடாநாட்டில் அசம்பாவிதங்கள் ஏதும் இடம்பெறவில்லை. மக்கள் சுமுகமாகத் தங்கள் பணிகளில் ஈடுபட்டிருந்தனர். யாழ்.நகரில் வர்த்தக நிலையங்கள் திறந்திருந்தன. (ஓ-14)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**அமரர் முத்து சுப்பையா**
(ஓய்வு பெற்ற உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை)

தோற்றம்
14★12★1925

மறைவு
27★12★2009

கடந்த 27.12.2009 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவர் முத்து சுப்பையா அவர்களின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு பல வழிகளில் உதவி புரிந்தோர்க்கும், அனுதாபச்செய்திகள் அனுப்பி ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (28.01.2010) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து பங்கேற்குமாறு தங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.3, ஸ்ரான்லிக்கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம். (94295)

குடும்பத்தினர்.
தொ.பேசி:021-2226590


**மணமகள் தேவை**

கௌரவமான குடும்பம், பிரபல பல்கலைக்கழகத்தில் கணனி போதனாசிரியராகக் கடமையாற்றும் 32 வயதுடைய மணமகனுக்கு 5'3" ஐ விட உயரமான மணமகள் தேவை.

தொடர்பு : 021 321 9984


## கண்ணீர் அஞ்சலி



எமது சக உத்தியோகத்தர் செல்வி காயத்திரி கணேசமூர்த்தி அவர்களின் அன்புத் தாயார்
திருமதி **சிவயோகசுந்தரி கணேசமூர்த்தி**
(நந்தாவில், கொக்குவில் கிழக்கு)
அவர்கள் 25.01.2010 அன்று காலமான செய்தி கேட்டு ஆறாத்துயர் கொள்கின்றோம். அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி

செயலாளரும், உத்தியோகத்தர்களும், ஊழியர்களும்,
பிரதேச சபை, வேலணை. (94222)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்கிரமபாகு வாக்களிப்பதற்கு தேர்தல் ஆணையர் விசேட அனுமதி

கொழும்பு, ஜன. 28

நவ சமசமாஜக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண ஜனாதிபதி தேர்தலில் வாக்களிக்கச் சென்ற போது அவரை அடையாளப்படுத்தக் கூடிய ஆவணங்கள் அவரிடம் இல்லாததால் தேர்தல் ஆணையாளரின் விசேட அனுமதி யைப் பெற்றே அவர் தமது வாக்கை பதிவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது.

கொழும்பு கொம்பனித் தெருவில் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண நேற்றுக் காலை வாக்களிக்கச் சென்றார்.

மாகாணசபை உறுப்பினருக்கான அவரது அடையாள அட்டையை தன்னுடன் கொண்டு சென்றிருந்தார்.

எனினும், அவரது மாகாணசபை உறுப்பினர்களுக்கான அடையாள அட்டை ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கும் ஒருவரை அடையாளப்படுத்தக் கூடிய ஆவணமாக ஏற்றுக்கொள்ளப் படவில்லை.

கலாநிதி விக்கிரமபாகு அவரது தேசிய அடையாள அட்டையை சிலநாள்களுக்கு முன்னர் கவனக்குறைவாக எங்கோ வைத்து விட்டார். அவரது கடவுச்சீட்டையும் வீட்டில் வைத்துச் சென்று விட்டார். மாகாண சபை உறுப்பினருக்கான அடையாள அட்டை இருந்தால் போது மானது என்று அவர் நினைத்திருந்தார்.

எனினும், அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை. எனவே, அவர் தேர்தல் ஆணையாளருடன் தொடர்பு கொண்டு நிலைமையை விளக்கியதை அடுத்து ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்க தேர்தல் ஆணையாளர் அவருக்கு விசேட அனுமதி வழங்கினார். இதனை அடுத்தே கலாநிதி விக்கிரமபாகு ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்தார்.

# அகிலவிராஜ் காரியவசம் எம்.பி. மீது துப்பாக்கிப் பிரயோகம்; மூவர் காயம்

ஐக்கிய தேசியக் கட்சியின் குருணாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அகில விராஜ் காரியவசம் மீது துப்பாக்கிப் பிரயோகம் மீது மேற்கொள்ளப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

குருணாகல் மாநகரசபையின் எதிர்க் கட்சித் தலைவரின் வீட்டில் இருந்த போதே இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சம்பவத்தில் காயமடைந்த மூவர் தற்போது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பான விசாரணைகளை குருணாகல் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.

# வாக்கு எண்ணும் பணியில் ஈடுபட்ட ஒருவர் கைது

அம்பாந்தோட்டை தபால் மூலவாக்குகள் எண்ணும் நடவடிக்கையில் ஈடுபட்ட ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாந்தோட்டை தேசிய பாடசாலையிலேயே அவர்கடமையிலிருந்த சமயம் கைது செய்யப்பட்டார்.

வாக்குகள் எண்ணும் நடவடிக்கைகளில் மாற்றங்களை மேற்கொள்ள முயற்சித்தபோதே அவர் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் கூறினர்.

கைது செய்யப்பட்டவரிடம் அம்பாந்தோட்டை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வாக்களிக்கும் நாளில் சரத் எலத்திரனியல் ஊடகங்களில் பேசி தேர்தல் விதி முறைகளை மீறினாராம்

## அரச தரப்பில் ஆணையாளரிடம் முறைப்பாடு

கொழும்பு, ஜன. 28

ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்கெடுப்புகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே எதிரணியின் ஜனாதிபதி வேட்பாளர் சரத் பொன்சேகா இலத்திரனியல் ஊடகங்களில் தோன்றிப் பேசியதன் மூலம் தேர்தல் விதிமுறைகளை மீறியுள்ளார் என ஐ.ம.சு. முன்னணியின் செயலாளர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக தேர்தல் ஆணையாளரிடம் எழுத்து மூலம் முறைப்பாடு உடனடியாகச் செய்யப்பட்டது என அவர் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகள் அனைத்தும் கடந்த 23 ஆம் திகதி நள்ளிரவுடன் முடிவடைந்துள்ள நிலையில் சரத் பொன்சேகா இலத்திரனியல் ஊடகங்களில் பேசி யுள்ளமை தேர்தல் விதிமுறைகளை பாரிய அளவில் மீறி யுள்ளார் என்றும் அமைச்சர் இங்கு சுட்டிக்காட்டினார்.

கொழும்பிலுள்ள தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த மேலும் கூறியவை வருமாறு-

தமக்குரிய வாக்குரிமை கிடைக்காமையை காரணமாக்கிக் கொண்டு செய்துள்ள தவறு தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டியே தேர்தல் ஆணையாளருக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டது.

சரத் பொன்சேகா மட்டுமல்ல எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் பிரதம நீதியரசர் ஆகியோர் தேர்தல் விதிமுறைகளை மீறி இலத்திரனியல் ஊடகங்களில் பேசியுள்ளனர்.

ஜனாதிபதி தேர்தல் பிரசார நடவடிக்கை முடிவடைந்த குறிப்பிட்ட தினம் நள்ளிரவிலிருந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி எதுவித பிரசார நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை.

இலங்கையின் வரலாற்றில் ஐந்து நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிகள் இருந்த போதிலும் வரலாற்றில் முதல் தடவையாக இதுபோன்ற சம்பவத்திற்கு முகம் கொடுக்க நேரிட்டுள்ளதுடன், எதிரணியின் நாட்டு மக்களை ஏமாற்றியுள்ளனர்.

## வவுனியா வளாக ஆங்கில மொழி கற்கை நெறிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஜன. 28

யாழப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தினால் நடத்தப்படவுள்ள சுயநிதித் திட்ட அடிப்படையிலான டிப்ளோமா ஆங்கில மொழி (விரிவாக்கல்) கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தராதரப் பத்திரம் பாடநெறியைத் தெரிவு செய்பவர்கள் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆங்கிலம் உட்பட 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் டிப்ளோமா கற்கை நெறியை மேற்கொள்ள விரும்புபவர்கள் யாதாயினும் உயர்கல்வி நிறுவனத்தால் நடத்தப்பட்ட ஓராண்டு ஆங்கில தராதரப் பரீட்சையில் சித்தி பெற்றிருப்பதுடன் வவுனியா வளாகத்தால் நடத்தப்பட்ட தெரிவுப் பரீட்சையிலும் தோற்ற வேண்டும்.

விண்ணப்பங்களை ' சிரேஷ்ட உதவி நிதியாளர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாகம்' எனும் பெயருக்கு எடுக்கப்பட்ட 100 ரூபா பெறுமதியான (வவுனியா அஞ்சல் அலுவலகத்தில் மாற்றக் கூடியது) காசுக் கட்டளையினை சுயமுகவரியுடன் 30 ரூபா முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையுடன் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (6)

# மகஜன சம்பத சீட்டிழுப்பு முடிவுகள்

தேசிய லொத்தர் சபையின் 2201ஆம் இலக்க நேற்று முன்தினம் நடந்த சீட்டிழுப்பில் 'B' என்ற ஆங்கில எழுத்தும் 9/0/7/5/7/2 ஆகிய இலக்கங்களும் அதிர்ஷ்டத்துக்குரியனவாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இதன் பிரகாரம் சுப்பர் பரிசும் முதலாம் பரிசான 20 இலட்சம் ரூபாவும் வெல்லப்படவில்லை.

0/7/5/7/2 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 7 பேருக்கு இரண்டாவது பரிசாகத் தலா ஒரு இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

7/5/7/2 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 73 பேருக்கு மூன்றாம் பரிசாகத் தலா 10 ஆயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

5/7/2 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 754பேருக்கு நான்கரம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

7/2 என்ற இலக்கங்களைச் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 7,620பேருக்கு ஐந்தாம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

2 என்ற இலக்கத்தை மட்டும் கொண்ட 74,574 பேருக்கு ஆறாம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது.

இடமிருந்து வலமாக வடிவமைப்பில் 9/0/7/5/7 என்ற இலக்கங்களைச் சரியாகக் கொண்ட 9பேருக்கு ஏழாம் பரிசாக தலா 10ஆயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

9/0/7/5 என்ற இலக்கங்களைச் சரியாகக் கொண்ட 74பேருக்கு எட்டாம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

9/0/7 என்ற இலக்கங்களைச் சரியாகக் கொண்ட 738பேருக்கு ஒன்பதாம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

9/0 என்ற இலக்கங்களைச் சரியாகக் கொண்ட 7,461 பேருக்கு பத்தாம் பரிசாகத் தலா ஐம்பது ரூபா கிடைக்கவுள்ளது.

'B' என்ற ஆங்கில எழுத்தை மட்டும் சரியாகக் கொண்ட 29,928 பேருக்கு பதினோராம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது. (6)

# முன்னாள் போராளிகளும் இத்தேர்தலில் வாக்களிப்பு

கொழும்பு, ஜன. 28

புனர்வாழ்வு அளிக்கப்பட்டு வரும் முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்கள் இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்துள்ளனர். புனர்வாழ்வு அளிக்கப்பட்டு வரும் 13 வாக்களிப்பு மையங்களில் வாக்களிப்பினை மேற் கொள்ள சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

அரச புனர்வாழ்வு மையங்களில் உள்ள 3494 முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்கள் இம்முறை தேர்தலில் வாக்களித்துள்ளனர்.

முதல் தடவையாக புனர்வாழ்வு அளிக்கப்பட்டு வரும் விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு வாக்களிப் பில் கலந்து கொள்ள சந்தர்ப்பம் ஏற் படுத்திக் கொடுக்கப்பட்டது என அரச தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

# அரசு மேற்கொண்ட அபிவிருத்திக்கு மலையக மக்கள் நன்றி கூறியுள்ளனர்

## இ.தொ.கா. தலைவர் முத்துசிவலிங்கம் கூறுகிறார்

இரத்தினபுரி, ஜன. 28

மலையகத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இலங்கை தொழிலாளர் காங்கிரஸினூடாக மேற்கொண்ட அபிவிருத்திப் பணிகளுக்கு நன்றி செலுத்தும் முகமாக, மலையக மக்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு வாக்களித்துள்ளனர். இது குறித்து பெருமைப்படும் இ.தொ.கா. மலையக வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கின்றது என இ.தொ.கா. தலைவரும், பிரதியமைச்சருமான முத்துசிவலிங்கம் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் குறித்து கருத்து தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

2005 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் இ.தொ.கா. எதிரணிக்கு ஆதரவு தெரிவித்த போது, எதிரணி வேட்பாளரான ரணில் விக்கிரமசிங்க நுவரெலியா மாவட்டத்தில் கூடுதல் வாக்குகளைப் பெற்றிருந்தார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவோ மிகக்குறைந்த எண்ணிக்கையான வாக்குகளையே பெற்றிருந்தார்.

இம்முறை அவர் நுவரெலியா மாவட்டத்தில் சுமார் ஒரு லட்சத்து 49 ஆயிரம் வாக்குகளைப் பெற்றுள்ளார். இது இ.தொ.காவைப் பொறுத்தவரை மாபெரும் வெற்றியாகக் கருதப்படுகின்றது.

கடந்த 4 வருடங்களில் மலையகத்தில் பாரிய அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. பல்லாயிரக்கணக்கான தோட்ட வீதிகள் செப்பனிடப்பட்டதுடன், மலையக ஆசிரியர் நியமனம், தபால் ஊழியர் நியமனங்கள் வழங்கப்பட்டு, பல வீடமைப்புத் திட்டங்களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இதற்கு நன்றி செலுத்தும் முகமாகவே மலையக மக்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு வாக்களித்துள்ளனர்.

மலையகத்தில் மேலும் அபிவிருத்திப் பணிகளை எம்மால் மேற்கொள்ள இந்த வாக்கு எண்ணிக்கை பேருதவியாக இருக்கும். மலையக மக்கள் தொடர்ந்தும் எமக்கு ஆதரவு வழங்குவார்கள் என நம்புகிறேன். இதன்போது எம் சமூகத்தை மேலும் மேம்படுத்தும் அபிவிருத்தித் திட்டங்களை முன்வைக்க ஏதுவாக இருக்கும்.

மலையக மக்கள் வீணான வதந்திகளையும், போலி வாக்குறுதிகளையும் நம்பி ஏமாற வேண்டாமென இச்சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இ.தொ.கா.பொதுச்செயலாளர் ஆறுமுகன் தொண்டமானின் துணிச்சல்மிக்க தீர்மானங்கள் காரணமாகத்தான் மலையகம் பாரிய அபிவிருத்தியைக் கண்டு வருகின்றது.

நுவரெலியா மாவட்டத்தில் மட்டுமல்லாது மலையகத்தின் இதர பகுதிகளிலும் இ.தொ.கா. பல அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளும் என்றார்.

# கண்டியில் இரு வாக்குப் பெட்டிகள் வேறுப்படுத்தப்பட்டதாக ஐ.தே.க. சந்தேகம் தெரிவிப்பு

கண்டி சில்வஸ்டர் வித்தியாலயத்திலுள்ள வாக்கு எண்ணும் மையத்திற்குள் தமது பிரதிநிதிகளை நேற்றுமுன்தினம் மாலை 5 மணி முதல் 7 மணிவரை அனுமதிக்கவில்லை எனவும் இரண்டு வாக்குப் பெட்டிகள் தனிமைப்படுத்தப்பட்டிருந்தன எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க தேர்தல் ஆணையாளரிடம் தனது எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

தேர்தல் ஆணையாளரின் உத்தரவுகளை மீறி வாக்குப் பெட்டிகள் வேறுபடுத்தப்பட்டிருந்தமை பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியிருந்தது எனவும் அவர் கூறியுள்ளார்.

வாக்குப் பெட்டிகள் விநியோகிக்கப்பட்ட பின்னரே தமது பிரதிநிதிகளுக்கு வாக்கு எண்ணும் மையங்களுக்குச் செல்ல அனுமதி வழங்கப்பட்டது எனவும் திஸ்ஸ அத்தநாயக்க தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# நேற்று அமைதியானது கிழக்கு!

கொழும்பு, ஜன. 28

ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்று தேர்தல் முடிவுகள் நேற்று அறிவிக்கப்பட்டுக் கொண்டிருந்த வேளை கிழக்கு மிகவும் அமைதியான முறையில் காட்சியளித்தது என அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

திருமலை, மூதூர், மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் நேற்று பொது விடுமுறைதினம் என்பதால் வர்த்தக நிலையங்கள் யாவும் மூடப்பட்டிருந்தன, போக்குவரத்துகளும் அதிகளவில் இடம்பெறவில்லை. அங்காங்கே முடிவுகள் அறிவிக்கப்பட்ட வேளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்கள் பட்டாசு கொளுத்தி தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

வன்முறைச் சம்பவங்கள் எதுவும் நடைபெறலாம் என்ற அச்சம் நிலவிய சூழலிலும் கிழக்கு அமைதியாக காணப்பட்டது. மக்கள் வீடுகளுக்குள்ளேயே அடங்கியிருந்தனர். வீதிகளில் ஆள் நடமாட்டம் நண்பகலுக்குப் பின்னர் இருக்கவே இல்லை என அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலரி மாளிகைக்கு அருகில் ஹோட்டலில் படைச் சுற்றிவளைப்பில் பொன்சேகா!

## வெளியே வந்தால் கைது செய்யப்படுவார் என அச்சம்

கொழும்பு, ஜன. 28

நேற்று முன்தினம் முன்னிரவு ஜனாதிபதித் தேர்தல் வாக்குகள் எண்ணிக்கை ஆரம்பமாகும் சமயம் ஏனைய எதிரணிப் பிரமுகர்கள் சகிதம் கொழும்பு அலரி மாளிகைக்குப் பக்கத்திலுள்ள சினமன் லேக் ஹோட்டலுக்குள் சென்று எதிரணிப் பொதுவேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகா தங்கியமையை அடுத்து அந்த ஹோட்டல் இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டது. ஹோட்டலுக்குள் தங்கியிருந்த எதிரணிப் பொது வேட்பாளர் பொன்சேகா, இராணுவத்தின் சுற்றிவளைப்புக் காவலுக்குள் சிக்கியுள்ளார் என்ற செய்தி பரவியமையையடுத்து இந்த விவகாரம் பெரிய சர்ச்சையை உருவாக்கியது.

ஹோட்டலுக்குள் இருந்தவாறு தனது பாதுகாப்பை உறுதிப்படுத்தும்படி தேர்தல்கள் ஆணையாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பிய ஜெனரல் பொன்சேகா, தமது பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கும்படி தேர்தல்கள் ஆணையாளரை அக்கடிதம் மூலம் கோரினார்.

கொழும்பின் ஐந்து நட்சத்திரக் ஹோட்டலுக்குள் தனது பாதுகாவலர்கள் சகிதம் சிக்கியிருந்த ஜெனரல் பொன்சேகா வெளியே வந்தால் கைது செய்யப்படுவார் என்ற தகவல் பரவியதால் இந்த விவகாரம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

பொன்சேகாவின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி வெளிநாட்டுத் தூதரகங்களுக்கும் வேண்டுகோள்கள் விடுக்கும் அளவுக்கு விவ்காரம் பெரும் சூடு பிடித்திருந்தது.

வெளிநாட்டு செய்தி ஏஜென்சிகள் இந்தப் விவகாரத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து சூடான செய்தியை நொடிக்கு ஒரு தரம் வெளியிட்ட வண்ணம் இருந்தன.

இதற்கிடையில், நேற்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்திற்குத் தாம் அனுப்பிய கடிதத்தில் -

தனது அலுவலகத்தைச் சுற்றிவளைத்துத் தன்னைக் கைது செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டமையைத் தொடர்ந்தே தான் குறிப்பிட்ட நட்சத்திர ஹோட்டலுக்கு வந்து சேர்ந்தார் எனப் பொன்சேகா குறிப்பிட்டுள்ளார்.

மேலும், தனது மெய்ப்பாதுகாவலரில் பத்துப்பேரை இராணுவப் பொலிஸார் கைது செய்தனர் என்றும் பொன்சேகா குறிப்பிட்டுள்ளார்.

சரத் பொன்சேகா தங்கியுள்ள ஹோட்டலை இராணுவம் சுற்றிவளைத்துள்ளதால் அவரது நடமாட்ட சுதந்திரம் பாதிக்கப்பட்டுள்ளதென எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பிட்ட ஹோட்டலை நூற்றுக்கும் மேற்பட்ட படையினர் சுற்றிவளைதுள்ளதுடன், பஸ்களைப் பயன் படுத்தி வீதித் தடைகளையும் ஏற்படுத்தியிருந்தனர்.

அசாதாரணமான சூழ்நிலை காணப்படுகின்றது எனத் தெரிவித்துள்ள எதிர்க்கட்சித் தலைவர்கள் இது தொடர்பாக அரசுக்கு கடிதமொன்றையும் அவசர அவசரமாக அனுப்பி வைத்தனர்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவர் மனோ கணேசன், ஜே.வி.பி. பிரமுகர் விஜித ஹேரத் போன்றோர் ஹோட்டலுக்குள் சென்று பொன்சேகாவுடன் தங்கியிருந்தனர்.

ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் ஒருவர் இவ்வாறு சிறைவைக்கப்பட்டு அவரது நடமாட்ட சுதந்திரம் மட்டுப்படுத்தப்படுவது உலகில் எங்கும் காணமுடியாத விடயம் என்றும் எதிர்க்கட்சிகள் சுட்டிக்காட்டியுள்ளன.

எனினும், இராணுவப் பேச்சாளர் , பாதுகாப்பு நடவடிக்கையாகவே இதனை மேற்கொண்டுள்ளோம் எனக் குறிப்பிட்டுள்ளார். இதற்கிடையில் -

''சினமன் லேக் ஹோட்டலில் இராணுவத்திலிருந்து தப்பியோடிய நானூறு பேரும், முன்னாள் இராணுவத்தினரும் தங்கியுள்ளனர். அவர்கள் உடனடியாகச் சரணடையவேண்டும்.'' என்று இராணுவப் பேச்சாளர் உதயநாணயக்கார தெரிவித்தார்.

(அ-சி)

# பொன்சேகா தடுத்து வைக்கப்பட்டுள்ளாரா? இல்லை என்று மறுக்கிறது அரச தரப்பு

## அவருடன் இருந்த 9 பேர் நேற்றுக் கைது!

கொழும்பு, ஜன.27

ஜனாதிபதித் தேர்தலில் எதிரணி சார்பில் போட்டியிட்ட ஜெனரல் சரத் பொன்சேகா தடுப்புக்காவலில் வைக்கப்படவில்லை. அவர் சுதந்திரமாக நடமாட முடியும் என்று அரசாங்கத் தரப்பில் நேற்று அறிவிக்கப்பட்டது. மகாவலி நிலையத்தில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் வைத்து இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டது.

அமைச்சர்களான மஹிந்த சமரசிங்க, சுசில் பிரேமஜயந்த, சம்பிக்க ரணவக்க, மைத்திரிபாலசிறிசேன மற்றும் விமல் வீரவன்ஸ ஆகியோர் கூட்டாக இந்தச் செய்தியாளர் மாநாட்டை நடத்தினர். அங்கு தெரிவிக்கப்பட்டவை வருமாறு:

அதிஉயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் அமைந்துள்ள 'சினமன் லேக் சைட்' என்ற ஹோட்டலில் இரண்டாவது மாடியில் சரத் பொன்சேகா தங்கியுள்ளார்.

அந்தக் ஹோட்டலின் சுற்றுப்புறத்தில் படையினர் நிறுத்தப்பட்டுள்ளனர். அவர் தங்கியுள்ள பிரதேசத்திற்கு படையினர் செல்லவில்லை.

அவருடன் தங்கியிருந்த படையில் இருந்து தப்பியோடிய 9 பேர் நேற்று நண்பகல் 12 மணிக்கு கைதுசெய்யப் பட்டுள்ளனர். படையினர் ஹோட்டலுக்குள் செல்லாது வெளியில் இருந்து குறிப்பிட்ட நபர்களின் பெயர்களை அழைத்தே கைதுசெய்தனர்.

சரத்பொன்சேகா சுதந்திரமாக நடமாட முடியும் - அவர் எந்த நேரத்திலும் தடுத்து வைக்கப்படவில்லை. அவரைக் கைது செய்யப்பட்டார் எனவோ, தடுத்து வைக்கப்பட்டார் எனவோ வெளியான தகவல்கள் தவறானவை; ஆதாரமற்றவை - என்று செய்தியாளர் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது. (அ-சி)

## பொன்சேகா ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரணுவத்தினரின் முற்றுகைக்குள் சிக்குண்டுள்ள ஜெனரல் சரத் பொன்சேகா அங்கு செய்தியாளர்களை சந்தித்த வேளை இதனைத் தெரிவித்தார்.

தேர்தல் பிரச்சார காலத்தில் மக்கள் காட்டிய உற்சாகம் இறுதி முடிவில் தென்படவில்லை என சுட்டிக்காட்டியுள்ள சரத் பொன்சேகா 'இந்த முடிவை நாங்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. இதற்கு எதிராக நீதி மன்றில் மனுதாக்கல் செய்யப் போகிறோம்' என்று குறிப்பிட்டார்.

மேலும் தாம் தங்கியுள்ள ஹோட்டலிற்கு வெளியே உருவாகியுள்ள அசாதாரண நிலை குறித்து கொழும்பிலுள்ள வெளிநாட்டு தூதரங்களுக்குத் தெரியப்படுத்தியுள்ளார் எனவும் பொன்சேகா குறிப்பிட்டுள்ளார். (அ-சி)

## மஹிந்த் வெற்றி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வுக்கு ஒப்பீட்டளவில் குறைவாகவே கிடைத்துள்ளது. வடக்கு கிழக்கில் அவருக்கு 3 லட்சத்து 45 ஆயிரத்து 41 வாக்குகள் மட்டுமே கிடைத்தன.

தமிழ்பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களான வடக்கு, கிழக்கு, மலையகம் மற்றும் தென்னிலங்கையின் கொழும்பு போன்ற இடங்களில் ஜெனரல் பொன்சேகா ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை விட மிக அதிகமாக வாக்குகளையும் பெற்றனர். அவருக்கு மொத்தம் 5 லட்சத்து 73 ஆயிரத்து 67 வாக்குகள் கிடைத்தன.

வடக்கு, கிழக்குத் தமிழர்கள், முஸ்லிம்கள், மலையகத் தமிழர்கள் போன்ற சிறுபான்மையினத்தவர்கள் அனைவருமே ஒன்றுதிரண்டு, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அவர் தொடர்ந்தும் ஆட்சியில் நீடிப்பதற்கான ஆணையை வழங்க மறுத்துவிட்டனர் என்பதனை வாக்களிப்பு வீதங்கள் எடுத்தியம்புகின் றன.

வடக்கில் யாழ். தேர்தல் மாவட்டம், வன்னி தேர்தல் மாவட்டம், கிழக்கில் திருகோணமலை, மட்டக்க்ளப்பு, திகாமடுல்ல தேர்தல் மாவட்டங்கள், மலையகத்தில் நுவரெலியா மாவட்டம் போன்றவற்றில் ஓரிரு தொகுதியைத் தவிர ஏனையவற்றில் ஒட்டுமொத்தமாக எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் வெற்றியீட்டியமை, சிறுபான்மை இனத்தவர்கள் ஒட்டுமொத்தமாக ஜனா திபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையை ஏற்க மறுத்துவிட்டனர் என்பதையே வெளிப்படுத்தியுள்ளதென அவதானிகள் சுட்டிக் காட்டினர்.

அதேசமயம் கடந்த ஜனாதிபதித் தேர்தலில்-2005 நவம்பரில் - சுமார் 48 லட்சத்து 87ஆயிரம் வாக்குகளை சுவீகரித்த ஜனாதிபதி, மஹிந்த ராஜபக்ஷ இத்தேர்தலில் மேலும் பதின்மூன்று லட்சம் வாக்குகளை அதிகமாகப் பெற்றிருக்கின்றமை தென்னிலங்கைச் சிங்கள மக்கள் மத்தியில் ஏகோபித்த தலைவராக மேலும் அவர் உயர்ந்திருக்கின்றமையைக் காட்டுவதாகவும் எடுத்துக்கூறப்பட்டது. (அ-சி)


பாக்யா இசைப்பயிலகம்
மணியர்பதி வீதி கொக்குவில் மேற்கு
தைப்பூசத் தினத்தன்று
இசை, இசைவாத்திய வகுப்புக்கள் ஆரம்பம்
நேரம்: மாலை 4.00 மணி

| மிருதங்கம் | சங்கீதம் | ஓகன் | வயலின் |
|---|---|---|---|
| சனி: 3.00 மணி | செவ்வாய்: 3.00 மணி | செவ்வாய்: 4.00 மணி | புதன்: 4.00 மணி |
| ஞாயிறு: 3.00 மணி | வியாழன்: 3.00 மணி | சனி: 4.00 மணி | ஞாயிறு: 4.00 மணி |

பாக்யா காகிதாதிகள்
121, கே.கே.எஸ் வீதி, கொக்குவில்
தொலைபேசி 060 221 8382

MUSIC WORLD & COMPUTERS
LEADING IT SUPER MARKET IN JAFFNA
Buy A PC & Get More Free
கணினி ஒன்றை வாங்குவதன் மூலம் ஏனையவற்றை இலவசமாக வீட்டுக்கு எடுத்துச் செல்லுங்கள்.....

BUY Only for Rs. 42,500.00 — Intel 1.6 Ghz ATOM Processor, ATOM Mother Board, RAM 1 Gb DDR II 800, Hard Disk 160 Gb SATA, DVD Writer SATA, ATX Casing, 16" LCD Monitor, Keyboard & Optical Mouse, UPS 650 W — GET FREE for Rs, 6,000.00: Computer Table, Web Camera, Head phone with Mic, Card Reader and Bluetooth Dongle

BUY Only for Rs. 48,500.00 — Intel 2.60 Dual Core Processor, E Sonic G31 Mother Board, RAM 1 Gb DDR II 800, Hard Disk 160 Gb SATA, DVD Writer SATA, ATX Casing, 16" LCD Monitor, MM Keyboard & Optical Mouse, Multi Media Speaker, UPS 650 W — GET FREE for Rs, 6,000.00: Computer Table, Web Camera, Head phone with Mic, Card Reader and Bluetooth Dongle

BUY Only for Rs. 55,500.00 — Intel 2.60 Dual Core Processor, Foxconn G31 Mother Board, RAM 1 Gb DDR II 800, Hard Disk 250 Gb SATA, DVD Writer SATA, ATX Casing, 19" LCD Viewsonic Monitor, Multi Media Keyboard, Optical Mouse, Multi Media Speaker, UPS 650 W — GET FREE for Rs, 6,000.00: Computer Table, Web Camera, Head phone with Mic, Card Reader and Bluetooth Dongle

BUY Only for Rs. 58,500.00 — Intel 2.60 Dual Core Processor, Asus G31 Mother Board, RAM 2 Gb DDR II 800, Hard Disk 320 Gb SATA, DVD Writer SATA, ATX Casing, 19" Viewsonic LCD Monitor, Multi Media Keyboard, Optical Mouse, Multi Media Speaker, UPS 650 W — GET FREE for Rs, 6,000.00: Computer Table, Web Camera, Head phone with Mic, Card Reader and Bluetooth Dongle

Warranty : One year to Three years
*இச் சலுகை கையிருப்பு உள்ளவரை மட்டுமே !
Hp Compaq C 610 LAPTOPS Rs. 77,500/= Only
VISA — Credit Cards & Debit Cards are acceptable
MUSIC WORLD & COMPUTERS
141B, Palaly Road, Post Box Junction, Thirunelvely, Jaffna.
musicworld@sltnet.lk / musiccom27@yahoo.com - 021 222 6554
ASTA Advts' ***0718561250***

தங்குமிட வசதி
சகல வசதிகளுடன்கூடிய தங்குமிட வசதிகள் செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு :
0776393465, 0773926736

வெற்றித் தேர்வு வந்துவிட்டது
2010 தரம் 4, தரம் 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சையில் சாதனை படைத்து வரும் இலங்கையின் முதற்தர வினாப்பத்திரம் வெற்றித்தேர்வு யாழ்ப்பாண்ம் வந்துவிட்டது.
தேவையான பாடசாலைகள் உடன் தொடர்புகொள்க. ஏற்கனவே வினாப்பத்திரம் பெற்ற பாடசாலைகளும் உறுதிப்படுத்துக.
(இவ் வருடம் விசேட கழிவு உண்டு)
தொடர்புகளுக்கு:-0212229016,0773126807, 0775388471
இம்முறை வெற்றித் தேர்வு கடைகளில் விற்பனைக்கு வராது, என்பதனை கவனத்தில் கொள்க.

வெற்றித் தேர்வு மாவட்ட மட்டப்பரீட்சை
நல்லூர் சயன்ஸ் அக்கடமி
2010 தரம் 5 பாடசாலை வினாப்பத்திரங்கள் 20 உள்ளடங்கலாக விசேட வினாப்பத்திரங்கள் 15 உடன் மொத்தம் 35 மாதிரிப் பரீட்சைகள் மேலதிகமாக 20 பயிற்சி வினாப்பத்திரங்கள்.
2010 தரம் 4 பாடசாலை வினாப்பத்திரங்கள் 15 உள்ளடங்கலாக விசேட வினாப்பத்திரங்கள் 10 உடன் மொத்தம் 25 மாதிரிப் பரீட்சைகள் மேலதிகமாக 10 பயிற்சி வினாப்பத்திரங்கள்.
பிரதி ஞாயிறு தோறும் பொது விடுமுறை நாள்களிலும் பரீட்சைகள் நடைபெறும். விரும்பிய நேரத்தில் பரீட்சைக்குத் தோற்றமுடியும்.
புள்ளிகளும், நிலைகளும் அறிந்து கொள்ளலாம் மாணவர்கள் உடன் பதிவு செய்யவும்.
தொடர்புகளுக்கு:- 0212229016, 0775388471, 0773126807

GATEWAY LANGUAGE & ICT CENTRE JAFFNA
347, Kasthuriyar Road, Jaffna.
NOTICE
Dear students,
John Keels Holding 'English for life' Scholarship Programme.
"Course End Examination"
Will be held on 30th January, 2010 at 03.00pm
Index No : 001-068
Manager
Gateway Language & ICT Centre Jaffna
T.P: 021 5675555




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.01.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org